

# அகழி

# 2019

கலாசாரப் பேரவை,

மண்முனை மேற்கு பிரதேச செயலகம்,

வவுணதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகணி

## 2019

### கலாசார விழா இலக்கிய விழா சிறப்பு மலர்

வெளியீடு- 06
கலாசாரப்பேரவை, மற்றும் அதிகாரசபை
மண்முனை மேற்கு
வவுணதீவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்முனை மேற்கு
## பிரதேச செயலக கலாசாரப் பேரவை
## மற்றும் அதிகார சபை

**நூல் விபரம்**


**நூலின் வகை** – மண்முனை மேற்கு கலைஞர்களின் ஆக்கங்கள்

**விபரத்திட்டம்** – நூலாக்கக்குழு

**பதிப்பு** – பதிப்பு

**பதிப்புரிமை** – மண்முனை மேற்கு கலாசாரப் பேரவை, மற்றும் அதிகார சபை, பிரதேசசெயலகம்,வவுணதீவு.

**அளவு** – வீ5

**பக்கம்** – 80

**பிரதிகள்** – 100

**வெளியீடு** – மண்முனை மேற்கு பிரதேசசெயலகம் கலாசாரப்பேரவை, மற்றும் அதிகாரசபை

**தட்டச்சு** – த.வேல்க்குமாரன் (அபிவிருத்தி உத்தியோகத்தர்)

**கணினி அட்டை வடிவமைப்பு அச்சுப்பதிப்பு** – லக்சுமி டிஜிற்றல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

கலாசார விழாவினை நடாத்துவதாக அறிகிறோம். அக் கலாசார விழாவினை முன்னிட்டு "அகணி" நூல் வெளியிடப்படுகிறது. இச் சிறப்பு நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சி. "அறிவுகோல் ஆழம் மட்டுமே. சுற்று சுரண்டினாலே போதும் காட்டுமிரண்டித் தனமான மனிதன் வெளிப்படுவான். கலாசார மேமனிதனை பண்புள்ளவனாக மலரச்செய்கின்றது" ஏட்டறிவு அல்ல! என்று கூறுகின்றார் சுவாமி விவேகானந்தர். சுவாமி விவேகானந்தரின் இந்த அறிவுரைகளை சிரம் மேற்கொண்டு நமது பிரதேச இளைஞர்களிடம் வாழ்வியல் பற்றிய விழிப்புணர்வையும், பிரதேசம் குறித்தபற்றையும், சமூகம் குறித்த அக்கறையையும் ஏற்படுத்துவதற்கு முழுஅர்பணிப்புடன் செயற்படுவோம். இந்நூல் வெளியீடானது இனிதே நடைபெற பிரதேச செயலாளர் மற்றும்கலாசாரப்பேரவை அனைவருக்கும் இறைவன் அருள்புரிய வேண்டுமென தெய்வத் திருமூவரின் நல்லாசிகளை வேண்டிக் கொள்கின்றேன்.

நன்றி

என்றும் மனிதசேவையில்,
சுவாமி தக்க்ஷஜானந்தர்
(பொதுமுகாமையாளர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செயலகத்தினால் நடத்தப்படுகின்ற கலாசார விழாவினை முன்னிட்டு வெளியிடப்படவிருக்கின்ற "அகணி" நூலிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கலாசாரம் என்பது எம்மவர்களின் தனித்துவமான மிடுக்காகும். "அகணி" என்ற இந்த மலரானது வவுணதீவு பிரதேசத்திற்குரிய பாரம்பரியம் நிறைந்த வாழ்வியலை பிரதிபலிக்கின்றது. கலை, கலாசாரம் என்பது பண்பாடும், பழக்கவழக்கமுமாகும். இவையே ஒரு சமூகத்தை மற்றைய சமூகத்திலிருந்து அழகுபடுத்திக் காட்டுகின்றது.

சிறப்பான விளைச்சலைக் கொண்டமையும் வயல் நிலம், பயிர் நிலம் செழுமைமாறாத மண்வாசம் என்பன ஒருங்கே அமையப் பெற்ற இச் சமூக சூழல் பல்கலைஞர்களை உருவாக்குகின்றது என்றால் அதுமிகையாகாது. இப் பிரதேச கலைஞர்கள் பெரும்பாலும் இலக்கியம், நாட்டியம், கூத்து, எழுத்தாக்கம், நாடகம், இசை, சோதிடம், மருத்துவம், விளையாட்டு, கிராமிய வீரவிளையாட்டு, சித்தவைத்தியம், சிற்பம், சித்திரம், கட்டடம் மற்றும் ஊடகம் போன்ற பல்வேறு துறைகளில் கலாரசனையும், ஈடுபாடுள்ளவர்களாகவும் மிளிர்கின்றமை கண்கூடு. இந்நூல் இப்பிரதேசத்தில் வாழுகின்ற சுமார் இருநூற்றுக்கும் மேற்பட்ட கலைஞர்களிடமிருந்து பல்துறைசார் கலையம்சங்களை தாங்கியபடைப்புக்கள் வெளிவருவதோடு மட்டுமல்லாமல் உள்ளூர் கலைஞர்களை கௌரவிக்கும் வகையில் அமைகின்றமையும் சிறப்பு. எனவே இந்நூலில் வெளியீட்டுக்கு ஊக்கமளித்த பிரதேச செயலாளர் உள்ளிட்ட மலர் வெளியீட்டுக்குழுவினர் மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது மனம் நிறைந்த வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நன்றி

மா.உதயகுமார்
அரசாங்க அதிபரும்,
மாவட்டசெயலாளர்
மட்டக்களப்பு மாவட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

மண்முனை மேற்கு பிரதேச கலாசாரப் பேரவையினால் வெளியிடப்படும் அகணி மலர் இவ் வருடம் வெளிவருவதையிட்டு பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு பிரதேசத்தின் பண்பாடு பற்றிய பார்வையினை வெளிப்படுத்தும் ஒரு அடையாளமாக இந் நூல் வெளியிடுவதையிட்டு பெருமை கொள்கின்றேன் இப் பிரதேசத்தினுடைய பண்பாட்டு, விழுமியங்கள் என்று கூறப்படுகின்ற இப்பிரதேச மக்களுடைய வாழ்வியலுடன் தொடர்புடைய ஆவணங்கள், சமய அனுட்டானங்கள், வாழ்வியல் சடங்குகள், கலையாக்கமுயற்ச்சிகள் என்பன பற்றி இந் நூல் சுமந்து வர இருக்கின்றது.

நீண்ட கால வரலாற்றினை கொண்ட மண்முனை மேற்குப்பிரதேச செயலகப் பிரிவானது பல்வேறுபட்ட சிந்தனையுடைய கலைஞர்களை கொண்ட ஒரு பிரதேசமாக காணப்படுகின்றது. இங்கு வாழ்மக்களின் கலையாக்க முயற்சிகளின் பிரதானமாக வடமோடி, தென்மோடி கூத்துக்கள் சிறப்பு பெறுகின்றது அத்துடன் கரகாட்டம், காவடி, கும்மி, கோலாட்டம் என்பன சிறப்பு பெறுகின்ற கலைகளாக கொள்ளப்படுகின்றது.

இப் பிரதேச மக்களுடைய வாழ்வாதாரமாக விவசாயம் மற்றும் மீன்பிடி, மந்தை வளர்ப்பு, மேட்டுப் பயிர்ச்செய்கை, தேன் எடுத்தல், விறகுத்தொழில் போன்றவற்றின் மூலம் தங்களது வாழ்வாதாரத்தினை ஈட்டி ஜீவனோபாயம் நடத்துகின்றனர் எனவே இவ்வாறான சிறப்புக்களை தாங்கி வருகின்ற அகணி மலர் வெளிவருவதற்கு துணை நிற்கின்ற கலாசாரபேரவை உறுப்பினர்கள் மற்றும் அதுசார்ந்த ஊழியர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

சி.சுதாகர்
பிரதேச செயலாளர்
பிரதேசசெயலகம்
வவுணதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

மண்முனை மேற்குப் பிரதேச செயலக கலாசாரப் பேரவை இவ்வருடம் வெளியிடுகின்ற அகணி மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். வருடா வருடம் வெளியிடப்படுகின்ற இவ் அகணி மலரானது பல்வேறு வகையான ஆக்கங்களை வெளிக்கொண்டுவருகின்றது. அந்த வகையில் இவ் வருடமும் அகணி மலரானது பிரதேசத்தில் முன்னின்று உழைத்து கலை வளர்த்த முதிய கலைஞர்கள், இளம் கலைஞர்கள் போன்றோரையும் மற்றும் இப்பிரதேச கலைஞர்களுடைய ஆக்கங்களான கட்டுரை, கவிதை, சிறுகதை போன்றவற்றினையும் தாங்கி வெளிவருவதை இட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு சமுகத்தினுடைய இருப்பினை தக்க வைத்துக் கொள்வது அப் பிரதேசத்தினுடைய கலை, கலாசாரங்களே ஆகும். ஓயாது உழைத்து, சேற்றில் கால் பதித்து எம்மை சோற்றில் கை பதிப்பதற்கு வழிவகுக்கும் உழவர்களின் பண்பாடுசார் விடயங்களை தாங்கி வருவதை இட்டு மிகவும் புளகாங்கிதம் அடைகின்றேன்.

கலை, கலாசாரம் மருவிக் கொண்டுவரும் இக்காலத்திலே எமது தமிழர்களின் பாரம்பரியங்களையும், கலை, கலாசாரங்களையும் கட்டிக்காத்து கலாசார மரபினை பாதுகாத்துக் கொண்டுவரும் இப்பிரதேச மக்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

கலையும் இலக்கியமும், நாட்டுக்கு நாடு, பிரதேசத்திற்கு பிரதேசம், சமூகத்திற்கு சமூகம்வேறுபட்டு காணப்படுவதுடன் ஒரு சமூகத்தினுடைய இருப்புக்கு அடுத்த சமூகத்தினுடைய பாரம்பரியக்கலை, இலக்கியம் என்பன முக்கியமாக கொள்ளப்படுகின்றது. இவற்றினை எமது இளம் கலைஞர்களுக்கு பாதுகாத்துக் கொடுப்பதில் இப் பிரதேசத்தில் கொண்டாடப்படுகின்ற இலக்கிய விழா பறைசாற்றி நிற்பதில் வியப்பு இல்லை.

எனவே இம் மலர் இடையறாது ஒவ்வொரு ஆண்டும் வெளிவரவும் இவ்வருடம் நடை பெறும் இலக்கிய விழா சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல இறைவனை ஆசிவேண்டி வாழ்த்துகின்றேன்.

திருமதி. சு. சதாகரன்
உதவிப் பிரதேசசெயலாளர்
பிரதேசசெயலகம்
வவுணதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேச செயலக கலாசார பேரவையினால் நடாத்தப்படுகின்ற பிரதேச இலக்கிய விழா மற்றும் விழா ஞாபகார்த்தமாக வெளியிடப்படும் "அகணி" சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

பார்க்குமிடமெல்லாம் வயல் சூழ்ந்து பச்சைப் பசேலென காட்சி தரும் மருத நிலம், சுற்றி வரும் மட்டுநகரின் அழகிய வாவி என இயற்கை எழில் சூழ்ந்த வளம் மிக்க அமைவிடத்தையும், கடின உழைப்புக்கு பெயர் பெற்ற மனித வளத்தையும், தனித்துவமான பண்பாட்டு அம்சங்களையும் மூத்த பரம்பரை வழிவந்த வடமோடி, தென்மோடி கூத்துக்களை அதன் தொடர்ச்சியறாமல் இன்றுவரை ஆடிவரும் பிரதேசமாகவும் மண்முனை மேற்கு பிரதேசம் விளங்குகின்றது.

படுவான்கரையின் மிக முக்கியமான பிரதேசமாக கருதப்படும் வவுணதீவு பிரதேச செயலக பிரிவில் தமிழ் பாரம்பரிய ஒழுக்காறுகளையும், பாரம்பரிய பண்பாட்டம்சங்களையும் தன்னகத்தே உள்வாங்கி நிலைத்து நிற்பதும், எதிர்கால சந்ததியினருக்கு கையளிக்கும் வகையில் பெறுமதிமிக்க பண்பாட்டு பாரம்பரிய அம்சங்களை பேணிவருதும் காத்திரமான பணியாக அமைந்துள்ளமையை பாராட்டலாம். காலதேச வர்த்தமான மாற்றத்திற்கு ஏற்ப பாரம்பரிய கலை வடிவங்களுடன், நவீன கலை வடிவங்களையும் உள்வாங்கி அத்துறைசார் கலைஞர்களையும் நாம் உற்சாகப்படுத்த வேண்டும். தற்கால தேவைக்கேற்ப கலைவடிவங்களும், கலைஞர்களும் உயிர்த்துடிப்புடன் இயங்க வேண்டியது அவசியமானதாகும். இந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமைந்துள்ள மண்முனை மேற்கு பிரதேச செயலகம் வருடாந்தம் கலை கலாசார போட்டிகளை நடாத்தி வெற்றியாளர்களையும், மூத்த கலைஞர்களையும் பிரதேச கலாசார விழாவில் கௌரவப்படுத்தி வருவதுடன், விழா ஞாபகார்த்தமாக "அகணி" சிறப்பு மலரையும் வெளியிட்டு வருவது பாராட்டத்தக்கதாகும்.

இவ்விழா ஞாபகார்த்தமாக வெளிவரும் "அகணி" நூல் சிறப்புடன் வெளிவரவும், 2019ஆம் ஆண்டுக்கான விழா சிறப்புடன் நடைபெறவும் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், இவ் விழாவின் சிறப்பிற்காக உறுதுணையாக நின்று செயற்படுகின்ற பிரதேச செயலாளர், பிரதேச கலாசார பேரவையினர், கலாசார உத்தியோகத்தர், கலைஞர்கள், இலக்கியப் படைப்பாளர்கள் யாவருக்கும் எனது பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு. ச. நவநீதன்
மாகாணப் பணிப்பாளர்
பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
கிழக்கு மாகாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

உணர்ச்சிபூர்வமான உள்ளம் படைத்த மானிட சமூகத்தை உருவாக்குவதற்கான சூழலை ஏற்படுத்துவதே கலையின் நோக்கமாகும். அந்தவகையில் மனக்கிளர்ச்சியினை கட்டுப்படுத்திய மென்மையான உணர்வுமிக்கதோர் சமூகத்தை உருவாக்குவதில் கலையின் பங்களிப்பு அளப்பரியதாகும். புராதன பண்டிதர்கள் உலகை ஒரே கலைக்கூடமாக நோக்கினர். அவர்கள் அவற்றை உலகலாவிய கலை, சிற்பம், நன்நெறி, கலையும் விஞ்ஞானமும் என வகைப்படுத்தினர். அவ் அழகியற்கலை, கவின்கலை என்பன கலை இலக்கிய நூல் வடிவங்களாக தொழில்நுட்ப கலாசாரமொன்றை நோக்கி முன்னேறியுள்ளன. அவ்வாறானதொரு பின்னணியில் மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேச செயலகமும், கலாசார அதிகார சபையும் இணைந்து ஏற்பாடு செய்கின்ற பிரதேச இலக்கிய விழாவில் மாவட்டத்திற்கே உரித்தான கலைப்பாரம்பரியத்தை வெளிக்கொணருதல் என்ற தொனிப்பொருளில் நூலை வெளியிடுவதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இலங்கை கலைத் துறையில் கலைஞர்களை உற்சாகப்படுத்துதல், தேசிய அளவிலான வளர்ச்சியின் பரந்த விளம்பரம் மற்றும் பொதுமக்களின் மனப்பான்மை என்பற்றை நனவாக்கும் பிரதேச இலக்கிய விழாக்கள் சிறந்ததொரு தெளிவான அனுபவமாகும். கலைஞர்களை ஊக்குவித்தல் மற்றும் இலக்கியம் படைத்தல் ஆகியவற்றை மூத்த கலைஞர்களிடையே மெருகேற்றுவதில் கலாசார அதிகார சபைகள் பாரிய பங்களிப்புச் செய்கின்றன என்றால் அது மிகையாகாது. பிரதேச கலாசார விழாக்களை ஏற்பாடு செய்கின்ற கலாசார உத்தியோகத்தர்கள், கலாசார அபிவிருத்தி உதவியாளர்கள், மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அந்த் வகையில் பிரதேச கலைஞர்களை கௌரவிக்கும் முகமாக "அகணி" சிறப்பு மலரினை வெளியிட மண்முனை மேற்கு, வவுணதீவு பிரதேச செயலக கலாசார அதிகாரசபை எடுத்த முயற்சியானது வரவேற்கத்தக்கது. இதன் மூலம் கலை ஆக்கத்திறனை வெளிப்படுத்துகின்ற அனைத்து படைப்பாளர்களின் மற்றும் கலைஞர்களின் கலை வாழ்க்கை வழிகளை மேலும் பிரகாசப்படுத்துவதால் தேசிய தரத்தின் கலைஞர்கள் உருவமெடுக்க இறைவன் அருள் அவர்கட்கு கிடைக்க வேண்டுமென பிரார்திக்கின்றேன்.

அனூஷா கோகுல பர்னாந்து
பணிப்பாளர்
கலாசார அலுவல்கள் திணைக்களம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வெளியீட்டுரை

மண்முனை மேற்கு கலாசாரப்பேரவையும், கலாசார அதிகார சபையும் இணைந்து வெளியீடுகின்ற அகணி மலருக்கு வெளியீட்டுரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். சமூகங்களின் இருப்பினை தாங்கி வருகின்ற இந்த நூலானது அச்சமூகத்தினுடைய, சமூக கலாசாரப் பின்னணிகளை சுமந்து வருகின்ற ஒன்றாக காணப்படுகின்றது.

இம்முறை எமது கலாசாரப் பேரவையும், அதிகார சபையும் இணைந்து வெளியீடுகின்ற இந்த நூலுக்கு கருப்பொருளாக எமது மண்முனை மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட பண்பாட்டு விழுமியங்களை தாங்கி வருகின்ற நூலாக வெளிக்கொணரப்பட இருக்கின்றது. இந்த நூலிலே இவ் பிரதேசத்திற்கு கலைத்தொண்டு ஆற்றிய கலைஞர்களை கௌரவிக்கும் நிகழ்வும், அத்தோடு இந்த நூலுக்கான ஆக்கங்கள் எமது பிரதேச கலைஞர்களின் ஆக்கங்களாகவே அமைந்து இருக்கின்றது. அத்துடன் இந்த நூலிலே எமது பிரதேச பண்பாட்டினை பிரதி பலிக்கின்ற கவிதைகள், கட்டுரைகள், நாடகங்கள், சிறுகதை, பாடல்கள் என்பன வற்றினை இவ் நூல் தாங்கி வர இருக்கின்றது.

எனவே இவ்வாறான வேலைத்திட்டத்தினை சிறப்பாக முன்னெடுத்துச் செய்கின்ற கலாசாரப்பேரவை உறுப்பினர்கள், கலாசார அதிகார சபை உறுப்பினர்கள், பிரதேச செயலாளர், உதவிப் பிரதேச செயலாளர், நிருவாக உத்தியோகத்தர்கள், கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தவர்கள் சமூர்த்தி உத்தியோகத்தர்கள், கலைஞர்கள், வாழ்த்துரை வழங்கிய அரசாங்க அதிபர், ஆசிச் செய்தி வழங்கிய சுவாமி அவர்களுக்கும், மாகாணப் பணிப்பாளர், பண்பாட்டு அலுவல்கள்திணைக்களம், மற்றும் கலாசாரத்திணைக்களப் பணிப்பாளர், கட்டுரை தந்து உதவிய கலைஞர்கள், நூலினை அச்சிட்டு வழங்கிய லக்சுமி அச்சகத்தினர் மற்றும் அயராது என்னுடன் தோளோடு தோளாய் நின்று உழைத்த எமது பட்டதாரி பயிலுனர்கள் மற்றும் அலுவலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் இவ்விடத்தில் நன்றி கூறுகின்றேன்.

திரு.மூ.சிவனந்தராஜா
கலாசார உத்தியோகத்தர்
கலாசாரப் பேரவை செயலாளர்
மண்முனை மேற்கு
வவுணதீவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்முனை மேற்குப் பிரதேச

# கலாசார கீதம்

மண்முனை மேற்குப் புண்ணிய பூமி
வாழிய வாழிய வே
மாண்புறு தமிழும் வளமலி கலையும்
வளருக வளருகவே
(மண்முனை)

தண்ணளி பொறுமை தனிநிகர் வாய்மை
தாழ்விலா ஒழுக்கவழி
தாரணி முழுதும் மகிழ்ந்து பின்பற்றும்
தகைமையின் வாழ்க்கைநெறி
(மண்முனை)

வண்மையில் பெருமை மனிதமேம்பாடு
மானத்தில் கவரிநிலை
வானக மளவு விரிந்த நல்மனது
வறுமையில் செம்மை ஒளி
கண்ணிய முடைமை கடமையில் நிறைவு
காருண்யம் இவைகளினால்
காதலில் உயரும் மண்முனை மேற்குக்
கலைஞர்கள் வாழியவே
(மண்முனை)

மீனினம் பாடத் தேன்வழிந் தோட
மேதிகள் பால் சொரிய
மேலெழும் வாவி வளைந்துபொன் கொழிக்கும்
வியன்நிலம் மேற்கு நிலம்
கூனிறால் பாயும் குவளைகண் விழிக்கும்
குயிலினம் இசைமிழற்றும்
கூவெனும் கலையின் குரலினில் பிணைகள்
குதுகலித் தூடனுழற்றும்
(மண்முனை)

வானவர் குவிந்து மகிழ்ந்துதென் மோடி
வடவரைக் கூத்தயர்வார்
வனிதையர்கும்மி கரகமு மெடுக்க
வசந்தனும் கணைதொடுப்பான்
தேனுகர் கவிகள் இயந்திரக் கலைகள்
திகழ்நிலம் மேற்குநிலம்
செந்தமிழ் குலவும் சொந்தமண் இனிதே
செழிப்புற வாழியவே
(மண்முனை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்முனை மேற்கு பிரதேச
# கலாசாரப்பேரவை உறுப்பினர்கள்

**தலைவர்**

சி. சுதாகர்

பிரதேச செயலாளரும் கலாசாரபேரவைத் தலைவரும்

**உபதலைவர்**

திருமதி.சு.சதாகரன்

உதவிப்பிரதேச செயலாளர்

**செயலாளர்**

திரு.மூ.சிவானந்தராஜா

கலாசார உத்தியோகத்தர்

**உபசெயலாளர்கள்**

திருமதி.ம.சரண்யா - கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்

திருமதி.சு.சர்மிலா - கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்

திரு.மா.சூரியகுமாரன் - கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்

**பொருளாளர்**

திரு.ப.குருபரன்

கிராம சேவை உத்தியோகத்தர்.

**இணைப்பாளர்கள்**

திரு.வே.வேல்ராசசேகரம் - கணக்களர்

திரு.த.நிர்மல்ராஜ் - உதவிதிட்டமிடல் பணிப்பாளர்

திரு.எம்.எஸ்.எம் றஊப் - நிருவாக உத்தியோகத்தர்

திரு.மு.கோமளேஸ்வரன் - கி.சே.உ (நிருவாகம்)

திரு.கே.தங்கத்தரை - சமூர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர்

திருமதி வி.கலைச்செல்வி - சமூர்த்தி தலைமை முகாமையாளர்

**நிருவாக உறுப்பினர்கள்**

திரு.சி.குலேந்திரன் - கூத்து, குறிஞ்சாமுனை

திரு.ச.விசாகன் - கூத்து, இறக்கத்தவெளி, கன்னன்குடா

திரு.இ.தட்சணாமூர்த்தி - கூத்து, கிராம சேவகர்

திரு.ப.சிவநாதன் - வாய்மொழிப்பாடகர், ஆயித்தியமலை

திரு.க.மயில்வாகனம் - அண்ணாவியார், கரவெட்டி

திரு.மு.அருணன் - கூத்து, கன்னன்குடா

திரு.நே.சிவநிதி - கூத்து, புதுமண்டபத்தடி

திரு.க.புவிக்குமார் - கூத்து, பருத்திசேனை

திரு.கு.பிரபாகரன் - கூத்து, கன்னன்குடா

திரு.க.ரெட்ணையா - இலக்கியம், கன்னன்குடா

திரு.சு.ரிசிகரன்- ஆரய்ச்சித்துறை, புதுமண்டபத்தடி

திரு.ப.பவளநாதன் - இலக்கியம், கன்னன்குடா

திரு.க.சதாசிவம் - சோதிடம், பருத்திசேனை

திரு.வ.திலீபன் - கூத்து, விளாவெட்டுவான்

திரு.கு.பிறைசூடி - கூத்து, சொறுவாமுனை

திரு.த.வேல்க்குமாரன் - அபிவிருத்தி உத்தியோகத்தர்

திரு.S.கிருபேஸ்வரன் - நாடகம், குறிஞ்சாமுனை

திரு.மூ.யோகானந்தராஜா - கிராமியப்பாடல், நாவற்காடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலாசார அதிகார சபை உறுப்பினர்கள் விபரம்

1. தலைவர் – திரு. சி. சுதாகர் பிரதேச செயலாளர்
2. உப தலைவர் – திருமதி. சு. சதாகரன் உதவிப் பிரதேச செயலாளர்
3. செயலாளர் – திரு. தெ. சசிதரன்
4. இணைப்பாளர் – திருமதி. ம. சரண்யா

## உறுப்பினர்கள்

1. திரு.க.சதாசிவம் – பருத்திச்சேனை
2. திரு.ப.குருபரன் – கன்னன்குடா
3. திரு.மு.அருணன் – கன்னன்குடா
4. திரு.இ.தட்சணாமூர்த்தி – கன்னன்குடா
5. திரு.கு.பிறைசூடி – சொறுவாமுனை
6. திரு.ப.பவளநாதன் – கன்னன்குடா
7. திரு.க.ரெட்ணையா – கன்னன்குடா
8. திரு.அ.கோபாலகிருஸ்ணன் – மண்டபத்தடி
9. திரு.கி.அருளம்பலம் – பருத்திச்சேனை
10. திரு.க.புவிக்குமார் – பருத்திச்சேனை
11. திரு.ம.இளையதம்பி – முள்ளாமுனை
12. திரு.க.மயில்வாகனம் – கரவெட்டி
13. திரு.செ.வேலுப்பிள்ளை – கரவெட்டி
14. திரு.மூ.யோகானந்தராஜா – நாவற்காடு
15. திரு.ப.சிவநாதன் – ஆயித்தியமலை
16. திரு.நே.சிவநிதி – புது மண்டபத்தடி
17. திரு.வ.திலிபன் – விளாவட்டவான்
18. திரு.கு.பிரபாகரன் – கன்னன்குடா
19. திரு.க.கிருபேஸ்வரன் – குறிஞ்சாமுனை
20. திரு.சி.டினோகரன் – கொத்தியாபுலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தக்ஜானந்த சுவாமி வாழ்த்துரை | ii |
| 2. | மாவட்டச் செயலாளர் வாழ்த்துரை | iii |
| 3. | பிரதேச செயலாளர் வாழ்த்துரை | iv |
| 4. | உதவி பிரதேச செயலாளர் வாழ்த்துரை | v |
| 5. | மாகாணப்பணிப்பாளர் வாழ்த்துரை | vi |
| 6. | கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் வாழ்த்துரை | vii |
| 7. | வெளியீட்டுரை | viii |
| 8. | கலாசார கீதம் | ix |
| 9. | கலாசார பேரவை உறுப்பினர் விபரம், கலாசார அதிகார சபை உறுப்பினர் விபரம் | x |
| 10. | கொடும்பாவி அன்றும் இன்றும் | 01 |
| 11. | சமர்ப்பணம் (நாடகம்) | 04 |
| 12. | யார் உயர்ந்தவர் (சிறுகதை) | 12 |
| 13. | தமிழர் பண்பாட்டில் வெற்றிலையின் முக்கியத்துவம் | 15 |
| 14. | பாரம்பரிய கூத்தரங்கில் பெண்கள் பங்கு பற்றாமைக்கான சமய, சமூக கட்டமைப்புக்கள் | 19 |
| 15. | எமது மண் (கவிதை) | 24 |
| 16. | அருங்கனியா ஆலங்கனியா (கவிதை) | 25 |
| 17. | இலக்கியம் படைக்கலாம் கற்றிடம்மா (கவிதை) | 26 |
| 18. | பரத நாட்டிய சிகிச்சை | 27 |
| 19. | மண்முனை மேற்கு பிரதேச மக்களிடத்தில் மறைந்து வருகின்ற பண்பாட்டு விடயங்களை வெளிக்கொணர்தல் | 29 |
| 20. | நாட்டுப்புற வழக்காறுகளும் பல்லுயிர் பேணுதலும் | 48 |
| 21. | கிராமியப் பாடல் | 53 |
| 22. | மட்டக்களப்பு பூர்வீகக் குடிகளும் இந்து சமயமும் | 55 |
| 23. | கௌரவிக்கப்படும் கலைஞர்கள் விபரம் | 60 |
| 24. | கலாசாரப் போட்டி முடிவுகள் | 64 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடும்பாவி அன்றும் இன்றும்



கோபாலப்பிள்ளை குகன்,
விரிவுரையாளர்
மொழித்துறை
கிழக்குப்பல்கலைக்கழகம்

கொடும்பாவி என்பதற்கு "பெருந்தீவினையாளன்", "மழையற்ற நாளில் கட்டி இழுக்கும் ஒரு வடிவம்" என்று கழகத் தமிழ் அகராதியும் "மழை இல்லாத குறை, பஞ்சம் முதலியவற்றை நீக்குவதற்கு அல்லது ஒன்றிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் வைக்கோலால் அல்லது அட்டையால் செய்து தெருவில் இழுத்துச் சென்று எரிக்கும் உருவம்" என்று க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதியும் "எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் வைக்கோலால் செய்து தெருவழியால் இழுத்துச் சென்று எரிக்கும் உருவம்" என்று நர்மதாவின் தமிழ் அகராதியும் விளக்கம் தருகின்றன. இவ்விளக்கங்களிலிருந்து கொடும்பாவி என்பது மூன்று வகையாகப் பொருள் கொள்ளப்படுவதை அவதானிக்கலாம்.

**1. கொடிய பாவி என்ற நேரடிப் பொருள்**
**2. வேண்டி வைக்கோலால் அல்லது வேறு பொருட்களால் செய்து தெருவில் இழுத்துச் சென்று எரிக்கும் உருவத்தைக் குறிக்கும் சொல்.**
**3. எதிர்ப்புத் தெரிவிக்கும் (?) வகையில் வைக்கோலால் அல்லது வேறு பொருட்களால் செய்து தெரு வழியால் இழுத்துச் சென்று எரிக்கும் உருவத்தைக் குறிக்கும் சொல்.**

இறுதி இரண்டு பொருள் விளக்கங்களையும் கருத்திற் கொள்ளுகின்ற போது மழை வேண்டியும் எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்காகவும் வைக்கோலால் அல்லது வேறு பொருட்களால் செய்து தெரு வழியே இழுத்துச் சென்று எரிக்கின்ற உருவத்தைக் குறிப்பதற்கான பெயராக "கொடும்பாவி" அமைந்து விடுவதை அவதானிக்கலாம் இவ்வாறான சொற்பொருள் உருவாக்கப் பின்னணியில் நாட்டார் வழக்காற்றின் செல்வாக்கு உள்ளமை தெளிவுபடுத்தப்பட வேண்டிய விடயமாகும். சொற்பொருள் உருவாக்கத்தில் 'சமூகமனம்' மிகுந்த செல்வாக்குச் செலுத்துகின்றது என்பதை இதனால் உணர்ந்துகொள்ள முடியும்.

இன்று உலகமெங்கும் கொடும்பாவிகள் எரிக்கப்படுவதை அவதானிக்கலாம். இலங்கையிலும் நாளுக்கு நாள் நடைபெறும் ஆர்ப்பாட்டங்களின் போதும் அரசியல் கூட்டங்களின் போதும் கொடும்பாவி எரிப்பது சாதாரணமாகிவிட்டது. இவ்வாறு ஜனரஞ்சகமாகியுள்ள 'கொடும்பாவி எரித்தல்' என்ற விடயத்தையும் 'கொடும்பாவி' என்ற சொல் குறிக்கின்ற அர்த்தத்தையும் விளங்கிக்கொள்வது பயனுடையதாகும்.

"இந்த ஊர்ல எங்க மழை பேயப் போகுது" "இந்த ஊர்ல எப்பிடி மழை பேயும்" "நான் வந்ததால்தான் மழை பேஞ்சது" என்பதெல்லாம் மழை இல்லாத காலங்களில் மக்கள் தமக்குள் பேசிக்கொள்கின்ற வசனங்களாகும். இவ்வசனங்களைப் பேசுபவர்கள் தம்மைச் சூழ்ந்துள்ளவர்களை, தமது கிராமத்தவர்களை கொடுமையாளர்களாகக் கூறவிளைகின்றமையை விளக்கிக்கொள்ள வேண்டும். ஆனால் இவ்வசனங்கள் பேசப்படுகின்ற போது பேசுபவரோ கேட்பவரோ அத்தகைய எதிர்வினையை வெளிப்படுத்துவதில்லை, சிநேகிதமாகப் பேசுகின்றனர். நடைமுறை எப்படியிருப்பினும் இவ்வசனங்கள் தோன்ற வேண்டிய தேவை என்ன? என்பது முக்கியமான கேள்வியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழை இன்று வரும் நாளை வரும் என்று எதிர்பார்த்திருந்து ஏமாற்றமடைகின்ற மக்கள் தமது துன்பத்தை மேற்படி வசனங்களால் வெளிப்படுத்துகின்றனர். சிலவேளை "மழை இப்ப பேயாது, எல்லாம் அழிஞ்சு ஒண்டு ரெண்டு மிஞ்சிக் கிடந்தா அதை அழிக்கிறதுக்கு மழை பேயும்" என்றும் தமது இயலாமையை வெளிப்படுத்துகின்றனர். இந்நிலையில் மழையைப் பெய்ய வைப்பதற்குக் கொடும்பாவி எரித்தல், கொம்பு விளையாட்டு அல்லது கொம்பு முறித்தல் என்னும் நிகழ்த்தும் முறைகளை கடவுள் நம்பிக்கையின் அடிப்படையில் மேற்கொள்கின்றனர். இந்நிகழ்த்துதல்களின் போது முறையே பாடப்படும் கொம்புமுறிப் பாடல்கள் கொடும்பாவிப் பாடல்கள் என்பன இன்றும் மட்டக்களப்பு மக்களிடம் வாய்மொழியாக வழங்குகின்றன.

வைக்கோலால் அல்லது பழைய துணியால் அல்லது அட்டையால் அல்லது வேறு பொருட்களால் ஒரு மனித உருவத்தைச் செய்து ஊஉரூராகத் தெருக்களிலே இழுத்துச் சென்று இறுதியில் சுடலையில் வைத்து அதற்குத் தீ மூட்டுவதை 'கொடும்பாவி எரித்தல்' என்று சொல்லுவர். இவ்வாறு இழுத்துச் செல்லும் போது கொடும்பாவிப் பாடல்கள் பாடப்படும்.

**"கோடை மழை பெய்யாதோ**
**கொடும்பாவி சாகாளோ"**
**"நல்ல மழை பெய்யாதோ**
**நாசமறுவாள் சாகாளோ"**
**"இருண்ட மழை பெய்யாதோ**
**இன்னா போறவள் சாகாளோ"**
**"ஆத்த மறிச்சுக் கட்டி**
**அழகு சம்பா நான் விதைச்சன்**
**ஆத்துத் தண்ணி வத்த வத்த –என்ர**
**அழகு சம்பா வாடுதடி"**
**"குளத்த மறிச்சுக் கட்டி**
**குருகு சம்பா நான் விதைச்சன்**
**குளத்துத் தண்ணி வத்த வத்த –என்ர**
**குருகு சம்பா வாடுதடி"**
**"கடல மறிச்சுக் கட்டி**
**கருகு சம்பா நான் விதைச்சன்**
**கடல் தண்ணி வத்த வத்த –என்ர**
**கருகு சம்பா வாடுதடி"**

ஒப்பாரிப் பாடல்களின் சாயலைப் பெற்றுள்ள இப்பாடல்கள் கொடும்பாவி சாக வேண்டும் என்ற மக்கள் விருப்பை வெளிப்படுத்துகின்றன. நீரின்றித் தமது பயிர்கள் அழிவதையும் அந்த அழிவினால் ஏற்படும் மனச்சலிப்பையும் வெளிப்படுத்துகின்றன. முக்கியமாகக் கொடும்பாவியை "சாகாளோ" என்று குறிப்பிடுவதன் மூலம் முன் குறிப்பிட்டது போல வைக்கோல் முதலிய பொருட்களால் செய்யப்பட்ட தெருக்களில் இழுத்துச் செல்லப்படுகின்ற மனித உருவம் ஒரு பெண்ணின் உருவம் என்பதை அறிகின்றோம். இந்த உருவத்தை இரண்டு விதமாக மக்கள் உருவகிக்கின்றனர்.

1. **கற்பிழந்த பெண் அல்லது நடத்தை கெட்ட பெண்.**
2. **பூமாதேவி.**

மங்கையர் கற்பிழந்தால் மழை பொய்க்கும் என்ற நம்பிக்கை மக்களிடம் உள்ளது. ஒருவனுக்கு ஒருத்தி என்ற வரம்பைக் கடந்த பாலுறவு முறையற்ற உறவுடையோர்க்கிடையே நடக்கும் பாலுறவு என்பன 'கற்பிழத்தல்' என்ற கருத்துக்குள் அடங்கும். இவ்வாறான நடத்தை கெட்ட பெண்கள் இல்லாமல் போனால் மழை வரும் என்று மக்கள் நம்புகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழையைத் தருபவள் பூமாதேவி என்ற எண்ணத்தின் அடிப்படையில் மழை தேவைப்பட்ட போது மழையைத்தராத பூமாதேவி இல்லாமல் இருப்பதே நலம் எனக் கருதுகின்றனர். அதாவது மழையைத் தராமல் துன்பம் செய்கின்ற பூமாதேவியை தெருவில் இழுத்து மானபங்கப்படுத்தினால் அந்த வெட்கத்தில் மழையைத் தருவாள் என நம்புகின்றனர். இது மானசீகமான ஒரு எதிர்ப்பாகக்கூட இருக்கலாம். இந்த நிகழ்த்துமுறைகள் கிராமங்களிலேயே நடைபெற்றன நடைபெறுகின்றன.

கிராமங்கள் நகரங்களாக மாறுகின்ற போது இவ்வழக்காறுகள் அருகிப் போகின்றன அல்லது மாற்றங்களைப் பெறுகின்றன. தற்காலத்தில் நகரங்களிலும், கிராம நகரங்களிலும் கொடும்பாவிகள் எரிக்கபடுகின்றன. ஆனால் அவற்றின் அர்த்தங்களும் நோக்கங்களும் வேறுபட்டவை. அரசியலை அடிப்படையாகக் கொண்டவை. உதாரணமாக, "இரு நாட்டுத் தலைவர்களின் கொடும்பாவிகள் எரிக்கப்பட்டனர்" என்கிற போது நாட்டுத் தலைவர்களின் அதிகாரத்தை எதிர்க்கும் செயற்பாடாகவே இதைப் பார்க்க முடிகிறது. இங்குதான் "கொடும்பாவி" என்பதற்கு அகராதிகள் குறிப்பிடுகின்ற "எதிர்பைத் தெரிவித்தல்" என்ற அர்த்தம் அழுத்தம் பெறுகின்றது. மழையை வேண்டி மக்கள் கொடும்பாவி எரித்த போது அவர்கள் இத்தகைய எதிர்ப்பை வெளிப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. பாவத்தைத் தொலைப்பதற்காகக் கொடும்பவி எரிக்கின்றனர். பாவத்தைத் தொலைத்தால் மழை வரும் என்று நம்பிய மக்கள் பாதகர்களைத் தொலைத்தல் நன்மை கிடைக்கும் என்று நம்புகின்றனர். அப்படியாயின், பூமாதேவியை மக்கள் பாதகியாகக் கருதினார்களா? என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியாது. "கண்கெட்ட கடவுள்", "கடவுள் இருக்கிறாரா? செத்துவிட்டாரா?" என்றெல்லாம் ஈழத்தமிழினம் கடவுளை வஞ்சித்துக்கொண்டமை அண்மைக்காலத்து கசப்பான வரலாறாகும்.

தொகுத்து நோக்குகின்ற போது கொடும்பாவி என்பதற்கு அகராதிகள் குறிப்பிடுகின்ற பொருள் விளக்கங்கள் கொடும்பாவி எரிக்கும் நிகழ்வை சமூக பண்பாட்டு அடிப்படையில் ஆராய்வதன் மூலமே தெளிவுபெறும் என்பதை விளங்கிக்கொள்ளலாம். கொடும்பாவி எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் எரிக்கபடும் என்பதை அகராதிகள் குறிப்பிடுகின்றன யாரை எதிர்த்தல்? எந்த வகையான எதிர்ப்பு? போன்ற கேள்விகளுக்கு அவ்விளக்கங்களில் விடை இல்லை. கொடும்பாவியைப் பூமாதேவியாக உருவகித்த போது பூமாதேவியை மக்கள் எதிர்த்தார்கள் என்றுதான் கொள்ள வேண்டும். எனினும் அவ்வெதிர்ப்பு மானசீகமானது. அது உளவியல் அடிப்படையில் விளங்கிக்கொள்ளப்பட வேண்டியது. உலகத்தைப் படைத்தவர் கடவுள், மக்களை படைத்தவர் கடவுள் உலகத்தை இயக்கிக்கொண்டிருப்பவர் கடவுள் என்ற கருத்துக்கள் மக்களது மனங்களில் ஆழப்பதிந்தவை. இருப்பினும் தமக்குத் துன்ப துயரங்கள் வருகின்ற போது அந்த வலியால், கடவுள் தமக்கு உதவவில்லையே என்ற கவலையால் கடவுள் மீதான வெறுப்பு ஏற்படலாம். அவ்வெறுப்பு முற்றுமுழுதான எதிர்ப்பாக இருக்காது. எனவே கடவுளை வெளிப்படையாக எதிர்க்கத் திராணியற்ற மக்கள் மழை இல்லாத போது அதற்குக் காரணமானவள் என்று தாம் எண்ணுகின்ற பூமாதேவியை நொந்துகொண்டார்கள் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



மு.அருளம்பலம்
ஓய்வு நிலை அதிபர்

**காட்சி – 1**

**இடம் : உசுமுண்டாப்போடி வீடு**

**பாத்திரங்கள் : உசுமுண்டாப்போடி, மனைவி – கண்டுமணி, மக்கள் ராசு, மீனா, வேலைக்காரன் – கந்தன்.**

**உசுமுண்டாப்போடி :** கொக்கட்டியானே! தான்தோன்றீஸ்வரா!நான் புதிதாகச் செய்கிற எதுவென்டாலும் முதல் உன்ன நெனச்சி, உனக்கு நேர்த்திவைச்சுத்தான் செய்வன். அதப்போல மூன்று வரிசத்துக்கு முன்னால புதிசாவாங்கிய தோட்டத்தில நிறைய விலாட்டு மாங்கன்றுகளை வைச்சன். பழுக்கிற பழங்கள ஆஞ்சி முதலில் காவில கட்டி, தான்தோன்றி அப்பனுக்கு காணிக்கையாக அனுப்பிவைப்பனெண்டு நேர்த்திக்கடன் வைச்சன். அந்த ஈஸ்வரன் என்ட வேண்டுதல நிறைவேற்றிப்போட்டார். முதலில முத்திப்பழுத்த 200 பழங்கள கூடையில வைச்சி காவில கட்டி வைச்சிரிக்கன் வேலக்காரனிட்ட குடுத்து இப்ப அனுப்ப வேணும் புள்ள....கண்டுமணி? கண்டுமணி?.

**கண்டுமணி:** என்ன கத்திறயள்? எனக்கென்ன செவிடா? ஒங்களப்போல.

**உசுமுண்டாப்போடி:** ஓம்புள்ள....இண்டைக்குதான்டி சரியாகச் சொல்லிரிக்கா.

**கண்டுமணி:** அடுப்படியில வேலசெய்யக்கூடமுடியாது.

**உசுமுண்டாப்போடி:** அப்படி என்னத்தடி நீ ஆக்கி ஆறப்போடுறா? இப்ப உன்ன நான் கொஞ்சவா கூப்பிட்ட ஆத்திரம் அவசரம் புரியாதவ.

**கண்டுமணி:** ஏன் வையமாட்டீங்க. கையச்சுட்டு கறியாக்கினாலும் நல்லாயில்ல எண்டு நாக்கூசாம சொல்லுவிங்க.

**மீனா:** அப்பா! எனக்கொரு மாம்பழம் தாங்க !

**ராசு:** அப்பா! முதலில உங்கட கடக்குட்டி எனக்கொரு மாம்பழம் தாங்க.

**உசுமுண்டாப்போடி:** இஞ்ச பாருங்க கரச்சப்படுத்தாம இருங்க. இது தான்தோன்றியப்பனுக்கு வீட்டுக்குள்ள வேறுபழங்கள் இருக்கு, பிறகு கொம்மாட்ட சொல்லி கேட்டு வாங்குக.

**மீனா ராசு:** அம்மா!..... அம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கண்டுமணி:** சேச்சே! என்ன புள்ளயள், மாம்பழத்த கண்டு, தின்னாத புள்ளங்கள் மாதிரி கத்துறயள்

**மீனா ராசு:** சாமி வரங்கொடுத்தாலும் இந்த அம்மா தரமாட்டா.

**உசுமுண்டாப்போடி:** சரியா சொன்னீங்க புள்ளயள்

**கண்டுமணி:** என்ன சொன்னீங்க. ஏன்சொல்லமாட்டீங்க. அப்பனுக்கு தப்பாம புறந்த புள்ளங்களெலுவா

**உசுமுண்டாப்போடி:** உன்னோட மாரடிக்க என்னால ஏலா. இவன் கந்தன எங்க காணல்ல

**கண்டுமணி:** அவன் மாந்தோட்டத்தில மடுவெட்டுறானாம். வெட்டப்போகச் சொல்லிட்டு....வயசு போனா வாக்கு மாறுற என்றது செரிதான்.

**உசுமுண்டாப்போடி:** இவ இப்பத்தான் பதினாறு வயது கொமரி. நான் வயதான கௌடாப் போயித்தன். இப்ப என்னப் புடிக்கல்ல எதுக்கெடுத்தாலும் ஈட்டிக்கு போட்டியாகத்தான் நடக்கிறா நமக்கு வேணும் தோட்டம் தொறவோட சொந்தமாமன்ட மகளோடதாரன் வந்து என்ர மகளிட்டஇரியெண்டு மாமா எம்புட்டு பாடுபட்டாரு. அந்த நேரத்தில இவ ஒள்ளுப்பம் வடிவெண்டு நான் ஒத்தக் காலில நிண்டு, ஒன்டும் வேணாண்டு கட்டிகிட்டன். சரி! சரி! இப்ப கந்தனக் கொஞ்சம் வரச்சொல்லுகா.

**கண்டுமணி:** கந்தனக் கொஞ்ச மாந்தோட்டத்துக்குள்ள போறதானே! நானா போய்க் கூட்டிக்கொண்டுடுற (என்று கூறிக்கந்தனக் கூட்டபோறா)

**உசுமுண்டாபோடி:** கிளவி எப்பவும் உசிராயிருக்கிறதால எதுக்கும் உட்டுக்குடுக்காம கோபபடுகிற மாதிரிக் காட்டுவா. அந்த நேரத்தில அப்படியொரு அழகு...தாய் கத்துன கத்தில புள்ளயலெல்லாம் ஓடித்துகள் தம்பி ராசு ஒரு கடதாசியும் பென்சிலும் எடுத்து வாடா.

**மீனா:** என்னத்துக்கப்பா!

**உசுமுண்டாப்போடி:** கோயில் குருக்களுக்கு ஒரு கடுதாசி எழுதவேணும்.

**மீனா:** தொர, ராசா இப்ப தொல்லக்காட்சி பாக்க குந்தித்தாரு. இனி அவரிட காதில ஒண்டும் ஏறாது. நீங்க சொல்லுங்க நான் எழுதிறனப்பா.

**ராசு:** அப்பா! இவதான் தன்ட பிரண்சிகளோட தொல்லை பண்ணியில கதைச்சிப்போட்டு, என்னப்பொய்சொல்லுறா. நான் பேப்பரோடையும் பென்னோடையும் வந்திரிக்கன் நீங்க சொல்லுங்க

**உசுமுண்டாப்போடி:** கொம்மா சொன்னா சரிதான் நீங்க இவகட ஆட்டப்படி, அத இத காசக்கொட்டி வாங்கிக்குடுத்து குத்து மாடு வாங்கின கதையாப் போகுமெண்டு அது சரிதான் என்டு எனக்கு இப்பதான் படுகுது மனைவியெண்டா மந்திரியெண்டு புரியவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ராசு:** அம்மா எங்க மேல உள்ள பாசத்திலதான் சொன்னவ, நாங்க கெட்டுப்போவமெண்டு. ஆனா, நாங்க அவ பெத்த மக்கள், அப்படியெல்லாம் நடக்கமாட்டம். இந்த மண்ணுக்கு ஒரு மரியாதரிக்கப்பா. இந்த மண்ணில பிறந்த நாங்க...நீங்க சொல்லுங்கப்பா.

**உசுமுண்டாப்போடி:** கொக்கட்டிச்சோலக்கோயில் குருக்களுக்கு, உசுமுண்டாப்போடி எழுதிக்கொள்வது. எங்கட புதிய மாந்தோப்பில, முதலில பழுத்த 200 பழங்கள காவிலகட்டி, தான்தோண்றீஸ்வரருக்கு காணிக்கையாக அனுப்புறன். இறைவனுக்குப் படைக்கவும். சரி எழுதியாச்சா? காகிதத்தைதா.

**ராசு:** இந்தாங்கப்பா!

**உசுமுண்டாப்போடி:** மகள் மீனா! ஓடிப்போய் அந்தக் கந்தனக் கூட்டித்துவா! கொம்மாவ அனுப்பின. அவன் அவன்ட வேலயமுடியாம வரமாட்டான்.

**மீனா:** கந்தன் இந்தா வாராரப்பா.

**உசுமுண்டாப்போடி:** நீ கூப்பிட்டா உடனே வரமாட்டாயா? கந்தா.

**கந்தன்:** மாந்தோட்டத்தில வேலசெய்தன் கெதியாக வரச்சொன்னதாம். செஞ்ச வேலய முடிச்சிட்டு வந்தன். என்ன அவசர விசயம் போடியார்.

**உசுமுண்டாப்போடி:** டேய் கந்தா. இந்த மாம்பழக்கூடக் காவக்கொண்டுபோய், நம்மட தான்தோண்றீஸ்வரக் கோவில் குருக்கள் ஐயாட்ட இந்தக்கடிதத்தையும் குடுத்துட்டு வா.

**கந்தன்:** செரி போடியார் (கந்தன் காவை தோலில் காவிக்கொண்டு போகிறான்)

**கந்தன்:** என்ன மழவாறாப்போல கெடக்குது, ஓம் தூறுது ஆ.... ஒரத்தமழயாப்போச்சுதே.. அந்தக் கட திறக்கல ஒத்தருமில்ல. அந்த தட்டிக்குள ஒதுங்கி நிப்பம். (காவ இறக்கி வைச்சவன்)

ஐயோ! ஈஸ்வரா தான்தோண்றீசா மழயும் விட்டபாடில்ல... பசியும் வயித்தக்கிள்ளுது. இன்டைக்கெண்டு காலையில நீச்சத்தண்ணியும் குடிக்கல்ல. சின்னக்குடல பெரிய குடல் திண்டுத்துப்போல அவளவு பசி எடுக்குது. ஒரு நாளும் எனக்கெண்டா இப்படிப் பசிக்கல்லயே. ஈஸ்வரா நீ தான் வழிகாட்ட வேணும் ஓ.. இந்த மாம்பழத்தில ஒண்டுரெண்ட எடுத்துத் தின்னுவம் ஆ...நல்லாத்தானிருக்கு. இன்னொண்டு...ஓ, மூன்ற திண்டபிறகுதான் இந்த கொள்ளப்பசி அடங்கியிருக்கு. மழைத் தண்ணியில கையைக் கழுவி விட்டு துண்டினால் துடைத்து ஏப்பம் விடுகின்றான். ஒரு மாதிரி மழநிண்டுத்து. (காவை தூக்கி தோளில் வைத்துக் கொண்டு நடந்து கோவிலை அண்மித்து விட்டான்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி–2

**இடம்: கோவில் குருக்கள் வீடு**

**பாத்திரங்கள்: குருக்கள் ஐயா, குருக்கள் மனைவி இரத்தினம்மா (ரகு, வள்ளி – மக்கள்), கந்தன்**

**இரத்தினம்மா:** பிடியதன் உருகுமை

**இரத்தினம்மா:** கொளமிகு கரியது.

**ரகு வள்ளி:** வடிகொடு தனதடி

**இரத்தினம்மா:** வழிகொடு தனதடி

**ரகு வள்ளி:** வழிபடுமவரிட

**இரத்தினம்மா:** கடி கணபதி வர ...

**ரகு வள்ளி:** கடி கணபதி வர...

**கந்தன்:** குருக்கள் ஐயா!..குருக்கள் ஐயா!

**இரத்தினம்மா:** ரகு...யாரோ கூப்பிடுறாங்க. ஆரெண்டு போய்ப்பாருங்கோ.

**ரகு:** என்னையா! உங்களுக்கு என்னவேண்டும்.

**கந்தன்:** குருக்களையா இருக்காரா?

**ரகு:** ஐயா!..... ஐயா! ஒருத்தர் உங்களைப் பார்க்க வேண்டுமாம்.

**குருக்களையா:** வாருங்கோ...என்ன விடயம் சொல்லுங்கோ.

**கந்தன்:** உசுமுண்டாப்போடியார், இந்தக் கூடைகளையும், கடிதத்தையும் உங்கட்ட கொடுக்கச் சொன்னார்.

**குருக்கள் ஐயா:** சரி! அப்படிப் போயிருகங்கோ பழங்களை எடுத்துக்கொண்டு கூடைகளைத்தாரன்.

**கந்தன்:** சரி ஐயா! நான் அந்தக் கட்டுல இருக்கன்.

**இரத்தினம்மா:** யாரது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குருக்களையா:** அது நம்மட உசுமுண்டாப்போடியார் நேர்த்தியாக எம்பெருமானுக்கு மாம்பழங்கள் அனுப்பியிருக்கார்.

**இரத்தினம்மா:** அது என்ன கடிதம்?

**குருக்களையா:** இதுவும் அவர் அனுப்பிய கடிதந்தான். மகள் வள்ளி, இதக் கொஞ்சம் படியம்மா.

**வள்ளி:** தாருங்கையா படிக்கிறன்

**இரத்தனம்மா:** விளங்கக் கூடியதாக சத்தமா படிபுள்ள.

**வள்ளி:** குருக்கள் ஐயாவிற்கு! உசுமுண்டாப்போடி எழுதிக் கொள்வது. எனது புதிய தோட்டத்தில பழுத்த 200 பழங்களை அனுப்பி இருக்கின்றேன். ஈஸ்வரப் பெருமானுக்கு பிரசாதமாகப் படைக்கவும். இப்படிக்கு உசுமுண்டாப் போடி.

**ரகு:** ஐயா 200 பழம் என்று எழுதியிருக்காரு திரும்பத்திரும்ப எண்ணினேன் 197 தான் இருக்குதையா.

**குருக்களையா:** அப்படியா? சரியாகத்தானே எண்ணினாய் தம்பி. அப்ப நீயும் நான் சொல்லுறத எழுது தம்பி.

**ரகு:** சொல்லுங்கையா.

**குருக்கள்ஐயா:** நண்பர் உசுமுண்டாப்போடிக்கு! நமஸ்காரம். நீங்கள் ஈஸ்வரனுக்கு பக்தியோடு அனுப்பிய 197 மாம்பழங்களும் கிடைத்தது. பெருமானுக்கு பகல் பூசைக்கே சமர்பணம் பண்ணி விடுகிறேன். பிரசாரத்தைப் பக்தர்களுக்கு கொடுக்கின்றேன். இப்படிக்கு குருக்களையா. தம்பி அந்த மனிதரைக் கூட்டித்துவா.

**கந்தன்:** வந்திட்டனையா.

**குருக்கள்ஐயா:** இந்த கடிதத்தையும் கூடைகளையும் போடியாரிடம் கொடுத்துவிடுங்கோ.

**கந்தன்:** வணக்கம்! வாரனையா.

**காட்சி –03**
**இடம் உசுமுண்டாப் போடியார் வீடு**
**பாத்திரங்கள் உசுமுண்டாப் போடி. கந்தன். மீனா**

**உசுமுண்டாப் போடி:** கந்தா வந்திட்டாயா…..

**கந்தன்:** இந்தக் கடிதத்தைக் கொடுக்கச் சொன்னாரு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உசுமுண்டாப்போடி:** புள்ள மீனா.. இங்கேவாம்மா.

**மீனா:** என்னப்பா.

**உசுமுண்டாப்போடி:** இந்தக் கடிதத்த படிபுள்ள.

**மீனா:** நண்பர், உசுமுண்டாப்போடிக்கு! நமஸ்காரம். தாங்கள் அனுப்பிய 197 பழங்களும் கிடைத்தது. பெருமானுக்கு பகல் பூசைக்கு சமர்பணம் பண்ணி விடுகிறேன் பிரசாரத்தைப் பக்தர்களுக்கு கொடுக்கிறேன். இப்படிக்குக் குருக்களையா.

**உசுமுண்டாப்போடி:** என்னடா கந்தா! 200 பழங்களை நான் திரும்பத்திரும்ப நூறு, நூறாக எண்ணி ஒவ்வொரு கூடைக்குள்ளும் வைச்சி காவிலகட்டினனான்.குருக்கள் ஐயா 197 பழங்கள் என்று எழுதியிருக்காரு என்னடா நடந்தது?

**கந்தன்:** என்ன மன்னிச்சிடுங்கபோடியார் பசி தாங்கமுடியல நான்தான் மூன்று பழங்கள் எடுத்துத்திண்டித்தன்.

**உசுமுண்டாப்போடி:** என்னடா சொன்ன நீ? சிவபெருமானுக்கே சமர்பணம் செய்யகொடுத்த பழத்த உன்ர பசிக்குச் சாப்பிட்டுப் போட்டியா? உன்ர புத்திய அந்த சிவனிடமே காட்டிப்போட்டியே! போடவெளியில. நாயக்கழுவி நடு வீட்டுக்குளவைச்சா....என்ரபடி நடந்திட்டாயே! இனி உனக்கு இங்க வேலைகிடையாது. இனி என்ர கண்ணில முழிக்காத இஞ்ச நில்லாம போடா!போடா.

**கந்தன்:** புள்ளகுட்டிக்கார நான் எங்கபோற போடியார்? வேலய விட்டுப்போகச்சொல்லாதிங்க போடியார்.

**உசுமுண்டாப்போடி:** (கந்தன பிடித்துதள்ளி விட்டு) திருடனுக்கு இங்க வேலயில்ல. போடா வெளிய. பல நாள் கள்ளன் ஒரு நாள் அகப்படுவன் என்று அந்த தான்தோண்றியப்பன் இவன் இவளவு நாளாகச்செய்து வந்த களவுகள இண்டைக்குக் காட்டித்தந்தித்தாரு. வாற ஆத்திரத்துக்கு உன்ன என்ன செய்வன் என்று தெரியாது போடா! போடா! கந்தன் போடியாரின் வீட்டையே திரும்பி திரும்பிப் பார்த்து அழுதுகொண்டு போகிறான்.

**காட்சி – 04**
**இடம்: உசுமுண்டாப்போடி உறங்குமிடம் கந்தன் குடிசை.**
**பாத்திரங்கள்: உசுமுண்டாப்போடி, கந்தன், கந்தனின் மகன் கருணா.**

**கந்தன்:** தான்தோன்றிஸ்வரரே! சிவ சிவ சிவனே! நீ தானிறைவா எனக்கு உதவவேணும் என்ரபசிக்கொடுமையால, அந்தப் பழங்களத்திண்டுத்தன் இந்த ஏழைக்கு எண்ணிக்கொடுத்த விசயம் தெரியாமபோச்சி. தெரிஞ்சிருந்தா இந்தத்தவற செஞ்சிருக்கமாட்டன். ஆனா இதுவரை காலமும் செய்யாத குற்றத்தையும் செய்ததாகவும், நீ தான் காட்டிக் கொடுத்ததாகவும் சொன்னத என்னால தாங்க முடியல்ல சிவனே. எப்படியென்றாலும் நானப்படிப்பட்டவனல்ல என்று அவருக்கு உணர்த்தி, அவர் மனதமாத்திடப்பா. நீ பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்டாய். நான் மூன்று பழங்களைத்திண்டு சொல்லம்பாலே அடியுன்டேன், தள்ளுன்டேன். என்னை மன்னித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனவமதியைத்தந்திடப்பனே. (அன்றிரவே போடியார் கனவில் இறைவன்தோன்றி)

**சிவன்:** பக்தா! உசுமுண்டா! உன்பரபக்தியை மெச்சுகின்றேன்.

**உசுமுண்டாப்போடி:** கொக்கட்டீசா! சொக்கநாதா! இறைவா! சிவனே! ஓம் சிவாயநமக.

**சிவன்:** நீ பந்தபாசமுடன் அனுப்பிய மூன்று மாங்கனிகளும் எனது நாவிற்கு ஞானக்கனிகளாக தித்தித்தன.

**உசுமுண்டப்போடி:** இல்லையே இறைவா 200 கனிகள் அனுப்பிவைத்தேன். அந்த வேலைக்காரன் தான் மூன்று பழங்களைச் சாப்பிட்டுவிட்டான்.

**சிவன்:** அவன் உண்டமூன்று கனிகளும் தான் என் நாவிற்கு தித்தித்தன ஏழைகளுக்குச் செய்யும் உதவி, ஒத்தாசை, தானதருமங்களாகியவையே சிவனுக்குகந்த சிறந்த சமர்ப்பணம் என்பதனை நீயறிந்து கொள்ள வேண்டும். அந்த உண்மை ஏழையை ஏன் அடித்துத்துரத்தினாய். நீ அந்த பக்தியில் சிறந்த சித்தமுடைய பக்தனிடம் மன்னிப்புக்கேட்டு நாளை முதல் அவனை அழைத்து வேலைக்கு அமர்த்திகொள்.

**உசுமுண்டாப்போடி:** சிவனே! எனக்கு நல்ல புத்தியைப் புகட்டி விட்டாய் இறைவா ஏழைகளுக்குச் செய்யும் உதவி, ஒத்தாசை, தான தருமங்கள்தான் கடவுளுக்கேற்ற உண்மையான சமர்பணம் என்று எனக்கு உணர்த்திவிட்டாய். அப்பனுக்கே அப்பனான சுப்பனான அந்த கந்தபெருமான் நாமத்தைக் கொண்ட கந்தனிடம் மன்னிப்புக் கேட்டு, அழைத்து வந்து, அவர் குடும்பத்தையும் என்சொந்தமாக ஏற்றுக்கொள்வேன். அவரினி ஏழையல்ல இறைவா! என்னைப்போலொருவன். (கந்தன் குடிசையை நோக்கி ஓடி செல்லுகின்றார்)

**உசுமுண்டாப்போடி:** கந்தா! ஐயா கந்தா.

**கருணா:** ஆரது? ஐயோ?போடியாரோ? நான் யாரெண்டு தெரியாம கேட்டுட்டன். வாங்க போடியார். என்ன விடயத்திலேயே வந்திரிக்கீங்க.

**உசுமுண்டாப்போடி:** அப்பா, எழும்பலையா மகன்.

**கருணா:** படுத்தாத்தானே எழும்புறதுக்கு, விடிய விடிய அந்த தான்தோன்றியப்பன நெனச்சே அழுதழுது கும்பிட்டுகிட்டிருக்காரு.

**உசுமுண்டாப்போடி:** தயவு செய்து போடியார் வந்திருக்காரெண்டு சொல்லு மகன்.

**கருணா:** அப்பா, உங்களத்தேடிப் போடியாரு வந்திருக்காரப்பா.

**கந்தன்:** என்ன? போடியாரா?

**உசுமுண்டாப்போடி:** ஓம் கந்தா! என்னை மன்னித்து விடையா! உனது கைகளைக் கால்களாக நினைத்துக் கேட்கின்றேன். அந்தச் சிவனே வந்து எனது கனவில நல்ல புத்தி புகட்டி விட்டார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான சமர்பணம் ஏழைகளுக்குசெய்யும் உதவிதான் என்று உங்க மூலம் உணர்த்திட்டாரையா? ஐயா மறுக்காம நீங்க எல்லோரும் எங்க தோட்டத்துக்கே வந்திடுங்கையா. இனி நீங்க வேறு நாங்க வேறில்லை.உங்களுக்கு சமசொத்து, உரிமை எல்லாம் தந்திட்டாரந்த அப்பன் தட்டாம வந்திருங்க.நான் போய் ஒழுங்குகளைச் செய்து வைக்கன். சோலிகளமுடிச்சித்து சுணங்காம வாங்க.

**கந்தன்:** நாங்க இப்பவேவாறம், நீங்க வீட்டுக்குப்போங்க போடியார் இறைவா! எத்தனையோ திருவிளையாடல்களக்காட்டின நீங்க, இந்த ஏழைக்காக இப்படியும் ஒரு திருவிளையாடல செய்தீங்களா சிவனே. எல்லாம் உங்கள் திருவிளையாடல்தான்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் உயர்ந்தவர்



க. ரெட்ணையா
கன்னன்குடா-02
மட்டக்களப்பு

அன்னாளில் அக்கிராமத்தில் மகாலிங்கத்தார் கொடிகட்டிப் பறந்த பண்ணையார். அவ்வூர் மக்களெல்லாம் மகாலிங்கத்தாரை பண்ணையார் என்று செல்லமாய் அழைத்தனர். மகாலிங்கத்தார் பரம்பரை விவசாயி இவர் ஊர்மக்கள் பலருக்கு தொழில் கொடுத்தவர் செல்லம்மாவை வாழ்க்கை துணையாக அடைந்து ஐந்து பிள்ளைகளுக்கு தந்தையானார். மூத்தமூன்று பேரும் ஆண்கள் இளையஇரண்டும் பெண் பிள்ளைகள்.

ஆண்கள் மூன்று பேரும் படிப்பில் அதிக நாட்டம் காட்டவில்லை சாதாரன தரம் வரை படித்து விட்டு விவசாயம் செய்வதிலே ஆர்வம் காட்டினர். மகாலிங்கத்தார் தனது மூன்று மகன்மாரும் தனது பரம்பரை தொழிலுக்கு மாறியது சந்தோசமாக இருந்தது. பெண்பிள்ளைகள் இருவரும் படிப்பில் நல்ல ஆர்வம் காட்டிப்படித்தனர். மூத்த மகன் குமாருக்கு இருபத்தேழு வயதானதும் ஒரு நல்ல விவசாயக்குடும்பத்தில் வரன் பேசி திருமணம்செய்து வைத்தார்.

இரண்டாம் மகன் சிவமும், மூன்றாம் மகன் முரளியும் உழைத்து இருந்த பழையவீட்டை இடித்து விட்டு நவினமுறையில் புதியவீடொன்றைக் கட்டினார்கள் இரண்டு வருடம் கழித்து இரண்டாம் மகன் சிவனுக்கும் ஒரு நல்ல குடும்பத்தில் பெண்பார்த்து திருமணத்தை முடித்து வைத்தார். மூத்த இரண்டு பேரும் திருமணம் செய்து கொண்டதால் எல்லாப்பெறுப்புக்களையும் முரளிதான் பார்க்கவேண்டி வந்தது. தந்தை மகாலிங்கத்தாருக்கு வயதானதால் முன்பு போல் வேலைகளைப் பார்க்கமுடியவில்லை தங்கைமார்களான வனிதாவும் அனிதாவும் பல்கலைகழத்தில் ஒருவரும் உயர்தரத்தில் ஒருவரும் கல்வி கற்றுக்கொண்டிருந்தனர் அவர்களின் படிப்பு செலவையும் முரளிதான் பார்க்கவேண்டி ஏற்பட்டது.

முரளி முன்பு போலில்லை கடுமையாக உழைத்தான் தங்கை இருவரின் படிப்புமுடிந்ததும் இரண்டுபேருக்கும் திருமணம்முடித்து வைத்து விட்டு தான் திருமணம் செய்வதென முடிவெடுத்தான். இன்னுமொரு வீடு கட்டவேண்டி இருந்ததால் அடுத்தவீட்டை கட்டுவதற்கான ஒழுங்குகளையும் மேற்கொண்டான். வனிதாவுக்கு படிப்புமுடிந்த கையுடன் வலயக்கல்வி அலுவலகத்தில் அரச உத்தியோகமும் கிடைத்தது. ஓரளவு முரளியும் வனிதாவும் சேர்ந்து மற்றைய வீட்டைக்கட்டுவித்தனர்.

மகன் முரளி உனக்கும் வயதாகிறது உனக்கும் கலியாணத்தை செய்து வைக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றோம் என்ன சொல்கிறாய் என்றார் தந்தை, இல்லை அப்பா தங்கைமார் இரண்டு பேருக்கும் திருமணம் செய்து வைத்துவிட்டுத்தான். நான் திருமணம் செய்வதாகவுள்ளேன். முதலில் தங்கை வனிதாவுக்கு மாப்பிளை பார்க்க தொடங்குவோம். சரிமகன் உன் விருப்பம் போல் செய்வோம் என அம்மாவும் அப்பாவும் ஒத்துக்கொண்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரளி புரோக்கர் மூலம் மாப்பிளை தேடத் தொடங்கினான். புரோக்கர் மூன்று நான்கு பேரின் புகைப்படத்தைக்காட்டி அவர்களின் குடும்ப நிலவரத்தையும் எடுத்துக்கூறினார். முரளி தாய் தந்தையிடம் காட்டிப்பேசினான். ஒரு மாதிரியாக ஆசிரியர் தொழில் புரியும் மாப்பிள்ளையொன்றைத் தேர்ந்தெடுத்தனர் வீடு வளவும் பத்து ஏக்கர் வயலும் தருவதாக கூறி ஒப்பு கொண்டனர். திருமணமும் நல்ல படியாக நடந்து முடிந்தது. தங்கை அனித்தாவின் திருமணம் மட்டும் நடந்து விட்டால் அடுத்து முரளிதான். முரளி தாய் தந்தையிடம் சொல்லாமல் கனகா எனும் பெண்ணை காதலிக்க தொடங்கினான். கனகா கனவுக்கன்னிமாதிரி மிகவும் அழகானவள் அன்பானவள் காதலிக்கதொடங்கிய சில மாதங்களின் பின்புதான் கனகாவின் தந்தையொரு சலூன் தொழிலாளியென முரளிக்கு தெரிய வந்தது.

இருந்தும் கனகாவின் அழகையும் அன்பையும் அவனால் மறக்க முடியவில்லை வாழ்ந்தால் அவளுடன் வாழணும் இல்லை யென்றால் கலியாணம் செய்வதில்லை என்ற முடிவுக்கு வந்தான். இரண்டு வருடங்கள் உருண்டோடின அனிதா உயர்தரப்படிப்புடன் படிப்பை நிறுத்திவிட்டு வைத்தியசாலையில் பணிப்பெண்ணாக வேலைக்கு சேர்ந்தாள். வேலைக்கு சேர்ந்து ஆறு மாதத்திலே அதே வைத்தியசாலையில் தொழில் புரியும் ஒருத்தன் அனித்தாவைத் திருமணம் செய்ய முன் வந்தான். எல்லோரின் விருப்பத்துடனும் மூத்த மாப்பிள்ளைக்கு கொடுத்தது போல் இளைய மாப்பிள்ளைக்கும் பத்து ஏக்கர் வயலும் வீடு வளவும் கொடுத்து திருமணத்தை முடித்து வைத்தனர்.

முரளியின் தாய் தந்தைக்கும் வயதாகிவிட்டது. இளைய மகளுடன் தங்கிவிட்டனர் மகன் முரளி எங்களுக்கும் வயதாகிவிட்டது உனக்கும் கலியாணத்தை முடித்து விட்டால் நாங்களும் நிம்மதியாக கண்ணை மூடிடுவம் என்றார் மகாலிங்கத்தார். அப்பா தங்கை திருமணம்முடிந்து மூன்று மாதம் முடியவில்லை அடுத்த ஆண்டில் பார்ப்பம் என்று சமாளித்து விட்டான்.

பல மாதங்கள் கழிந்து அடுத்த ஆண்டும் வந்தது ஒரு நாள் எல்லோரும் வீட்டில் இருக்கும் போது மகாலிங்கத்தார் மீண்டும் முரளியின் கலியாணம் பற்றிப் பேசத்தொடங்கினார். மகன்முரளி தங்கைச்சிமார் இருவருக்கும் கொடுத்த வயல் போக மிகுதி பன்னிரெண்டு ஏக்கர் உள்ளது உனக்கும் திருமணத்தை முடித்து விட்டு இருக்கும் வயலை ஆண்பிள்ளைகள் மூன்று பேருக்கும் பிரித்து கொடுக்கவுள்ளேன் என்றார். முரளிக்கும் ஒரு நல்ல பெண்ணை பார்க்கவேண்டும் என்றாள் செல்லம்மா. முரளி ஒரு மாதிரியாக துணிவை வரவழைத்து கொண்டு பெண் பார்க்க வேண்டிய தேவையில்லை அம்மா என்றான் முரளி.

அப்படியென்றால் நீயே பார்த்து விட்டாயா என்றாள் செல்லம்மா. ஆம் அம்மா என்றான் முரளி அப்படியா யார் அண்ணா எங்கள் அண்ணி என்றாள் அனிதா பக்கத்துார் கனகசபையின் மகள் கனகா என்றான்முரளி அப்படியா அண்ணா எங்கள் பாடசாலையில் தான் எனக்கு முதல் வகுப்பில்தான் படித்தவள். மிகவும் அழகானவள் அண்ணாவின் தெரிவு பரவாயில்லை என்றாள் அனிதா.

என்ன மகன் முடிவெட்டும் கனகசபையின் மகளா என்றார் மகாலிங்கத்தார். ஆம் அப்பா முன்பு அவர் முடிவெட்டுபவர் என்று எனக்கும் தெரியாது பின்புதான் அறிந்தேன் மிகவும் நல்லவர்கள் அப்பா என்றான் முரளி போயும் போயும் ஒரு அம்பட்டண்ட மகளையா பார்த்துள்ளாய் என்றாள் செல்லம்மா. தம்பி இந்தக் கலியாணம் நடக்காது நான் பார்க்கும் பெண்ணைத்தான் கட்டவேண்டும் என்று உறுக்கமாக கூறி விட்டார் மகாலிங்கத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முரளிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை கொஞ்ச நாள் கழித்து தாய் தந்தையிடம் சொல்லாமல் கலியாணம் செய்து கொண்டான். முரளி மட்டும் வீட்டுக்கு வந்து தாய் தந்தையைப் பார்த்து செல்வான் முன்பு போல் எவரும் கதைப்பதில்லை. பல மாதங்கள் கழிந்து விட்டன திடீரென்று ஒரு நாள் மகாலிங்கத்தாருக்கு உடம்புக்கு சரியில்லாமல் நோயால் துடித்தார். ஆட்டோவில் ஏற்றிச்சென்று அரச வைத்தியசாலையில் சேர்த்தனர். நான்காம் வாட்டில் அனுமதிக்கப்பட்டார். இதையறிந்த முரளி கனகாவுடன் வைத்தியசாலைக்கு சென்றான். கனகா வீழ்ந்தடித்து மாமா மீது அன்பு காட்டி பணிவிடைசெய்தாள் ஒவ்வொரு நாளும் தவறாமல் காலையும் மாலையும் சென்று உணவு கொடுத்து உடைகளையும் மாற்றி அழுக்கான உடைகளை கழுவி தந்தையைப் பார்த்துக்கொள்வது போல் அரவணைத்து கவணித்து வந்தாள்.

நாட்கள் பல கடந்தன மருந்தைவிட கனகாவின் அன்பும் அரவணைப்பும் தான் மகாலிங்கத்தாரைக் குணமடைய வைத்தது. மற்றைய இருமருமகளும் இரண்டு மூன்று நாட்களுக்கு ஒருமுறைதான் வந்து பார்த்து சென்றனர் சரியாக பதினெட்டு நாளில்தான் முற்றாக குணமடைந்து வீட்டுக்கு செல்ல வைத்தியர்கள் அனுமதி வழங்கினர். வீட்டுக்கு வந்த மகாலிங்கத்தார் கனகாவின் அன்பும் அரவணைப்பும் இல்லாமல் வாடினார். வைத்தியசாலைக்கு வந்த கனகா மகாலிங்கத்தார் வீட்டுக்கு வரவேயில்லை.

ஒரு நாள் முரளி தந்தையைப் பார்க்க வந்தான் முரளியை கண்ட மகாலிங்கத்தார். தம்பி முரளி உடனே சென்று எனது இளைய மருமகளைக் கூட்டித்து வா என்றார். முரளி திகைத்து போய் நின்றான் தம்பி மனிதரில் உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்றில்லை அவரவர் செய்யும் தொழிலை வைத்துதான் அந்தசாதி இந்தசாதி என்று வகுத்தனர். உனது பொஞ்சாதி உள்ளத்தால் உயர்ந்த சாதிதான் உருவத்தால் உயர்ந்தவர்கள் உயர்ந்தவர்களில்லை உன்மையான அன்பும் பாசமும் உள்ளவர்கள்தான் உயர்ந்தவர்கள் என்றார் அங்கிருந்த அனைவரும் அதற்கு தலையாட்டினர் முரளி சந்தோசத்துடன் கனகாவை அழைத்து வரச்சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் பண்பாட்டியலில் வெற்றிலை பெறும் முக்கியத்துவம்



இராசையா கிருஸ்ணப்பிள்ளை

**தமிழர்களின் கலாசார நாகரிகத்துடனும் சமயத்துடனும் இரண்டரக்கலந்து விட்ட ஒரு பயிர் வெற்றிலையாகும் (வெற்றி இலை) மங்கல நிகழ்சியாயினும், அமங்கல நிகழ்ச்சியாயினும் தாம்பூலம் கொடுப்பது அதனுடன் பிணைக்கப்பட்டுள்ளது. விஞ்ஞானம் எவ்வளவு வளர்ச்சியடைந்தாலும் மக்களின் வாழ்க்கையோடு இணைந்துவிட்ட பயிராக வெற்றிலை விளங்குகின்றது. வெற்றிலை மீது அஞ்சனம் தடவிக்குறி சொல்லும் வழக்கம் மிக பழமையான தொண்றாகும்.**

இந்து வாழ் மக்களின் கலாசார பண்பாடுகளில் மிக முக்கியமானதும் அத்தியாவசியமானதுமாக காணப்படுகின்ற பல வற்றுல் முதன்மை நிலையில் காணப்படுவது **வெற்றிலை** ஆண்மீகத்திலும் அன்றாட வாழ்க்கையிலும் அவசியமாகவுள்ளது வெற்றிலை தமிழர் திருநாளாம் பொங்கல், சித்திரை, தீபாவளி விஷேடதினங்களிலும் வீடுகளிலும் ஆலயங்களிலும் நடைபெறும பூசை புனஸ்காரங்களிலும் கூட வெற்றிலை இல்லாமல் எதுவும் நடைபெறமாட்டாது இப்படி ஒவ்வெரு சின்ன சின்ன விக்ஷயங்களிலும் நமது கலாசார பண்பாட்டில் வெற்றிலைக்கு முக்கியத்துவம் உண்டு. இந்துத்தமிழர்களின் வீடுகளில் ஏதாவது விருந்து விசேடம் என்றாலும் சாப்பாடு இடம்பெறுகின்றது இல்லையோ, வெற்றிலை, பாக்கு பரிமாற்றம் இடம்பெறும். திருமணம் வளைகாப்பு, பூப்புனித நீராட்டு விழா போன்றவைகளில் கூட சீர் வரிசைத் தட்டுகளில். வெற்றிலை, பாக்குத்தட்டுதான் முதலிடம் வகிக்கும். இந்துக்கள் வீடுகட்டும்போது ஒரு மடைவைத்துத்தான் தொடங்குவார்கள். அம்மடையில் சாதாரணமாக வாழைஇலையின் மேல் வெற்றிலை வைத்து அதில் பாக்கு, பழம், நறுமணம்வீசும்மலர்கள், திருநீறு, சந்தனம், குங்குமம் வைப்பார்கள் சந்தணக்குச்சி சாம்பிராணி தீபம்காட்டி கற்பூரதீபம் காட்டி கிரிகைகள் நடைபெற்று இறைவனை வணங்கி இறைவனின் ஆசிர்வாதத்துடன் வீடு கட்டுவதற்கு தொடங்குவார்கள் வீடுகுடி புகுவதற்கு ஒவ்வொரு அறையிலும் வரவேற்பு அறையிலும் நிறைகுடத்துடன் வெற்றிலை பாக்கு பழத்துடன் பூசை புனஸ்காரங்கள் இடம் பெறும்.

வெற்றிலையில் இரண்டுவகையுண்டு **நீர்வெற்றிலை** மற்றும் **மலை வெற்றிலை** என இரண்டுக்கும் மருத்துவக் குணம் உண்டு அதில் நீர் வெற்றிலையில் சித்தவைத்திய குணமுண்டு களுதாவளை, குருக்கள்மடம், செட்டிபாளையம் போன்ற கிராமங்களில் வெற்றிலை செழிப்பாக வளரும் நீர்வெற்றிலை மணல்மேடு அமைத்து அம் மணல்மேட்டை சுத்திவர காயான் (மிளாறு) கம்புகளால் வேலியடைத்து ஒவ்வொரு வெற்றிலைக்கொடிக்கும் ஒன்று அல்லது இரண்டு கம்பு வீதம் குத்தி நாட்டிவைப்பார்கள் நீர் தேங்கிநிக்காதவாறு நீர் பாச்சுவார்கள்.

- ☑ கோயில்களில் வெற்றிலை பாக்கு இல்லாமல் கிரிகைகளும் வழிபாடுகளும் முற்றுப்பெறாது
- ☑ வீடுகளிலும் ஆலயங்களிலும் இடம் பெறும் கிரிகைகளிலும் வழிபாட்டின் பின் குருக்கள்மாருக்கு கொடுக்கும் தட்சனை வெற்றிலையில் வைத்து கொடுப்பது மரபுவழியாக இடம்பெற்று வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கோயில்களில் இடம் பெறும் பூசையின் உபயகாரர்கள் தலைவர்களுக்கு வழங்கப்படும் காளாஞ்சியில் வெற்றிலை, பாக்கு, பழம், பூ முக்கியம்மானது.
- வீடுகளில் இடம்பெறும் பொங்கல், சித்திரை, தீபாவளி, வாணிவிழாதினங்களில் வெற்றிலை இல்லாமல் எதுவும் இடம்பெறாது.
- வீடுகளில் இடம்பெறும் பொங்கள் திருநாள், சித்திரைவருடப்பிறப்பு மற்றும் தீபாவளி தினங்களில் இடம்பெறும் கைவிக்ஷேடத்தின் போது வெற்றிலையில் நெல், பாக்கு, பழம், பூ, தங்கம், நாணயம் என்பன சேர்த்து கொடுப்பதுமரபு.
- பூப்பு நீராட்டுவதற்கு வெற்றிலை வைத்து கேட்பதற்கு சாஸ்த்திரியிடம் சென்று நாள் திகதி நல்லமுகூர்த்தம் குறித்துக்கொள்வார்கள்.
- பூப்பு நீராட்டிலும் இறைவழிபாட்டிலும் நிறைகுடத்தின்முன் வெற்றிலை, பாக்கு, பழம், பூக்கள் வைப்பது மரபு.
- திருமணப்பேச்சுக்கு முன் சாஸ்த்திரியிடம் வெற்றிலை பாக்குவைத்து மணமகள் அல்லது மணமகன் எந்த திசையில் வாழ்கிறார் எப்படி பட்டவர் என்பதை அறிந்து கொள்வார்.
- திருமணப்பொருத்தம் பார்ப்பதற்கும் வெற்றிலை (வெற்றிலை ஆருடம்) வைத்து கேட்பதற்கு சாஸ்த்திரியிடம் போய் கேட்பார்கள் கலியாணநாள் முகூர்த்தம், தம்பதிகளிள் கால்மாறிப் போதல் போன்றவற்றை குறித்துகொள்வார்கள்.
- ஆஞ்சநேயர் வழிபாட்டில் ஆஞ்சநேயருக்கு வெற்றிலை மாலை போட்டு வழிபடுவதும் வழமையாகிவிட்டது.



பௌத்த சமயத்தினர் விசேட நிகழ்வுகளில் பிரதம அதீதிகளை அல்லது பிரமுகர்களை வரவேற்கும் போது வரவேற்கப்படுபவர்களுக்குவெற்றிலையின் அடிப்பாகம் இருக்கதக்கதாகவும் வரவேற்பவர்கள் வெற்றிலையின் நுனிபகுதி தங்களது மார்வு பக்கமாகவும் வைத்து தலைகுனித்து வெற்றிலையை கொடுத்து கௌரவிப்பார்கள். திருமணநிச்சயார்த்தம் முடிப்பதற்கு வெற்றிலை, பாக்கு, பழம், மஞ்சள், குங்குமம், பூக்கள் பல உணவுபொருக்களுடன் செல்வது மரபுவட்டா வைத்தல் என்பது தமிழர்மரபு.

திருமண நிச்சயார்த்தம் முடிந்தாலும் தாலிக்கு பொன் உருக்குதல் நிகழ்வு ஒன்று நடைபெறும் அதில் மாப்பிள்ளையின் பெற்றோர் ஒரு தாம்பூளத்தில் வெற்றிலையில் ஒரு பவுண் தங்கம் வைத்து மாப்பிள்ளையிடம் கொடுத்து விடுவர் மாப்பிள்ளை இறைவனிடம் பிரார்த்தம் பெற்று பெற்றோரின் ஆசிர்வாதத்துடன் ஆசாரியிடம் பொன் உருக்கக் கொடுப்பார்கள் ஆசாரிக்கு ஒரு தழிசையில் வெற்றிலை பாக்கு, பழம், பூக்கள் வைத்து பணத்தையும் கூலிக்காக கொடுப்பது மரபு.

வெற்றிலை போடுவதற்கு மக்கள் பயன்படுத்திய வெற்றிலஉரல், மரத்தினாலும் வெண்கலத்தினாலும் காணப்பட்டது. பல வருடங்களுக்கு முன்னர் ஆலய உற்சவகாலங்களிலும், சினிமா தியேட்டர்களிலும், மக்கள் கூடும் இடங்களிலும் "பீடாபீடா" என்று சொல்லிக்கொண்டு ஒரு கையில் ஒரு சிறிய மணியை அடித்துக்கொண்டு ஒருவர் வருவதைக் காணக்கூடியதாக இருந்தது. பீடா என்றால் வெற்றிலைச்சுருள் அதில் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு பல நிறத்திலான தேங்காய்ப்பூ, சீமைப்பார்க்குச்சீவல் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமண அழைப்பிதல்(கலியாணக்காட்) காட் முறைவருவதற்கு முன் திருமணம் செய்ய இருப்பவரின் வீட்டில் ஒரு வரும் பெண்வீட்டார் ஒரு வரும் சேர்ந்து ஒரு வெண்கல வட்டாவில் பல வெற்றிலைகள், பாக்கு, பழம், மஞ்சள் வைத்து ஒரு வெள்ளைத்துணியால் மூடி திருமண அழைப்பிதலுக்காக தங்கள் உற்றார் உறவினர் நண்பர்கள் வீடுகளுக்குச் சென்று திருமணநாள் முகூர்த்தம் என்பவற்றை வெற்றிலை வட்டாவை வைத்து கூறுவார்கள் இந் நிகழ்வை வெற்றிலை வட்டா வைத்தல் என்பது தமிழர்மரபு.

தமிழ் மக்களிடமும், சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களிடமும் காணப்படும் மரபு வீடுகளுக்கு உறவினர்கள் அல்லது நண்பர்கள் வந்தால் முதலில் உட்கரவைத்து தண்ணீர்கிளாஸ் அல்லது தண்ணீர் செம்பு வைப்பார்கள் (இது ஏன் என்பது எத்தனை பேருக்குத் தெரியும்) வீட்டுக்கு வந்தவர்கள் வாயில் வெற்றிலை போட்டு வந்து இருப்பார்கள். அவர்கள் வாயை கொப்பளிப்பதற்காக (வாயைக் கழுவுவதற்காக) தண்ணீர்கிளாசை எடுத்து வாயை கழுவுவார்கள் பின் வீட்டுகாரர்கள் சிற்றுண்டி தண்ணீர் தேனிர் பரிமாறுவார்கள் இவை தற்போதும் கிராமபுரங்களில் வெற்றிலை வட்டாவும் பரிமாற்றுவார்கள் இது மரபு.





திருமணமேடையில் கிரிகைகள் இடம்பெறும் வேளையில் பெண் மாப்பிள்ளைக்கு வெற்றிலை, பாக்கு வைத்து கொடுக்கபடும் நிகழ்வும் உண்டு. மேலும் வெற்றிலையை காமம்பெருக்கி என்றும், மண்ணின் வேந்தன், தாம்பூலம் என்றும் சித்தவைத்தியம் கூறுகின்றது. வெற்றிலைசாறு பசியைத் துாண்டி, உடலில் உள்ள வாயுவை போக்கி, அஜீரணத்தை கட்டுப்படுத்தி உடலுக்கு வெப்பத்தையும் உண்டாக்கும் தன்மையும் உண்டு இனியகுரல்வளத்துக்கு வெற்றிலையும் முக்கிய பங்குண்டு எனலாம்.

பிள்ளை பிறந்து மூன்றாம் நாள் பிள்ளைக்கு பதிவு வைப்பதற்கு வெற்றிலைவைத்து கேட்கப் போவது இன்றும் காணக்கூடியதாக உள்ளது பிள்ளையின் பிறந்த நாள் திகதி நேரம் பிள்ளையின் தந்தையின் பெயர் என்பவற்றை சாஸ்திரியாரிடம் கூறினால் வெற்றிலையையும் பாக்கையும் எண்ணிபார்த்து பஞ்சாங்கத்தையும் பார்த்து பிள்ளையின் எதிர்காலம் காலபலன் குறிப்பும் எழுதிக்கொடுத்து பிள்ளைக்கு பெயருக்குரிய முதல் எழுத்துக்களையும் குறித்துக் கொடுத்து விடுவார்.

வெற்றிலையை நம்முன்னோர்கள் இலச்சுமிக்குரிய பொருளாக கருதினர். மேலும் வெற்றிலை போடுவதற்கும் சில (ஐதிக) வரம்புகள் உண்டு, பல்துலக்காமல் வெற்றிலை போடக்கூடாது, நடுநரம்பு, காம்பு ஆகியவற்றைகிள்ளிய பிறகே வெற்றிலையை பாவிக்கவேண்டும். **"வெற்றிலைக்கு நரம்பில் விஷம் எள்ளுக்கு தோலில் விஷம்"** என்பது உண்மை. வெற்றிலையை வெளிப்புறமாக மடிக்கக்கூடாது கணவனுக்கு மனைவிதான் வெற்றிலையை மடித்துக் கொடுக்கவேண்டுமே தவிர கணவன் மனைவிக்கும், மகன் தாயாருக்கும், மகள் தந்தைக்கும் வெற்றிலையை மடித்துக்கொடுக்ககூடாது. வெற்றிலை நுனியில் பாவமும் வெற்றிலைத்தண்டில் வியாதியும் (மனித உடலுக்கு தேவையற்ற சத்துக்கள் உள்ளது) நரம்பில் புத்திக்குறைவும் உள்ளதால் இவற்றை நம் முன்னோர்கள் வெற்றிலை உண்ணும் போது (தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களிடமும் இப்பண்பாடுகளை இன்றும் காணலாம்) வெற்றிலைநுனி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


(வெற்றிலைக் கொடி பற்றி வளர்வதற்குரிய காயான் கம்புகள்)

நடுநரம்பு, தண்டுகளை கிள்ளி எறிவதையும் வெற்றிலையின் பின் புரத்தில் சுண்ணாம்பு பூசுவதையும் காணலாம்.காலையில் சாப்பாட்டின் பின்பு வெற்றிலை மற்றும் பாக்கும் சுண்ணாம்பு சிறிதளவு எடுத்து சாப்பிடுவதனால் உடலிலுள்ள சிலோற்பணம் குறைவடையும். மதியம் சாப்பாட்டின் பின்பு வெற்றிலை மற்றும் பாக்கு சமபங்காகவும் மிகச்சிறிதளவு சுண்ணாம்பு எடுத்து சாப்பிட்டால் உடலிலுள்ள பித்தம் குறைவடையும்.

இரவு சாப்பாட்டின் பின்பு வெற்றிலை அதிகமாகவும் பாக்கு குறைவாகவும் சுண்ணாம்பு மிகச்சிறிதளவும் எடுத்துச்சாப்பிட்டால் உடலிலுள்ள வாதநோய் குறைவடையும் (வெற்றிலை 2-3 சாப்பிடுதல் நல்லது) மரணவீடுகளில் வெற்றிலைத்தட்டுக்கு முக்கியத்துவம் கொடுப்பது இன்றியமையாதது மரணவீட்டில் ஓலைப்பெட்டியில் அல்லது ஓலையால் செய்யப்பட்ட தட்டில் சாப்பிடுதல் நல்லது)

மரணவீடுகளில் வெற்றிலைத்தட்டுக்கு முக்கியத்துவம் கொடுப்பது இன்றியமையாதது மரண வீட்டில் ஓலைப்பெட்டியில் அல்லது ஓலையால் செய்யப்பட்ட தட்டில் வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு வைத்து பரிமாறுவது மரபு வெற்றிலை தாய்பால் பெருக்கியாகவும் வாய் நாற்றத்தை போக்குவதோடு சிறுநீர் பெருக்கியாகவும் உள்ளது.

வெற்றிலை போடுவதிலும் ஒரு சிறிய ஐதீக முறையும் நம்மகளிடையே காணப்படுவது உண்டு வெற்றிலையில் காம உணர்வுதுாண்டக் கூடிய சக்தி இருப்பதால் இளைஞர்கள் யுவதிகள் திருமணமாகாதவர்கள் வெற்றிலை போடுவதை பெரியோர்கள் விரும்புவதில்லை இதனால் கோழி கொத்திடும் அல்லது வழியில் மாடு முட்டும் என்று ஐதீகக்கதைகளை கதைத்து மிரட்டுவார்கள் விருந்து விசேடதினத்திலும் வெற்றிலை இவர்களுக்கு கொடுப்பது இல்லை. விரும்பியோ விரும்பாமலோ புதுதிருமணதம்பதிகள் கட்டாயமாக சாப்பாட்டின் பின்பு வெற்றிலை போடும் பழக்கத்தை முன்னோர்கள் ஊக்கப்படுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய கூத்தரங்கில் பெண்கள் பங்கு பற்றாமைக்கான சமூக, சமய கட்டமைப்புக்கள்.

## (மண்முனை மேற்கு பிரதேச கூத்துக்களினை அடிப்படையாக கொண்டது)



க.புவிக்குமார்
பருத்திச்சேனை

மனிதனின் வாழ்க்கை உயர்வானது அரிதானது. வாழ்வதென்பது இயற்கை மனிதனுக்கு வழங்கிய பெரும் கொடை. இதன் பிரகாரம் அனைத்து விதமான வசதிகளும் பெற்ற மனித குலம், இவ் இயற்கை ஆற்றலை சமமாகப் பகிர்ந்து வாழ்வை அனுபவிக்காமல் தமக்குள்ளே பாகுபாடுகளை ஏற்படுத்துகின்றன.

பாலினம் பண்பாட்டுக் கட்டமைப்பாக சமுதாயத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. ஆண்கள், பெண்கள் என உருவாக்கினாலும் உயர்வு, தாழ்வு என்கின்ற முரண்பாடுகளினாலேயே கட்டமைக்கப்படுகின்றது. பெண்கள் பிறப்பு முதல் இறப்பு வரை தங்களது வாழ்வில் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் ஏராளம். மிகப் பழங்காலத்தில் பெண்களே குடும்பத்தினை தலைமை தாங்கி, வழி நடாத்தி வந்திருக்கின்றனர். பின்னர் ஆணாதிக்கத்தினால் பெண்கள் பல்வேறு வேதனைகளை அனுபவிக்க வேண்டியதாக அமைகின்றது. அறிவியல் வளர்ச்சியும், நாகரீக வளர்ச்சியும் பெண்களிற்கு பல சிக்கல்களை பெருக்கி வருகின்றன. இதனால் இவர்கள் மனதளவில் பல மாற்றங்களுக்கு உள்ளாகின்றனர். தாய்வழிச் சமூகத்திலிருந்து தந்தை வழிச் சமூகத்திற்கு மாறிய பின்னர் பாலின மனதிலும் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியது.

பல கஷ்டங்களை அனுபவித்துக் கற்று பயிற்சிகள் பெற்றாலும் ஆண்கள் உடல் வலிமை உடையவர்கள் என்றும், பெண்கள் வலிமை குறைந்தவர்கள் என்றுமே நம்பப்பட்டு வந்திருக்கின்றது. இதன் ஒரு வழித் தோன்றலாகத்தான் கலைச் செயற்பாடுகளிலும் பெண்கள் பங்கு பற்றுவதை வரையறை செய்து அவற்றிலிருந்து விலக்கி வைத்து ஆண்கள் மட்டுமே அச்செயற்பாட்டை முன்னெடுக்க முயன்றுள்ளனர்.

ஏடறியா, எழுத்தறியா உள்ளங்களிற்குள்ளே பல்வேறு வகையான உணர்வுகள் புதையுண்டு கிடக்கின்றன. சமூக மேலாண்மை சக்திகளாலும், அரசியல் சமூகப் பொருளாதார சீர்கேடுகளாலும், தனிப்பட்ட குடும்ப உறவு சிதைவுகளாலும் பெண்கள் மனதளவில் பாதிக்கப்பட்டுள்ளார்கள். ஒடுக்கப்பட்டு, அடக்கப்பட்டு, விளிம்பு நிலைக்கு தள்ளப்பட்டு, வாழ்வில் அல்லல்பட்டு தவிக்கும் பெண்களின் உணர்வுகளிற்கு உரம் ஊட்டுபவைகளாக நாட்டார்பாடல்கள் அமைந்துவிடுகின்றன. ஆணுக்குச் சமமாக தற்போது பெண்களைப் பார்த்தாலும் அவர்கள் முன்னைய காலங்களில் மேற்கூறியவாறே இருந்துள்ளனர். ஆனால் ஆண்களின் ஆதிக்கத்தினால் அவர்கள் அடங்கி இருக்க வேண்டிய நிலையே காணப்பட்டது. இருப்பினும் அவர்களிற்குள்ளே உள்ளார்ந்தமான கலை சார்ந்த வளர்ச்சிகள் இருந்து கொண்டே வந்துள்ளது. பெண்களது அடிமனதின் எண்ணங்களையும், கனவுகளையும் உணர்வுகள் மூலம் தங்குதடையில்லாமல் வெளிப்படுத்த கூத்தரங்கு அனுமதிக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்களையோ அல்லது பெண்களையோ மையப்படுத்தியதாக கூத்துக்கள் எழுதப்பட்டிருந்தாலும் பெண்களின் பாத்திரங்களையும், ஆண்களே வேடம் தரித்து ஆடியுள்ளனர். கட்டமைக்கப்பட்ட கதைகள் மூலம் கணவனுக்கு கட்டுப்பட்டவளாகவும், வீட்டை விட்டு வெளியுலகிற்கு வர முடியாதவர்களாகவும் முடங்கி வாழவேண்டிய நிலைக்கு பெண்களின் வாழ்க்கை அமைந்திருந்ததோடு கடைப்பிடிக்க கட்டாயப்படுத்தப்படுகின்ற கட்டுப்பாடுகள் பெண்களினை கூத்தரங்கினுள் வரமுடியாதளவிற்கு கட்டமைத்தன.

**சமூகம் சார்ந்த கட்டமைப்புக்கள்.**

பாரம்பரிய கூத்தரங்குகள் மனிதனின் ஆளுமைத்திறன் விருத்திகளினை வெளிப்படுத்தவும், கூட்டாக சேர்ந்து இயங்குவதற்கான சூழலினையும் இயல்பாகவே உருவாக்கியது. சிறியவர் முதல் பெரியவர் வரை இணைக்கும் சிறந்த தொடர்பாடல் பண்புடையதாய் சமூகத்தின் மத்தியில் தொடர்ந்தும் இயங்கி வருகின்றது.

இவ்வாறாக சமூகத்தினை இணைக்கும் செயற்திறன்மிக்க அரங்கச் செயற்பாட்டில் பெண்களின் பங்குபற்றுதல் பற்றிய வழிப்படுத்தல்கள் முக்கியமானது. ஆகும் பாரம்பரிய கூத்தாற்றுகைகளில் பெண்களின் பங்களிப்பு என்பது அரங்கிற்கு வெளியிலே இடம்பெற்றதினை அவதானிக்கலாம். பெண்கள் கூத்துப் பார்வையாளர்களாகவும், கூத்தாடும் தனது உறவினர்களிற்கு உதவி வழங்குபவர்களாகவும், உணவு மற்றும் சிற்றுண்டி வகைகள் தயாரிப்பவர்களாகவும் செயற்பட்டதோடு பெண்கல்வி கற்கத் தொடங்கிய பின்னர் எழுத, வாசிக்கத் தெரியாத தனது உறவினர்களிற்கு கூத்துப் பாடல்களை சொல்லிக் கொடுப்பவர்களாகவும் செயற்பட்டுள்ளனர். பெண்களை கட்டமைக்கும் ஆண்களின் சமூகம் சார்ந்த கட்டமைப்பு கூத்தாற்றுகையில் பெண்களின் இயங்கு தன்மையை வரையறை செய்தது.

வீட்டுப்பணி, குழந்தை பிறப்பு, வளர்ப்பு, பாதுகாப்பு போன்றவைகளே பெண்களின் பணி என்ற எண்ணங்களினாலும் திருமணமான பெண்களாயின் கணவன் எத்தனை கொடுமைகள் செய்தாலும் அவனுக்கு அடிபணிந்து இருக்கவேண்டும் அவனை எதிர்த்து பேசக்கூடாது போன்ற எண்ணங்களைக் கொண்டவர்களாக ஆண்கள் திகழ்ந்தமையினால் பெண்களை உள்வாங்க மறுத்து விட்டனர்.

பெண்கள் மரபுவழிப்பட்ட பழக்க வழக்கங்களில் இருந்து மாறிவிடக் கூடாது. குறிப்பாக ஆண்களுடன் சிநேகிதம் கொள்ளக்கூடாது. ஆண்களுடன் இணைந்து எந்த இடத்திலும் செயற்படக் கூடாது என்பதுடன் அவ்வாறு செயற்பட்டால் சமூகத்தின் இழிநிலை பேச்சுக்களுக்கு ஆளாகி விடக் கூடும் என்ற அச்சத்தினாலும் அரங்க ஆற்றுகைகளில் அனுமதிக்கவில்லை.

ஆண்களை விட பெண்கள் மென்மையானவர்கள், தாழ்ந்தவர்கள் என்ற சிந்தனை வெளிப்பாடுகளினால் வீட்டு வேலை செய்வதே இவர்களின் பணி என்ற எண்ணமும் சமூகம் சார்ந்த கட்டமைப்புகளாக விளங்கின. அத்துடன் பெண்கள் வெளி இடங்களிற்குக் கூட செல்ல முடியாத நிலை. எடுத்துக்காட்டாக கல்வி கற்கக்கூடச் சுதந்திரமில்லை. பெண்ணிற்கு படிப்பைவிட திருமண வாழ்க்கையே முக்கியம் என்கின்ற கருத்தாக்கம் நிலவியமையினால் அரங்குகள் அனைத்திலும் அவர்களின் வருகையினை சமூக நோக்கோடு நிறுத்திவிட்டார்கள்.

ஆணின் எண்ணங்கள், ஆணினால் உருவாக்கப்பட்ட சட்டங்கள், புனைவுகள் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணின் அடையாளங்களை மறைத்து விட்டன என்கின்ற பெண்ணியவாதிகளின் கருத்துக்கு அமைய படித்த பெண்கள் கூட தந்தை வழிச் சமூகத்தின் ஆதிக்க சக்திகளிற்கு கட்டுப்பட்டு மரபுவழி முறையினை பின்பற்றுபவர்களாக தமது வாழ்க்கையினை நடாத்தியுள்ளனர். இத்தகைய பெண்ணின் மனதில் பதிந்துள்ள அவளது ஏக்கம், வலி, உடல், உளம் சார்ந்த உணர்வுகள், துயரங்கள் போன்றவை கலாசார பண்பாட்டு விழுமியங்களின் போர்வையினால் வெளிப்படுத்தப்படாமல் கட்டுண்டு கிடந்தன.

பெண்களின் பேச்சானது பலத்த பண்பாட்டு தடைகளுக்கு ஆளாக்கப்படுகிறது. அவை அடக்கப்பட்டு அடி மனதிலே தங்கி விடுகின்றன. சமூகத்தில் ஆண்களும், பெண்களும் எவ்வாறு வாழ வேண்டும் என்ற வரையறைகளை ஏற்று அவர்கள் வாழும் வாழ்க்கை அச்சமூகத்தினால் உருவாக்கும் அனைத்து விடயங்களிலும் தங்கியிருக்கும். இவ்வாறாக பெண்களிற்கென சமூகம் வகுத்த கட்டமைப்புக்கள் பெண்களின் செயற்பாடுகள் முழுவதிற்கும் முற்றுப்புள்ளியாய் அமைந்தது எனலாம்.

கணவன், மனைவி உறவில் கணவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் பெண் அவனை ஏற்றுக் கொண்டு இல்லறம் நடாத்த வேண்டுமென்ற சமூக எதிர்பார்ப்பு மக்கள் மத்தியில் நிலவியுள்ளன.இவ்வாறான செயற்பாடுகளின் மூலமாகத்தான் கூத்தரங்குகளில் பெண்களின் வருகை வரையறை செய்யப்பட்டு ஆண்கள் மட்டும் அரங்கச் செயற்பாடுகளினை முன்னெடுத்து வந்திருக்கின்றார்கள்.

முற்பட்ட காலங்களில் பெண்களின் இலக்கு கற்புக்கரசி என்கின்ற உயர்ந்த அந்தஸ்தினைப் பெறுவதாகும்.அதன் அடிப்படையிலே "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" எனும் கூற்றினைக் குறிப்பிடலாம். அதன் பெண்கள் ஆண்களிற்கு அடிமையாக இருப்பதே உயர்வான கற்பு என்கின்ற மனோநிலை வலியுறுத்தப்பட்டது. பெண்ணானவள் ஒரு பேதை, அறிவற்றவள், கருத்துச் சொல்லும் சுதந்திரம் அற்றவள், ஆணுக்குக் கட்டுப்பட்டவள் ஆண் சொல்வதே அவளுக்கு வேதவாக்கு போன்ற காரணங்களின் அடிப்படையில் கூத்தரங்கும் அன்றைய சூழ்நிலையில் ஆண்களுக்குரியதாக முன்னெடுக்கப்பட்டதோடு பெண்களின் வருகை மட்டுப்படுத்தப்பட்டதாக அமைந்துவிட்டன.

ஆணாதிக்க உணர்வுகளின் அடிப்படையில் ஆணின் அனைத்துச் செயற்பாடுகளிற்கும் அடக்கப்பட்டவளாக பெண் காணப்பட்டமையானது சமூகம் பெண்களுக்கென்று கலாசார கட்டமைப்பு, பாலியல் கட்டமைப்பு மூலம் இயல்பாகவே சமூகம் சார்ந்த பல்வேறு விதமான கட்டுப்பாடுகளை விதித்திருந்தது. இத்தகைய ஏற்றுக்கொள்ள முடியாத சமூக கட்டமைப்புக்களினை பெண்கள் விரும்பி ஏற்றுக் கொள்ளக்கூடிய சமூக அந்தஸ்தானது கலை போன்ற பல தமக்குத் தெரிந்த திறன் விருத்தியினை திறந்த வெளிகளிலோ அல்லது சமதளங்களிலோ வெளிப்படுத்த முடியாத நிலைமைக்கு உள்ளாக்கியது.

மரபான முறையில் ஆண், பெண் சமத்துவம் பேணப்படாமையே அனைத்துத் துறைகளிலும் பெண்கள் சேர்ந்தியங்க முடியாத நிலைமைக்கு தள்ளப்பட்டது. இருப்பினும் கணவனை இழந்த பெண்கள் குடும்பத்தின் முழுப் பொறுப்பினையும் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையிலே காணப்பட்டனர். இத்தகைய பெண்கள் இயல்பாகவே தன்னிச்சையாக செயற்படுபவர்களாகவும், முடிவெடுப்பவர்களாகவும், தன்னம்பிக்கை நிறைந்தவர்களாகவும் இருந்திருக்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பெண்கள் தொழில்களில் ஆணுக்குச் சம பங்காளிகளாக செயற்பட்டிருக்கின்றனர். அத்தோடு பணத்தினை நிர்வாகம் செய்யும் பொறுப்பு அன்றிலிருந்து இன்றுவரை பெண்களுக்கே உரித்தான ஒரு விடயமாகவே இருக்கின்றன.

அனர்த்தங்களை, யுத்தங்களை எதிர்கொண்டு தன்னம்பிக்கையுடன் மீண்டெழுவதற்கான வைராக்கியம் பெண்களிடம் காணப்பட்ட போதிலும் அவற்றினை வெளிப்படுத்த முடியாத நிலையில் இவர்களின் எண்ணங்கள் மரத்தினை தாங்கும் வேர்களாக மறைக்கப்பட்டிருந்தது. ஆண்களின் அதியுச்ச பலனிற்கு அடித்தளமாக பெண்களே திகழ்ந்ததோடு அரங்கச் செயற்பாடுகளிற்கு அடங்கியவளாக காணப்பட்டாள். இவ்வாறாக சமூகக் கட்டமைப்பு பெண்கள் மீது திணிக்கப்பட்டிருந்தது.

**சமயக் கட்டமைப்பு.**

சமூக கட்டமைப்பானது பாலியல் வேறுபாடுகள், ஏற்றத்தாழ்வுகளாக பெண்ணின் வெளிபாட்டு வெளியினை மட்டுப்படுத்தியது. தீட்டு தொடர்பான புனிதம் சார்ந்த எண்ணக்கரு, கற்பு சார்ந்த கட்டுக்கதைகள், பெண்களை வாரிசுகளை உருவாக்கக் கூடியவர்களாகவும், தங்கி வாழ்பவர்களாகவும் மாற்றியது. இக்கருத்தின் மூலம் வெளிப்படுவது பொதுவெளிகள் யாவும் ஆண்களுக்கு உரியதாகவும், உணவு தயாரிப்பு, வீட்டுப்பணி போன்ற குடும்பம் சார்ந்த வீட்டுவெளியே பெண்களுக்குரியதாகவும் மாற்றியது. இத்தகைய செயற்பாடுகளிற்கு சமய நம்பிக்கைகளும் காரணங்களாக அமைந்தன.

பெண்கள் தம் குடும்பத்திற்கு உணவு கொடுத்தலானது அவர்களது பணியாகவே தொடர்ந்து வருகின்றது. பசிக்காகவும், ருசிக்காகவும் தயாரிப்பது மட்டுமல்லாது நோய் நொடிகளின்றி வாழ்வதற்கான வகையில் உணவே மருந்தாகும் வண்ணம் வழங்குவது தாய்வழி அறிவாகும். இவ்விடயத்தில் கூட பண்பாடு சார்ந்த பல விடயங்களும், சமயம் சார்ந்த உணவு வகைகளும் உள்ளடங்கும். இத்தகைய அறிவும், திறனும் இயற்கை நியதிகளுடன் தொடர்புபட்டதாகவே அமைந்து விடுகின்றன.

பெண்களிற்கு சமயம் சார்ந்த கட்டமைப்பானது வரையறுக்கப்பட்டதாக மாற்றியதோடு பெண்கள் மீதான வன்முறைகளிற்கும் அடிப்படையானது. கூத்தரங்குகள் யாவும் ஆலயங்களை மையப்படுத்தியதாகவே திறந்த வெளிகளில் முன்னெடுக்கப்படுகின்றன. இத்தகைய ஆலய பொதுவெளிகளில் தன் ஆற்றலை வெளிப்படுத்தும் பெண்கள் குடும்பம் சார்ந்த வரம்பினை மீறியவர்களாகவே பார்க்கப்பட்டனர். இதனால் பெண்கள் கூத்துக்களில் பங்குபற்ற முடியாத நிலைக்கு ஆளாக்கியது. இதன் காரணத்தினால் கூத்தில் பெண்களின் பங்களிப்பு என்பது நிகழ்த்துபவர்களாகவோ அல்லது முன்னெடுப்பாளர்களாகவோ அமையவில்லை.

மனிதனுடைய அனைத்து நம்பிக்கைகளும் சமயம் சார்ந்த நம்பிக்கைகளாகவே காணப்பட்டது. குறிப்பாக சடங்குகளை குறிப்பிடலாம். மக்கள் கூடி மகிழ்கின்ற ஒரு பக்தி சார்ந்த நிகழ்த்துகை வெளியாக கோயில்கள் திகழ்கின்றன. இத்தகைய கோயில்களின் சடங்கு ஆரம்பமாவதற்கு இரண்டு மூன்று நாட்களிற்கு முன்னரே அவ்வூரிலிருக்கின்ற மச்சம், மாமிசம் சார்ந்த பொருட்கள் வேறிடங்களிற்கு கொண்டு செல்லப்படுவதோடு புனிதத் தன்மை பேணப்படும். அத்தோடு அக்கிராமங்களிலுள்ள மாதவிடாய்க் காலப் பெண்களும் வெளியேறுவது சமய நம்பிக்கையோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடிய பொதுவழக்கம் பெண்களின் முதல் மாதவிடாய்க் காலத்தினை தீட்டுடன் கூடிய விழாவாக எடுப்பவர்கள் அடுத்தடுத்தவைகளினை தீட்டாகவே பார்க்கின்றனர்.

எனவேதான் பெண்களைக் கொண்டு கூத்தாற்றுகைகளை மேற்கொள்ளும் போது பெண்களால் தொடர்ந்து கோயில்களிற்கு பிரவேசிக்க முடியாத நிலையினை தோற்றுவிக்கும் என்ற நோக்கிலே பெண்கள் கூத்தாற்றுகைகளில் உள்வாங்கப்படவில்லை. பெண்கள் உடல் சார்ந்த பலவீனமானவர்கள் அவர்களினால் ஆடவோ, முன்னெடுக்கவோ முடியாது என்கின்ற நம்பிக்கை சில கூத்துக்கள் பெண்களையே மையப்படுத்தியதாக அமைந்திருக்கும். இக்கூத்தில் பெண்ணே அதிக நேரம் பங்குபற்ற வேண்டியதாய் அமையும். அத்தோடு பெண்களின் பாலியல் உறுப்புக்களின் வர்ணனைகளும் தங்களைப் பற்றிய விடயங்களினை தாங்களே வெளிப்படுத்த முடியாமையும் பெண்கள் கூத்தரங்கில் வராமைக்கான விடயங்களாக அமைகின்றன.

மன ஒருமைப்பாட்டுடன், இறை உணர்வோடு, கூலி பெறாது, சிரமத்தினையே தானமாக செலவிடுகின்ற கூட்டு முயற்சியான கூத்தரங்கிலே பெண்களின் பங்கு பற்றலானது மிக அரிதாகவே காணப்பட்டது. சமயச் சடங்குகளிற்குக் கூட விலக்கப்படுகின்ற பெண்கள் அச்சடங்குக் கோயில்களில் இடம் பெறும் கூத்துக்களில் பங்குபற்ற முடியாத நிலைக்கு சமயம் சார்ந்த கட்டமைப்பு வரையறுக்கின்றது. கூத்தில் தற்போது அந்நிலை சற்று மாற்றப்பட்டு முழுச்சமூகத்திற்கும் உரியதாக கூத்தானது மாற்றமடைந்து பெண்களையும் இணைப்புச் செய்து போட்டிகள், விழாக்கள் போன்ற நிகழ்வுகளில் குறுகிய கால ஆற்றுகைகளாக இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# எமது மண்



சதாசிவம் சதீஸ்
மகிழவட்டுவான்
ஆயித்தியமலை

காலைக்கதிரவனின் விடியலுக்காக
கதிர்கள் உலகெங்கும் பரவிட
மின்னிடும் மின் விளக்காய்
வாசலில் ஏற்றாத தீபமாய்
வாசனை வீசாத மண்ணே
மண்முனை மேற்கு

திக்கெல்லாம் நின்று
திருப்தியுடன் தினமும்- தன்
ரெத்தத்தை வியர்வையாக்கி
மண்ணுக்காய் தினமும்
விடிவு கிடைத்திடச் செய்து
விண் முழங்கச் செய்வது
மண்முனை மேற்கு



கருணை உள்ளம் கொண்டு
கடைக்கண்ணால் உற்றுநோக்கி
ஊரவர் என நினைக்காமல்
குளிர்ந்த உள்ளம்- கொண்ட
மண்ணாம் மண்முனை மேற்கு
உள்ளங்கள் இணைந்து நின்று
உறவுகள் இன்புற்று
தூக்கங்களைக் கலைந்தெறிந்து


தொல்லை இல்லாத உழைப்பில்
வாழ்ந்து நாளும்
நாட்டினைப் பெருமையால்
உயர்வது மண்முனை மேற்கு

தொல்லையற்ற வாழ்வை
வாழ்ந்து வரும் மக்களுக்காக
மண்ணுக்கே கொடுப்போம்
எமது முதல் வணக்கத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருங்கனியா ஆலங்கனியா?



கலாபூசணம் க.மயில்வாகனம்
(அண்ணாவியார்)
கரவெட்டி, நாவற்காடு.




மனிதம் என்னும் மரபுதனில்
மனிதன் மண்ணில் வாழுகின்றான்
புனிதம் புரியாப் பிறவியரும்
புனிதம் பற்றிப் பேசுகின்றார்

ஆலை விருட்ஷம் நிழலெனலாம்
ஆலங் கனியை அழகெனலாம்
அதனுள் புழுதான் எவ்விதமோ
அதுபோல் மனிதன் வாழ்வெனலாம்

ஆழம் புரிந்து விரைந்திடுவீர்
ஆளம் காணல் அரிதாகும்
ஆழப் பணிந்து நடந்திடுவீர்
அதுவே வாழ்வெனத் தொடந்திடுவீர்.

அவமானம் சொல்லி வருவதில்லை
அவதானம் உந்தன் கையிலல்லோ
நிதானம் தவறி நடந்திடாதே
நியதி இதுவே மறந்திடாதே



மானிடா நீ ஏன் பிறந்தாய்
என்பதை நீ முன் உணர்வாய்
மானிலத்து மண்ணுயிரை
மேவி நட மறந்திடாதே

உன்னகத்தில் ஒன்று வைத்து
உரையில் ஒன்று கூறிடாதே
உற்றுணர்ந்து உன்னைக் கேள்
உன்னிதயம் நீதி சொல்லும்

உன் முகத்தில் புன் சிரிப்பும்
உள்ளகத்தில் நஞ்சுமானால்
தன்னுயிரைத் தானழிக்கும்
தன்மையெனத் தானுணர்வாய்

கற்றதெல்லாம் நாங்களென்றும்
கை மண்ணின் தன்னளவே
கற்கவெனத் தானிருக்கும்
கடலளவே தானுணர்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியம் படைக்கலாம் இன்றே கற்றிடம்மா



க.ரெட்ணையா
கன்னங்குடா-2,
மட்டக்களப்பு.

ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது
என்ற பழமொழிக்கு அமைய
நாட்டிலே வாழாமல் நீ
நன்றாகக் கற்றிடம்மா!
உலகுக்கு ஒளி தரும்
உதய சூரியன் போல்
குலமகளே நீ இன்று
குறைவில்லாது கற்றிடம்மா !

காற்றினால் அழியா, களவாட முடியா
கல்வியை நீ கவனமாய் கற்றிடம்மா !
மற்றவர் மதிக்கவும் – நல்
மனிதராய் வாழவும்
வற்றாத பொய்கை போல்
வளமுடன் வாழ்ந்திட
உற்றதோர் நண்பன்
உண்மையில் கல்விதான்.

செழிப்புடன் வாழவும் – நம்
தேசத்தை காக்கவும்
வழி வகுத்திடுவது
வளமான கல்வியே !
அழியாத செல்வமாய்
அறிவுக் கடலாக
எழிலுடன் திகழ்வது
எப்போதும் கல்வியே !

கரை காண முடியாத
கல்விக் கடலினில்
வரையறை இன்றியே
வந்து நீ குளியம்மா !
தரை மீது தமிழ்மொழி
தான் பெரிதென்று
வரைவிலக்கணம் காட்டி
வாழ்ந்திட வேண்டும் நீ !

கல்வியெனும் மலையேறி
கல்வியெனும் மூன்றெழுத்தால்
கட்டிய குளம் தனில்
அல்லியோடு தாமரையும்
அழகாக பூக்குமம்மா !
கல்வியெனும் கல்லினால்
கட்டிய மாளிகையில்
அல்லும் பகலும் அணையாத
அருள் விளக்கு எரியுமம்மா !

இளமையில் கல்வியை கற்பது
எல்லோர்க்கும் நல்லதம்மா !
தளராமல் பேசிட
தான் வழி செய்யுமம்மா !
வளமாக வாழ்ந்திட – நல்
வழி தரும் கல்வியம்மா !
இளமைப் பருவத்தில் நீ
இன்றே கற்றிடம்மா !

நீதி வழி நடந்திட
நித்தமும் மகிழ்ந்திட
ஜாதி பேதம் பார்க்காத
சரித்திரக் கல்வியை
பாதியில் விடாமல் – நீ
படித்திட்டால் தொடர்ந்து – வான்
மதியென மண் மீது
மகிழ்வுடனே வாழலாம்.

சொல்லுக்கு அழகு தந்து
சொர்க்கத்துக்கு இழுத்துச் செல்லும்
சிலவொன்று உண்டது தான்
சிதறாக உடையாத கல்வியம்மா !
இலக்கியம் படைப்போர்க்கு – களம்
இட்டுக் கொடுப்பதே கல்வியம்மா !
இலக்கிய வளர்ச்சியும் கல்வி மேம்பாடும்
இணை பிரியா ஒன்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரத நாட்டிய சிகிச்சை



வி.விஜயசக்தி
(BFA/MFA.BHA/YOGA TTC/REIKI MASTER)

விந்தையான பல விடயங்கள் பிரபஞ்ச சக்திக்குள்ளே நிறைந்திருக்கின்றது. பிரபஞ்ச சக்தியே பலவிதமான நோய்களை குணப்படுத்துகின்றது. அனைத்து உயிர்களையும் கவர்ந்திழுத்தாலே போதும் சிகிச்சை அளிப்பவரும் சிகிச்சையாளரும் நாமே. இவை அனைத்தையும் உள்ளடக்கிக் கொண்டு அமைதியாக விழிப்புணர்வுடன் தன் சக்தியை வெளிப்படுத்தும் உத்தம சிகிச்சையாளரே பரத நாட்டியம் ஆகும்.

ஆயகலைகள் அறுபத்து நான்கினுள் மிகச்சிறந்த ரசனை உணர்வு கூடிய கலையாக பரத நாட்டியம் விளங்குகின்றது. இப்பரத நாட்டியமானது நான்கு வேதங்களின் சாரமாக ஐந்தாம் வேதமாக பிரம்ம தேவரால் படைக்கப்பட்டது. இந்நாட்டியம் தோன்றுவதற்குக் காரணம் மக்களின் வாழ்க்கையில் அவர்களடைந்த துன்பங்கள், துயரங்கள், வஞ்சனை, சூது, கோபம், ஆசை போன்ற பல வழிகளில் மனதைச் செலுத்தி துன்பமடைந்தனர். இதனை நீக்குவதற்காகவே பிரம்ம தேவர் பரத நாட்டியத்தை படைத்தார்.

பரத நாட்டியம் உள்ளத்திற்கும், உடலுக்கும் ஒருங்கே இன்பத்தைத் தரவல்லதாகும். நாட்டியத்தை காணும் போது அடைகின்ற ஆனந்தமானது உலகத்தில் அடைகின்ற பேரானந்தத்திலே மிகச்சிறந்த மற்றும் மீண்டும் மீண்டும் எண்ணி இன்புறக்கூடியதும் ஆகும். இதை பிரம்ம தேவர் தான் எழுதியநாட்டிய வேதத்தில் "பூவுலகத்தில் ஜனன மரண பாசத்திலிருந்து விடுபடுவதற்கும் கடவுளை மிக எளிதாக காண்பதற்கும் ஐம்புலங்களையும் அடக்கி ஆளுகின்ற முனிவர்களைக் காட்டிலும் அதிக மனபலமும் தவபலமும் பெறுவதற்கும் ஏற்ற ஒரு மார்க்கம் நாட்டியக்கலை ஒன்றேயாகும். அதனால் அத்தகைய நாட்டியக்கலையை நான் ஐந்தாம் வேதமாக படைத்திருக்கின்றேன்" என்றார். (நாட்டிய சாஸ்திரம்)

பரதநாட்டியத்தின் அசைவுகள், அடவுகள், முத்திரைகள், பக்கவாத்திய இசை அணிகலங்கள், உருப்படிகள் போன்றவை மனிதனுக்கும் சமூகத்திற்கும் சிறந்த முறையில் எவ்வாறு சிகிச்சை அளிக்கின்றது என நோக்குவோம்.

நாட்டியத்தை காண்பதினால் மனிதன் தனது உள்ளத்திலுள்ள துன்பத்தினை எல்லாம் மறந்து அல்லது இழந்து ஆனந்தத்தைப் பெறுகின்றான். மேலும் நாட்டியத்தை பயில்வதால் பெறுவதற்கரிய பெரும்புகழ் அழகு எல்லா வகையிலும் சிறந்த அனுபவம் ஆகியவை கிடைக்கின்றது. நாட்டியத்தை பயில்வதால் உளமும் உடலும் உரம் பெறுகிறது. உடலில் ஒவ்வொரு அவயமும் தனித்தனியாக இயக்கம் பெற்று ஆரோக்கியமும் நோயற்ற வாழ்வும் பெறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டியத்தை பார்க்கின்ற மனிதனும் நடனம் புரிகின்ற மனிதனும் தர்ம, அர்த்த, காம, மோட்சமாகிய நான்கு புருஷார்த்தங்களையும் அடையப்பெறுகின்றான். பரதநாட்டியமானது மனிதனின் உடல் உள ஆன்ம பிணிகளை நீக்குவதாகவே அமைந்துள்ளது. நடனத்தை செய்பவர்கள் அதிலுள்ள அடவுகளை முறையே பயின்று நடனத்தில் தேர்ச்சி பெறுவர். தலை, கழுத்து, கண் அசைவுகளினூடாக தலையிலுள்ள அனைத்து நாடி நரம்புகளையும், கைவிரல் முத்திரைகளினூடாக உடலிலுள்ள சக்தி மையங்களையும், பாதத்தின் அசைவுகளினூடாக உடலிலுள்ள சக்தி மையங்களையும் அதிரச் செய்து உடலை சக்தியூட்டும் சாதனமாக பரத நாட்டியம் தொழிற்படுகின்றது.

நாட்டியம் ஆடுவதால் நரம்பு சம்பந்தமான நோய்களிலிருந்து மனிதன் மீள்கின்றான். உடலில் பெருகும் தேவையற்ற சதை குறைகிறது. நாட்டியமாடுவதால் விரைந்து செயலாற்றக்கூடிய திறன் உருவாகிறது. இவ்வுடலசைவுகளின் மூலம் உடலை நாம் பிணிகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.

உடலசைவுகளும் ஆட்டத்தின் விறுவிறுப்புத் தன்மையும் குறைகின்ற போது மனமானது அமைதி பெறுகின்றது. இந்நிலையானது பாவ உருப்படிகளைச் செய்கின்ற போது மனமானது ஒருநிலைப்பட்டு அபிநயத்திற்குரிய உணர்ச்சிகளை ஆழ்மனத்திலிருந்து வெளிப்படுத்தப்படுகிறது. நடனத்தில் உணர்வு பூர்வமான விடயங்களே அதிகம் இடம்பெறுகின்றன. உணர்வுகளினால் உண்டாக்கப்பட்ட இரசாயன மாற்றத்தினால் உடலிலுள்ள நாளமில்லா சுரப்பிகள் அனைத்தும் நன்றாகத் தொழிற்பட்டு உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை ஏற்படுத்துகின்றது.

உடலிலுள்ள நாடி நரம்புகள் எப்பொழுதும் உணர்வு பூர்வமாக புத்துணர்ச்சியுடன் செயற்படுவதால் மூளை நன்றாக தொழிற்படுகின்றது. இவ்வாறு மனதை ஒருநிலைப்படுத்திக் கொண்டு செல்லும் போது மனமானது நமது ஆன்மாவை உணர்கிறது. இது பரத நாட்டியத்தின் அதியுன்னத நிலையாகும். மனிதன் தன்னிலையுணர்வு பெறுவதன் மூலமே பூரண மனிதனாகின்றான். இதுவே பரதநாட்டியத்தைப் பயில்கின்றவர்களுக்கு ஏற்படுகின்ற மிகப்பெரிய நன்மையாகும். எல்லாக்கலைகளுமே தெய்வீக்கலைகள் தான். ஆனால் அவை வெளிப்படுத்துகின்ற விதங்களில் தான் வேறுபடுகின்றன.

பரதநாட்டிம் முழுவதும் இறையுணர்வுகளோடே தொடர்புபட்டு காணப்படுகின்றது. அதாவது அன்பே சிவம் எனும் இந்துமதக் கோட்பாடானது அனைத்திலும் நிறைந்து நிற்கும் சிவத்தை அன்பினால் காண்பதாகும். இதுவே பரதநாட்டியத்திலும் காணப்படுகின்றது. நடனத்தில் எவ்வளவு தூரம் மனம் ஒன்றி உடல் பொருள் ஆவியனைத்தையும் அர்ப்பணித்து நாம் செய்கின்றோமோ அந்தளவிற்கு எமக்கு ஆத்மபலனும் இறையுணர்வும் கலையுணர்வும் நிரம்பப் பெற்றவர்கள் ஆகி-ன்றோம்.

பரதநாட்டிய நிகழ்வின் போது உண்டாக்கப்படும் இசையானது நடனக் கலைஞரையும் பார்வையாளரையும் அந்தச் சூழலையும் தன்வசப்படுத்தி அவர்களின் மனத்துயரையும் உடல்சோர்வையும் நீக்குகின்றது. பரதநாட்டியமானது தனிமனிதனை பூரணமாக்குவதோடு நாட்டியத்தின் மூலம் அவன் பெற்ற அனுபவங்களும் ஒழுக்க விழுமியங்களும் அவனைச் சார்ந்த அனைத்து செயற்பாடுகளிலும் நிறைந்து காணப்படுவதுடன் சமூகத்தில் நல்ல பண்பாடுள்ள கலைகலாசாரங்களை போற்றி பாதுகாக்கும் தனிமனிதனாகக் காணப்படுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் வாழ்கின்ற மக்களிடையே மறைந்து வருகின்ற பண்பாட்டு விடயங்களை வெளிக் கொணர்தல்



திரு.மூ.சிவனந்தராஜா
கலாசார உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
மண்முனை மேற்கு
வவுணதீவு

இன்றைய மண்முனை மேற்குப் பிரிவானது வடக்கே மட்டக்களப்பு வாவியையும் தெற்கே ஓதியங்குடா அடைச்சகல் குளம் முதலிய இடங்களையும் கிழக்கே பன்சேனை முதலிய கிராமங்களையும் மேற்கே கெழுத்திமடு உன்னிச்சைக் குளம் ஆகியவற்றினை எல்லையாகக் கொண்டு படுவான் கரையென அழைக்கப்படும். இப் பிரதேசம் கடல் மட்டத்திலிருந்து சராசரியாக 20 அடி உயரத்தினைக் கொண்டது இதன் பரப்பு 213 சதுர கிலோமீற்றர் ( 113சதுரமைல்) இங்கு தமிழ் மக்கள், சிங்கள மக்கள், முஸ்லீம் மக்கள், என மூவின மக்களும் வாழ்ந்து வருகின்றனர். தற்போது அண்மையில் நடைபெற்ற யுத்த சூழ்நிலை காரணமாக சிங்கள முஸ்லீம் மக்கள் இடம் பெயர்ந்து தற்போது மீண்டும் இயல்பு நிலை ஏற்பட்டதன் காரணமாக தங்களது இருப்பிடங்களில் வாழ்ந்து வருகின்றனர். எனவே எனது கட்டுரையானது இங்கு வாழ்கின்ற மக்களுடைய வாழ்வியல் பண்பாட்டு விடயங்களில் மறைந்து வருகின்ற மிகவும் வேண்டத்தக்க ஒரு சில பண்பாட்டு விடயங்களை வெளிக் கொணர்வதனுடாக எமது இளம் சமுதாயத்திற்கு இவ்வாறான பண்பாட்டு விடயங்களை கையளிப்பதனூடாக எதிர்காலத்தில் சிறந்ததொரு விழுமியங்களுடன் கூடிய சமுதாயத்தினை உருவாக்க முடியும் என்ற காரணத்தின் அடிப்படையில் இக்கட்டுரை முன் வைக்கப்படுகின்றது.

இவர்களின் வாழ்வியல் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு பண்பாடு என்பது அறிவு. நம்பிக்கை. ஒழுக்க நெறிகள். சட்டம். வழக்கம். முதலானவையும் மனிதன் சமூகத்தில் ஒரு உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும் பழக்கங்களும் அடங்கிய முழுத் தொகுதியாகும் என "எட்வாட் பன்னாட் டைலர்" கூறுகின்றார். இதன் அடிப்படையில் நோக்குமிடத்து இவ் பிரதேச மக்களிடத்தில் காணப்படுகின்ற பண்பாட்டு விடயங்களை பின்வருமாறு வகுத்து நோக்குமிடத்து அவர்களிடம் காலா காலமாக கடைப்பிடித்து வந்த சில பண்பாட்டுக் கூறுகள் தற்போது அவர்களிடம் இருந்து மறைந்து செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டு இவற்றினை பல்வேறு வகைப்பாட்டுக்குள் உள்வாங்கி ஆராய்வதே பொருத்தமுடையதாகும். அந்த வகையில்,

1) **வாழ்வியல் பற்றியது**
2) **அவர்களது கலை பற்றியது**
3) **அவர்களது மொழி பற்றியது**
4) **அவர்களது இலக்கியம் பற்றியது**
5) **அவர்களது சமயம் சார்ந்த விடயங்கள் பற்றியது**
6) **அவர்களது உடை பற்றிய விடயங்கள்**
7) **அவர்களது அணிகலன் பற்றிய விடயங்கள்**
8) **வாழ்வியல் பண்பாட்டு பொருட்கள் பற்றிய விடயங்கள்**
9) **மருத்துவம் பற்றிய விடயங்கள்**
10) **அவர்களது உணவுப் பழக்க வழக்கங்கள்**
11) **அவர்களது பொழுது போக்கு விளையாட்டுக்கள்.** என்பன முக்கியம் பெறுகின்றன



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மனித வாழ்வியலில் பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு கைங்காரியங்கள் மனித வாழ்வியலில் இடம் பெறுகின்றது. அந்த வகையில் திருமணம் நடை பெற்ற பின்பு அந்த தாய் தாய்மையுறல் அல்லது கற்பம் தரித்தால் கற்பம் தரித்த நாளிலிருந்து பிள்ளைப்பிரசவ காலம் வரைக்கும் அந்தப் பெண் என்ன என்ன காரியங்கள் செய்யக் கூடாது என்னென்ன காரியங்கள் செய்ய வேண்டும் என்ற நம்பிக்கை எமது பிரதேச மக்களிடையே காணப்பட்டு வந்திருக்கின்றது. செய்யக்கூடாத காரணங்களாக பூரணை நாட்களில் வெளியில் வராமல் வீட்டினுள்ளே இருக்க வேண்டும். .புதிதாக பயிர் பச்சைகள் நாட்டக்கூடாது. மீன் வெட்டக்கூடாது. இறந்த வீட்டுக்குச் செல்லக்கூடாது. கருவுற்ற தாய் தனது சேயை இலகுவாகப் பிரசவிப்பதற்கு செய்ய வேண்டிய விடயங்களையும் கூறி வைத்திருக்கின்றனர் வீட்டு முற்றம் கூட்டுதல் விளக்கு மாறு ஈர்க்குத்தடி இதற்கு இன்னுமொரு காரணப் பெயரும் கிராமிய வழக்குச் சொல்லாகப் பயன் படுத்தப்படுகின்றது குனிந்து நின்று கூட்டும் வாருவக் கட்டு என்றும் அழைப்பர். ஈர்க்குகளை ஒன்றாகச் சேர்த்து கயிற்றினால் கட்டி அதனை விரித்து இரண்டு கைகளால் பிடித்து குனிந்து முற்றத்தினைக் கூட்டவேண்டும் அப்போது சுகப்பிரசவம் இடம் பெறும் என்பது எமது முன்னோரின் நம்பிக்கை.

அடுத்து உரலில் நெல்லுக் குத்துதல் போன்றவற்றினை மேற்கொள்ளும் போது சுகப் பிரசவம் இடம்பெறும் என்ற நம்பிக்கை எமது மக்களிடத்தில் நிலவி வந்திருக்கின்றது. ஆனால் இவ்வாறான நிகழ்வுகள் எமது கிராமத்து மக்களிடையே தற்போது மறைந்து செல்வதைக் காணக் கூடியதாகவுள்ளது.



அடுத்து பிள்ளை பிறந்தவுடன் தாய்க்கு பல்வேறு கைங்கரியங்கள் இடம் பெறுகின்றது அந்த வகையில் **காயத்திற்கான உணவு தயாரித்து வழங்கல்** – எமது முன்னோரால் பிள்ளையை பிரசவித்த தாய்க்கு குடல் புண் ஆறுவதற்காக பறங்கிக் கிழங்கு அசமதாகம், வேர்க் கொம்பு, மஞ்சள், மிளகு, வெள்ளைப்பூடு என்பனவற்றினை அம்மியில் வைத்து அரைத்து தென்னம் சாராயத்துடன் அதனைக் கலந்து ஈரலிப்பான ஒரு இடத்தில் பிள்ளை பிறப்பதற்கு ஒரு மாத காலத்திற்கு முன்பு இதனை தயார் செய்து கொள்வார்கள் அதன்பின்பு சாப்பாட்டிற்கு முன்பு காலையும் மாலையும் இரண்டு தேக்கரண்டி வீதம் வழங்குவார்கள். இவ்முறையானது தற்போது இவ் பிரதேச கிராமங்களில் மறைந்து செல்வதைக் காணக் கூடியதாகவுள்ளது.

அடுத்து **வேர்வைத்து குளிப்பாட்டுதல்** – குழந்தை பிறந்து 31ம் நாள் தாயினை குளிப்பாட்டுவார்கள் இதன் நோக்கம் தாயின் உடல் ஆரோக்கியத்தினை பேணுதலும் இரண்டாவது பிள்ளையினை சுகமாகப் பெறுவதற்கான கால்கோளாகவே இது மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாறான செயற்பாடும் இப் பிரதேச மக்களிடையே மறைந்து செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து பிள்ளைக்கான பல்வேறு சம்பிரதாயங்கள் நடை பெற்று வந்திருக்கின்றது இருந்தாலும் தற்போது மறைந்து செல்கின்ற சடங்கு சம்பிரதாயங்களை மாத்திரம் வெளிக்கொணர விரும்புகின்றேன்.

**மருங்கை–** மகப் பேற்று வீட்டில் 31ம் நாள் தொடக்கு நீக்கி செய்யும் நிகழ்வு ஆகும். இதில் குழந்தைக்கு தலைமுடி எடுத்தல், தொட்டிலில் போடுதல், காது குத்துதல், அரைநாண், பல்லுக் கொளுக்கட்டை சொரிதல், காதுகுத்தி கடுக்கன் அணிதல், குழந்தைக்கான நோய்பிரசவம் தீர்த்தல் என்பனவாகும்.

**அரைநாண்கயிறு** – இது பிள்ளை பிறந்ததும் தாய்மாமன் வாழை நாரினுள் யானை வாலினுடைய மயிரை எடுத்து திரித்து குழந்தையின் இடுப்பில் கட்டி விடுவார் இதன் நோக்கம் குழந்தையின் உடல் பல உறுதியாக வேண்டும் என்பதாகும். இவையும் இவ் பிரதேச மக்களிடையே மறைந்து கொண்டு செல்கின்றது.



அடுத்து **மருத்துவிச்சியை கௌரவிக்கும் நிகழ்வு –** இவரை இவ் பிரதேச மக்களால் பிரசவத்தின் தந்தை என அழைத்தனர் பிள்ளை பிறப்பதற்கு முன்பும் பிள்ளை பிறந்த பின்னும் சகல விதமான மருத்துவ நடவடிக்கைகளை மேற்கொள்பவர் இவர்தான். இதனால் இவரை அக்காலத்தில் மருத்துவ மாது என மக்களால் அழைக்கப்பட்டு வந்தனர் மகப் பேற்று வீட்டில் பன்னிரெண்டாம் நாள் இடம் பெறும் முக்கிய நாளாகும் இது தீட்டுத் தொடக்கில் தீவிரத் தன்மை குறையத் தொடங்கும் நாள் என்பதோடு மருத்துவிச்சி கௌரவிக்கப்படும் நாளாகவும். இது கொள்ளப்படும். இந்நாளில் மருத்துவிச்சி பல்வேறு கறி மற்றும் தயிர் என்பனவற்றுடன் குடும்பத்தாருடன் உண்டு மகிழ்வார். அத்துடன் சோற்றுப் பெட்டியும், மூன்று மரைக்கால் நெல், சேலை, தட்சனை என்பன வழங்கி கௌரவிக்கப்படுவார். இவ்வாறான நிகழ்வு தற்போது ஆங்கில மருத்துவம் வளர்ச்சியடைந்த தற்காலத்தில் மருத்துவிச்சிகளின் செயற்பாடுகள் இக்கிராமங்களில் மறைந்து கொண்டு செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

அடுத்து **மருத்துவிச்சி , பூசாரி, பரிகாரியின் சேவை –** ஒவ்வொரு பிரசவ வீட்டிலும் மருத்துவிச்சி, பூசாரி, பரிகாரி ஆகிய மூவரும் பிரசவத்தின் காப்பாளராக இருந்து நெறிப்படுத்துபவர்கள். இங்கே அச்சமும் பயமும் கலந்த ஒரு சந்தேகமான சோக நிலை காணப்படும். இதனால் சுகப் பிரசவம் வேண்டி பல தெய்வங்களுக்கு நேர்த்திக்கடன் வைப்பதும் பிரசவ வீடுகளில் முதலில் பூசாரிமாரினால் பேய், பிசாசு தாக்கம் போக்க வளவு காவல் செய்கின்ற பெரும் பணி பூசாரிமாருக்குரியது. இவர்கள் வைக்கோலையும் வேப்பிலையையும் கொண்டு காவற்புரி திரித்து பிரசவப் பகுதியை வேறுபடுத்திக் கட்டப்படும் . வாசலில் பெரிய கட்டைகளைக் கொண்டு தீனா உருவாக்குவர் பரிகாரி அடிக்கடி கற்பிணித்தாயின் கையைப் பிடித்துப் பார்த்து உடல் நிலைக்கு தக்கபடி மாத்திரைகளையும் அனுமானங்களையும் கொடுத்து பிரசவத்தின் உடல் நிலையைப் பேணிக் கொண்டு இருப்பார். அடுத்து பேய் பிசாசுத் தாக்கத்தால் பிரசவம் தடைப்படும் நிலை காணப்பட்டால் பூசாரிமார் காய் வெட்டி கழிப்பு செய்து பேய் பிசாசுகளைப் போக்குவதன் மூலம் சுகப் பிரசவத்தினை மேற்கொண்டனர். இவ்வாறான நிகழ்வுகளும் எமது கிராமங்களிலிருந்து மாற்றம் பெற்றுச் செல்வதைக் காணக்கூடியதாகவுள–



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து **பிள்ளை பிறந்தால் உலக்கை மற்றும் விளக்கு மாறு எறிதல் நிகழ்வு** ஆண்பிள்ளை பிறந்தால் தாய்மாமன் உலக்கையினை எடுத்து கூரையில் தட்டி பின்பு முன்பக்கம் இருந்து பின்பக்கமாக வீட்டின் மேலாக வீசுவார் அப்போது அனைவருக்கும் தெரியும் இவ் வீட்டில் பிறந்தது ஆண்குழந்தையென்று பெண்குழந்தை பிறந்தால் மாமியார் விளக்குமாற்றை எடுத்து வீட்டின் மேலாக முன்பக்கம் இருந்து பின்பக்கமாக வீசுவாள் அப்போது பெண்பிள்ளையென அறிந்து கொள்ளலாம். இவ்வாறான நிகழ்வும் தற்போது இக்கிராமங்களிலிருந்து மறைந்து செல்கின்றது.

அடுத்து **கொழுக்கட்டை சொரியும் நிகழ்வு** – குழந்தைக்கு முதல் பல்லு முளைத்ததும் உற்றார் உறவினர்களுக்கு அழைப்பு விடுத்து பிள்ளையின் பல்போன்ற வடிவமைப்பில் கொழுக்கட்டைகளை தயார் செய்து குடையொன்றுக்கு கீழ் பிள்ளையை வைத்து குடையினை சுற்ற அதன்மேல் கொழுக்கட்டையினை சொரிவார்கள் இவ் நிகழ்வும் கிராமங்களிலே அருகிப் போவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

**காதுகுத்தி கடுக்கன் அணியும் நிகழ்வு** – ஆண் வாலிபப்பருவம் அடைந்தால் உற்றார் உறவினர்களை அழைத்து மருத்துவிச்சியினைக் கொண்டு வந்து தோட முள்ளினை நன்றாக சீவி கடுக்கன் அணிவிழாவுக்கு ஒருமாதத்திற்கு முன்பு காதில் ஓட்டை போடுவார்கள். குத்திய பின்பு அவ் ஓட்டையினுள் கிடச்சி மரத்தினை வெட்டி நன்றாக வெயிலில் காய வைத்து சிறு துண்டுகளாக காதின் ஓட்டையினுள் குத்தி விடுவார்கள். இது ஏன் செய்வதென்றால் காதின் ஓட்டை தூர்ந்து விடாமல் அதன்பின்பு நல்ல சுப நாளைக் குறித்து உற்றார் உறவினர்களை அழைத்து விருந்தோம்பல் செய்து இந்த நிகழ்வு சிறப்பாக இடம் பெறும். இவையும் தற்போது இப்பிரதேச கிராமங்களில் மிகவும் குறைந்தளவிலே கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றமையை காணக் கூடியதாகவுள்ளது.

அடுத்து **பூப்படைந்த பிள்ளைகளுக்கான உணவுமுறைமை** – பிள்ளைகள் பருவ வயதினை அடைந்து விட்டனர் அல்லது தாய்மை அடைவதற்கான இயல்பினைப் பெற்றுவிட்டனர் என்பது பொருளாகும் இவ்வாறான பிள்ளைகளுக்கு எவ்வாறான உணவு வழங்க வேண்டும் என அறிந்து அதற்கேற்ற உணவுகளை வழங்கினார்கள். அதாவது உப்பிட்டுப் பொங்கிய சக்கரைச்சாதம், அரிசி மாவில் செய்த சக்கரைப் பிட்டு, உழுந்துக்களி, பயற்றங்களி, குரக்கன்களி, என்பன வழங்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் தற்போது இவ் கிராமங்களில் இவ்வாறான உணவுகள் மறைந்து செல்கின்ற போக்கினைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

அடுத்து **பூப்பு நீராட்டு விழாவில் தோழிப் பெண்ணை அழைத்து வரும் நிகழ்வு** – அதாவது பூப்படைந்த பெண்ணின் சொந்த மச்சாள் முறையான உற்றார் உறவினர்கள் புடைசூழ வீட்டிற்குச் சென்று அழைத்து வந்து பூப்பு நீராட்டு விழா முடிவடைந்து முன்றாம் நாள் உற்றார் உறவினர் புடைசூழ அவருடைய அத்தனை பொருட்களையும் எடுத்துக் கொண்டு அவருடைய வீட்டிற்கு கொண்டு விடவேண்டும் அதன் பின்பு அங்கு எல்லோருக்கும் விருந்துபசாரம் இடம் பெறும் இவ்வாறான நிகழவும் இவ் பிரதேச மக்களிடத்தில் மறைந்து செல்கின்றது.

**சடங்கு பற்றிய சிந்தனை நோக்கும் போது**– மக்களின் வாழ்வியலில் பல்வேறு வகையான சடங்குகள் இடம் பெற்று இருக்கின்றது திருமணச் சடங்குகள், மரணச் சடங்குகள், சாமர்த்தியச் சடங்குகள், புதுமனை புகுவிழா போன்றன இடம் பெற்று வந்திருக்கின்றது. இவற்றில் ஒரு சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் **திருமணக் கிரியைகளில்–** பெண்வீட்டார் ஆண்பிள்ளை வீட்டிற்கு மாப்பிள்ளை கேட்டுப் போகும் நிகழ்வு – இந்த நிகழ்வானது இவ் பிரதேசக் கிராமங்களிலே சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வந்திருக்கிறது அதாவது பெண் வீட்டார் தங்களது உற்றார் உறவினர்களை அழைத்து மாப்பிள்ளை வீட்டிற்கு கொண்டு செல்கின்ற பொட்டிகளின் எண்ணிக்கையும் அவற்றுள் இடுகின்ற பொருட்கள் பற்றியும் அவற்றினை உறவினர்களுக்கு பகிர்ந்து கொடுக்கின்ற செயற்பாடும் இடம்பெறும் அத்துடன் கேட்டுப் போகின்ற நாளும் தீர்மானிக்கப்படும் முகூர்த்தம் தீர்மானிக்கப்பட்டதும் ஓலைப் பெட்டிகளில் பலகாரம், முறுக்கு, உருண்டை, வாழைப்பழம் போன்ற உணவுப்பொருட்களினை வைத்து கொண்டு செல்வதற்காக 31 ஓலைப் பொட்டிகள் தயார் செய்யப்பட்டு அவற்றினை வெள்ளைத் துணியினால் மறைத்துக் கட்டுவார்கள். அதன் பின்பு பெண்கள் அனைவரும் பெட்டிகளை தங்களது தலைகளில் சுமந்து நான்கு பேர் வெள்ளை பிடிக்க ஊர்வலமாக மாப்பிள்ளை வீடு நோக்கிப் புறப்படுவார்கள். அதன் போது பட்டாசு கொளுத்துதல், குரவை போடுதல் என்பன இடம்பெறும். அதனைத் தொடர்ந்து மாப்பிள்ளை வீட்டில் பேர்ச்சுவார்த்தை இடம்பெறும் அதன் பின்பு விருந்தோம்பல் இடம்பெறும் இவ்வாறான நிகழ்வு தற்போது இக் கிராமங்களில் மறைந்து செல்கின்றது.

அடுத்து **ஆறுமாதம் சோறு கொடுக்கும் நிகழ்வு–** திருமணம் முடிந்த பின்பு மாப்பிள்ளையின் மாமா, மாமி தங்களது வீட்டில் வைத்து ஆறுமாதம் உணவு வழங்கி பாதுகாத்து வருவார்கள் இது பிரதேச கிராமங்களுக்குரிய மரபு ஆகும். இவ்வாறான நிகழ்வு தற்போது சில கிராமங்களில் கடைப் பிடிக்கப்பட்டு வந்தாலும் இவை தற்போது மறைந்து செல்கின்றது. நகர மயமாக்கப்பட்ட திருமணங்களில் இவ்வாறான மரபுகள் பின்பற்றப் படுவதில்லை திருமணம் முடிந்ததும் பெண்ணின் தாய் தந்தையர் அவர்களை தனிக் குடித்தனம் நடத்தும்படி தனிமையாக விட்டுச் சென்று விடுவார்கள். எனவே இவ்வாறான மரபு எம்மிடம் இருந்து மாற்றம் அடைந்து செல்வதைக் காணக் கூடியதாகவுள்ளது.

**காமாறுதல்–** இது தற்போது கால் மாறுதல் என வழங்கப்பட்டு வருகின்றது இது ஒரு முக்கிய–மான நிகழ்வு ஆகும் இதற்கு காலம் நேரம் என்பன எடுக்கப்படும் அதாவது கிழமை அல்லது மாதம் தாழ்த்தி சுபநேரம் எடுக்கப்பட்டு பெண் வீட்டிற்கு ஆண் வீட்டார் காவிக் கொண்டு வந்த பொருட்கள் அத்தனையும் பெண் வீட்டார் ஆண் வீட்டிற்கு கொண்டுசெல்ல வேண்டும் அதன் பின்பு ஆண் வீட்டில் அங்கு விருந்துபசாரம் இடம் பெறும் அதற்குப் பின்பு ஆண் வீட்டில் மாதம் அல்லது கிழமை தங்கி நிற்பார்கள். தற்காலத்தில் இது அவசர அவசரமாக மரவுக்கு மாறாக இடம் பெறுகின்ற நிகழ்வுகளாக மாற்றம் அடைந்து வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

**அடுத்து எமது மக்களிடத்தில் காணப்பட்ட இறை நம்பிக்கையும் சமய ஆசாரங்களும்**

**புதிர் எடுக்கும் நிகழ்வு** – எமது முன்னோர்களால் பின்பற்றப்பட்டு வந்த மரபு முறையாகும். பூரணைக்கு முதல் நாள் வயலில் இருந்து நெற்கதிர்கள் கொண்டு வந்து வீட்டின் கடப்பில் தொங்க கட்டிவிடுவார்கள். அதன் பின்பு அன்று இரவு அந்தக் குடும்பத்தின் இளைய பெண் பிள்ளை தாய் சுவாமி அறையிலிருந்து ஓலைப் பெட்டியினை வெள்ளத்துணி ,நிறமுட்டி விளக்கு என்பவற்றினைக் கொண்டு கடப்பில் இருக்கும் நெற்கதிர்களை பெட்டியுனுள் எடுத்து வைத்து அதனை வெள்ளைத் துணியினால் மூடி தலையில் சுமந்து கொண்டு சுவாமி அறைக்குள் வைத்து பூசை வழிபாடு இடம் பெறும் இவ்வாறான நிகழ்வு இவ் பிரதேச கிராமங்களில் குறைந்த அளவிலே மேற் கொள்ளப் பட்டு வருவதைக் காணக் கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அடுத்து **புதிர் உண்ணுதல் நிகழ்வு-** வயல் அறுவடை முடிந்ததும் வீட்டினுள் புது நெல் கொண்டு வந்து ஆலயங்களுக்கு புதிர் கொடுத்த பின்பு தங்களது புது நெல்லினைக் குற்றி தங்களது உற்றார் உறவினர்களை அழைத்து பொங்கல் அல்லது சோறுகறி சமைத்து சுவாமிக்கு படைத்து பூசை வழிபாடு நடைபெற்று வீட்டுத்தலைவனால் தங்களது பிள்ளைகளுக்கு சுவாமி அறையில் வைத்து மடையில் இருக்கும் உணவினை உருண்டைகளாகப் பிடித்து ஊட்டப்படும் அதன் பின்பு தங்களது உற்றார் உறவினர்களை அழைத்து பாய் விரித்து வாழை இலை போட்டு புதிர் உணவு பரிமாறப்படும் இவ் நிகழ்வு ஒரு சுவாரசியமாக இடம்பெறும் இவ்வாறான நிகழ்வு தற்போது கிராமங்களில் மறைந்து செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது. இவ் பிரதேச மக்களின் சிறப்பு என்னவென்றால் தங்களது வீடுகளில் உணவு உண்ணாமல் வேறெந்த இடங்களிலும் உண்ணமாட்டார்கள். இது அந்த அந்த் பிரதேசங்களுடைய பண்பாடு ஆகும்.

அடுத்து **சக்கரை அமுது கொடுத்தல் நிகழ்வு –** அநேகமான கிராமங்களில் அன்னை வழிபாடு முக்கியம் பெற்று இருந்தது அதில் முக்கியமாக மாரியம்மன்வழிபாடு முக்கியம் பெற்றிருந்தது. மாரியைத் தந்து விளைவைப் பெருக்குவதும் நோய் நொடிகளிலிருந்து காப்பதற்கும் இவ்வழிபாடு பெரிதும் உதவும் என்பது இவ் பிரதேச மக்களுடைய நம்பிக்கையாகும். இதனால் கோயில்களில் மட்டுமன்றி வீடுகளிலும் இவ்வழிபாடு மேற்கொள்ளப்படுகின்றது. ஆண்டுக்கு ஒருமுறை வீடுகளில் மாரியம்மனை வழிபடும் நிகழ்வை இங்கு சக்கரையமுது என அழைப்பர். இது பெரும்பாலும் ஆனிமாதங்களில் இடம்பெறும் இதனை வீட்டுத் தலைவன் அல்லது பூசாரி முன்னின்று நடத்துவார். இது ஒரு வேள்விச் சடங்காகும். இது பெரும்பாலும் போடிமார் வீட்டிலும் மத்திய தரத்தார் வீட்டிலும் மேற்கொள்ளப்படும் சக்கரை அமுது என்பது பச்சை அரிசியுடன் பயறு, பசும்பால், எருமைப்பால், தேங்காய்ப்பால், சர்க்கரை, சீனி, கற்கண்டு, கருப்பஞ்சாறு, தேன், பசுநெய், முக்கனிகள் போன்றவற்றினைக் கொண்டு தயாரிக்கப்படும் ஒரு பொங்கலாகும். அத்துடன் பல்வேறு வகையான பழங்களையும் வெங்காயம், சீனி, பால், அல்லது இளநீர் என்பனவற்றினைக் கொண்டு பாணக்கமும் மற்றும் மா, தேங்காய், சீனி, வெங்காயம், பழவத்தல் கொண்டு செய்யப்படும் துள்ளுமா மாரியம்மனுக்கு உகந்த பிரசாதங்களாகும். இதன்போது ஏழு வயதிற்குட்பட்ட மூன்று அல்லது ஐந்து பெண்பிள்ளைகள் கன்னியர்கள் இங்கு வைக்கப்பட்டு இவர்களுக்கும் படையல் செய்யப்பட்டு பூசை இடம்பெற்று பூசை முடிந்ததும் அவர்களுக்கு முதல் பிரசாதம் உண்ணக் கொடுத்து பின்பு அவர்கள் ஐவரையும் சக்கரையமுது கொடுக்கும் வீட்டுத் தலைவி அவர்களை அவர்களுடைய வீட்டுக்கடப்படி மட்டும் கொண்டு விட்டுத்து வருதல் வேண்டும் அப்போது வீட்டுத் தலைவியால் "போறகளா பிள்ளைகள்" "போறகளா பிள்ளைகள்" என ஒலியெழுப்ப அவர்கள் " ஓம்' 'ஓம்' போடுவார்கள். இதன் பின்புதான் ஏனையோருக்கு பிரசாதம் வழங்கும் மரவு இவ்பிரதேசத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வந்திருக்கின்றது இதனையடுத்து அன்றிரவு வீட்டு முற்றத்திலுள்ள வைரவர் பந்தலில் ரொட்டி சுடப்பட்டு வைரவருக்குப் பூசை இடம்பெறும் இவையெல்லாம் தற்போது இக்கிராமங்களில் மாற்றம் அடைந்து கொண்டு செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

அடுத்து **ஆடிப்பூரணையமுது–** இது எமது பிரதேச மக்களால் கதிர்காமத்தீர்த்தத்துடன் வீடுகளில் செய்யப் படும் முருக வழிபாட்டுடன் தொடர்பான நிகழ்வு ஆகும். இது புரட்டாதி மாதத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம்பெறும் கதிர்காம யாத்திரை செய்வது பெரிய ஆன்மீக பலன் தரும் நிகழ்வு ஆகும் முன்னய நாட்களில் கதிர்காம யாத்திரை செல்வோர் திரும்பி வராமல் இறந்து போகும் நிகழ்வுகளும் நடைபெற்றிருக்கின்றது. இதனால் கதிரையில் இறங்க முக்தி என்ற நம்பிக்கையும் மக்களிடத்தில் வளரலாயிற்று வீட்டில் ஒருவரோ அல்லது இருவரோ கதிர்காம யாத்திரை சென்றால் வீட்டிலுள்ள அனைவரும் அவர்கள் மீண்டும் வீடுவரும்வரை வீட்டில் முருக வழிபாடு செய்வர் இதன் உச்சக் கட்டமான வழிபாட்டு நிகழ்வே ஆடிப்பூரணை அமுதாகும் அன்று வீட்டில் முருகனை வழிபாடு செய்து அன்னதானம் வழங்குவர். இவ்வாறான நிகழ்வும் எமது மக்களிடத்திலிருந்து மறைந்து செல்வதைக் காணக் கூடியதாகவுள்ளது.

அடுத்து **தண்ணீர் சோற்றுப் பள்ளயம்**– இதுவும் சக்கரையமுது போன்று பெங்கல் பொங்காமல் இரவில் சோற்றினைச் சமைத்து அதற்குள் நீரை விட்டு அடுத்த நாள் காலையில் பல்வேறு வகையான கறிகளைச் சமைத்து கன்னிமாரை வீட்டிற்கு அழைத்து மாரியம்மனுக்கு படையல் செய்து வழிபடும் ஒரு நிகழ்வாகும். சக்கரையமுது போன்று பாணக்கம் . துள்ளுமா என்பன செய்யப் படும் .இரவில் வைரவ சடங்கு இடம் பெறும் இதுவும் எமது மக்களிடத்திலிருந்து மறைந்து செல்வதைக் காணக்குடியதாகவுள்ளது.

**அடுத்து வதனமார்சடங்கு (மாடுபிடிசண்டை அல்லது வில்லுகட்டிச் சடங்காகும்)**

இச்சடங்கானது பெரும் பாலும் போடிமாரிடத்திலும் எருமைமாடுகளுக்குச் சொந்தக் காரர்களாலும் நிகழ்த்தப்படுகின்ற ஒரு சடங்கு முறையாகும். இது எருமைமாட்டின் தெய்வமான வதனமாருக்கு செய்யப்படும் சடங்காகும். இச்சடங்கானது அயோத்தியிலிருந்து வதனமார் தேவதைகள் 108பேர் இலங்கையில் கரையொதிங்கினர். இவர்கள் மூன்று பகுதியாகப் பிரிந்து கந்தளாய்,சங்கமக்கண்டி,வெல்லாவெளி (பிள்ளையாரடி) இவ் பகுதிகளில் தங்கி அப்பகுதிகளிலுள்ள குழுமாடுகளைப் பிடித்து அவற்றில் பால் கறந்துண்டனர் ஆகாய மார்க்கமாகப் பயணிக்கும் காக்காவதனன் இவர்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டான். ஒரு சந்தர்ப்பத்தில் வில்லுக் குளத்தருகே வந்து இறங்கிய குழுமாட்டுப் பட்டியை மடக்கிப் பிடிப்பதற்காவும் இலங்கையின் மூன்று பாகுதியிலிருந்தும் வந்த வதனமார் மடக்கிப் பிடிக்க முற்பட்டபோது அவ் குழுமாட்டிற்கு தலைமை தாங்கி வந்த வெள்ளக்கடா எல்லோரையும் குத்தி உயிரிழக்க வைக்க தெய்வாதினமாக காக்கா வதனன் மாத்திரம் உயிர் பிழைத்தான். கைலயங்கிரியிலிருந்து சுவாதியம்மனை அழைத்து வந்து இறந்து கிடக்கும் வதனமார் அனைவரையும் உயிர்பித்தான். செத்துப்பிழைத்த வதனமார் தங்களையும் தேவலோகம் கொண்டு செல்லுமாறு சுவாதியம்மனை வேண்டினர். அதற்கு சுவாதியம்மன் செத்துப் பிழைத்தவர்களை சொர்க்கலோகம் கொண்டு செல்ல முடியாது எனக் கூறி பூலோகத்திலே விட்டுச் சென்றனர். ஐரோப்பிய காலத்தில் இவ்பகுதிக்குப் பொறுப்பாக இருந்த ஏஜெண்டு துரை இந்த ஐதீகத்தை ஒரு சடங்காகச் செய்ய முற்பட்டனர். இவ் பிரதேச மந்திரவாதிகளிடையே மந்திரப் போட்டியை வைத்து மந்திரவாதிக் குழுவை நியமித்து அதில் தலைமை மந்திரவாதியொருவரை நியமித்து இச்சடங்கினைச் செய்தார். இச் சடங்கை "வில்லைகட்டிச் சடங்கு" என அழைத்தனர்.

இது பெரும் போட்டியாக 40 நாட்கள் இடம்பெற்றது. இது மட்டக்களப்பிலுள்ள நான்கு வன்னிமையின் கீழ் நான்கு மந்திர வாதிக் குழுக்கள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு குழுக்களிலும் 20வது மந்திர வாதிகள் இருப்பர். தலைமை மந்திரவாதி ஒரு குடிசையிலிருந்து தியானித்துக் கொண்டு இருப்பார் வில்லையில் குழுமாடு வந்து இறங்கியதும் அதனைக் கண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மந்திர வாதி அதனை வில்லையிலிருந்து வெளியேறாது மந்திரத்தால் கட்டுவர். மாடு கட்டப்பட்டதும்வெல்லாவெளியிலிருந்து ஒரு குழுவும் இதில் தலைவர்கள் 4 பேரும் தலைமைப் பூசாரியுடன் இருக்க ஏனையோரிடம் வெளுக்கயிறு கொடுத்து மாட்டினைக் கட்டு மாறு கூறப்படும். ஒரு மந்திரவாதி கட்ட மற்றய மந்திரவாதி அவரின் கயிற்றினை தெறிக்க வைப்பார் மற்றவர் தலை மத்தைக் கழுத்தில் எறிவர் . மற்றக் குழு உடைந்த கயிற்றினை மந்திரத்தினால் ஒட்ட வைப்பர். இறுதியில் யாருடைய குழு மாட்டினை பக்கத்திலிருக்கின்ற வில்வமரத்தில் கட்டுகிறதோ அதுவே வெற்றி பெற்ற குழுவாக கருதப்படும் . இதன் பின்னர் வதனமாருக்கான சடங்கு இடம் பெறும் இதில் பொங்கல் செய்யப்படும் இது பச்சைப் பானையிலே செய்யப்படும் பொங்கல் பானையை மந்திரவாதியால் விரிய வைக்கப்படும் பாலை இரத்தமாக்கல். பாலினை பொங்க விடாது தடுத்தல் போன்ற நிகழ்வு இடம் பெறும் தலைமை மந்திர வாதியினால் அவரது மந்திரத் திறமையினால் இவற்றினையெல்லாம் வெட்டி. பொங்கல் பொங்கி முடிப்பார் .இறுதியில் வதனமாருக்கு பொங்கல் படைத்து பூசை இடம் பெறும். பின்னர் வில்லை கட்டிய சடங்கில் வெற்றி பெற்ற வருக்கு பரிசீல் வழங்கி கௌரவிக்கப்படும். நோக்கம் யாதெனில் மாடுகள் பட்டியிலிருந்து விலகாமலும், மாடுகளுக்கு நோய் நொடிகள் வராமலும் காட்டிலுள்ள மாடுகளைப் பட்டியில் சேர்த்து அவை பிரியாமலும் இருப்பதற்கும் மாடுகளின் கோபத்தினை அடக்கவற்காகவும் இச் சடங்கு செய்யப் படுகின்றது. பட்டியின் மாட்டுக்காரன் தெய்வமாடி இந்த நிகழ்வினை முன்னின்று நடத்துவான் இவ்வாறான சடங்கு முறைகளும் எம்மத்தியிலிருந்து மறைந்து செல்கின்ற போக்கு காணப் படுகின்றது.

**அடுத்து முன்னடித் தம்பிரான் வழிபாட்டு முறை** – இவ் வழிபாட்டு முறை இவ் பிரதேச மக்களிடத்தில் காணப் பட்டு வந்திருக்கின்றது அடர்ந்த காட்டுப் பகுதியல்தான் இவ்வாறான வழிபாடுகளைச் செய்து வந்திருக்கிறார்கள் மண்பானையில் பொங்கி இவ்விடத்திலே படைத்து வழிபாடு முடிந்ததும் கொண்டு சென்ற அத்தனை சாமான்களையும் அவ்விடத்திலே விட்டு விட்டு வரும் ஒரு நிகழ்வாகத் இவ்வழிபாடு காணப்பட்டு வந்திருக்கின்றது. . இவ் வழிபாடும் தற்போது மறைந்து சென்று கொண்டிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

**அடுத்து கொத்தியார் வழிபாட்டுமுறை** – இவ் வழிபாடானது கொத்தியாபொலக் கிராமத்தில் காணப்பட்டதாக கூறப் படுகின்றது. கருவுற்ற பெண்கள் நோய் நொடியின்றி. வாழவும். இலகுவாக குழந்தையினைப் பிரசவிக்கவும் இவ் பிரதேச மக்களால் இத் தெய்வ வழிபாடு மேற் கொள்ளப் பட்டு வந்திருக்கின்றது மாலை வேளையில் இங்கு பழமைமிக்க நாவல் மரத்தடியில் பல்வேறு வகையான பலகார வகைகளைச் செய்து நாவல் மரத்தடியின் வேரில் இவ்வாறான கற்பிணிப் பெண்கள் சுகப் பிரசவம் வேண்டி வழிபாடு நடாத்தியதாக கூறப் படுகின்றது அவ்வாறான நாகமரத்தடியில் தற்போது கோயில் அமைக்கப் பட்டிருப்பதாக இங்கு வாழ் மக்கள் கூறுகின்றனர் .இவ்வாறான வழிபாடும் மறைந்து செல்வதைக் காணக் கூடியதாகவுள்ளது.

**அடுத்து இவ் பிரதேசங்களில் மருந்து. மாந்திரிகமும்** என்பன காணப்பட்டு வந்திருக்கின்றது மருந்து என்பது பொதுவாக நோய்களுக்குரியது . மந்திரம் என்பது மறைத்து சொல்லப் படுவது. ஆற்றல் வாய்ந்த கோப்பினைக் குறிக்கும். சொற்களை திரும்ப திரும்ப உச்சரிக்கும் போது அதன் நினைவாற்றலின் வலிமை அதிகரிக்கின்றது. இவ் மந்திரம் மருந்து என்பன எமது முன்னோரால் நன்மையான விடையங்களுக்கும் அதே போன்று தீமையான விடயங்களுக்கும் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது. அதில் ஒரு சிலவற்றினை கூறலாம் என நினைக்கின்றேன்.

**மந்திரஜாலங்களின் பயன்பாடு** – பேய்கள் அல்லது கெட்ட ஆவிகள் பிடிப்பதனாலே பெருநோய்கள் ஏற்படுகின்றது என்ற நம்பிக்கை மக்களிடத்தில் காணப்பட்டது இதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலான மக்கள் வைத்தியசாலையினை நாடாமல் பெரும் பாலும் மந்திர வாதிகளை நாடினர் இதுவும் தற்காலத்தில் மாற்றம் அடைந்து செல்கின்றது.

**அடுத்து திருநீறுபோடும் முறைமை** பிள்ளைகளுக்கு காய்ச்சல் பயந்தால் போன்றன ஏற்பட்டால் நடுச்சந்தியில் வைத்து மந்திர வாதி நோய்யாளிக்கு திருநீற்றை ஓதி நோய்யாளியின் நெற்றியில் பூசி விடுவார் இதனை திருநீறு போடுதல் என அழைப்பார்கள். இதுவும் இவ்பிரதேச மக்களிடத்திலிருந்து மறைந்து செல்கின்றது.

**குறிபார்த்தல்** – எதற்கும் குணமாகாத வியாதி இருந்தால் மந்திர வாதி அதற்குரிய காரணத்தினை அறிய பூ, பழம், அரிசி, எலுமிச்சம் பழம் போன்றவற்றினைக் கொண்டு மடையை மந்திரவாதி வைப்பார். அவ் மடையின் மேல் சிறிய ஒரு வில்லின் நாணில் பாக்கு வெட்டியோன்று தொங்கவிடப் பட்டிருக்கும். அவ்வேளையில் மந்திரவாதி மந்திரத்தை முணுமுணுத்துக் கொண்டே இருப்பான். அந்த வில்லிலே குறித்த பேயானது வெளிப்பட்டு நின்று நோயாளியை வருத்துவது என்னவெனறு அவனுக்கு குறிப்பிடும். என்ன நோய்யினால் துன்பம் நேர்ந்துள்ளது ஆயின் அதனையும் குறி தெரியப்படுத்தும் என்பர். இதன் பின்பு பேய்க்கு கழிப்புச் சடங்கு இடம்பெறும்.

**அடுத்து தண்ணீர் ஓதிக் கொடுத்தல்** – வயிற்றுச்சூடு, வயிற்றுக்குள் கட்டி, பயிர் பட்சைகளுக்கு விசிறுதல் போன்றவற்றிற்கு தண்ணீர் ஓதிக் கொடுக்கப்படும்.

**அடுத்து மந்திரவாதிகளின் மந்திர சக்தி** காடுகளில் கொடிய விலங்குகளிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் தன் எதிரி சுடும் வெடி குறிதவறிப் போவதற்கும் வெடிபட்டு வீழ்ந்த விலங்குகள் உயிர் பெற்று ஓடுவதற்கும் குறிதவறி வந்த யானைகள் வலியிழந்து போவதற்குமான மந்திர சக்தி வாய்ந்த மந்திர வாதிகள் வாழ்ந்து தங்களது மந்திரங்களைப் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள் இவர்கள் தங்களது மந்திரங்களை வேறு ஒருத்தருக்கும் சொல்லிக் கொடுக்காமையினால் அது அவர்களுடன் மறைந்து செல்கின்ற போக்கு காணப் படுகின்றது.


**அடுத்து திருநீறு ஓதி நாற்புறமும் எறிதல்** – அதாவது பயிர்களை பூச்சி புழுக்கள் தாக்காமலும் நெல் நிறைந்த பொலிக்களங்களை மழை பெய்து சேதம் செய்யாமலும். நெற் குவியல்களை பூதங்கள் சாப்பிடாமலும் நாற்புறமும் திருநீறு ஓதி வீசி விடுவார்கள். இவ் முறையும் இவ் பிரதேச மக்களிடத்திலிருந்து மறைந்து செல்வதைக் காணக் கூடியதாகவுள்ளது.

**அடுத்து மருந்து** என்ற விடயத்தினை நோக்குமிடத்து நோய்க்குரிய எல்லா மருந்துகளையும் இது குறித்து நிற்கின்றது அதாவது பிரிந்தவர்களைச் சேர்த்தல், மனம் வேறுபட்டவர்களை ஒன்று சேர்த்தல், வயிற்றுக் கட்டி கரைத்தல் போன்றவற்றிக்கு மருந்து வழங்கப்பட்டு நோய்கள் குணப்படுத்தப்பட்டிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. இவையும் தற்போது மாற்றம் அடைந்து வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

**அடுத்து விசக்கல் பாவனை** – பாம்பு தீண்டியவர்களை கொண்டு சென்று மந்திர உச்சாடனம் செய்து அந்த விசக் கல்லில் பிடிப்பதன் மூலம் விசம் குறைக்கப்பட்டு குணம் அடைகின்ற முறைமை காணப்பட்டு வந்தாலும் இவற்றின் பாவனையும் குறைந்தளவிலே காணப்பட்டு வருகின்றது அது இவ் பிரதேசத்திலே கன்னன் குடா என்ற கிராமத்தில் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அடுத்ததாக மரணக் கிரியைகளில் இடம் பெறுகின்ற பல்வேறு விடயங்களில் தற்போது மறைந்து செல்கின்ற ஒரு சில விடயங்களை கூறலாமென விளைகின்றேன் ஆரம்ப காலங்களில் இறந்த உடலை குழிதோண்டி புதைக்கின்ற முறைமை வழக்கத்திலிருந்து வந்திருக்கின்றன பின்புதான் எரிக்கின்ற முறைமை எம் மக்கள் மத்தியில் தற்போது நிலவி வருகின்றது.

மரணக்கிரியைகளில் பல்வேறு நிகழ்வுகள் இடம் பெறுகின்றன அந்த நிகழ்வுகளில் தற்போது இவ் பிரதேச மக்களிடையே மறைந்து செல்கின்ற சில விடயங்களை மாத்திரமே கூற விரும்புகின்றேன் பாடையில் சுமத்தல் அடக்கம் பண்ணும் முறை, பறையடித்தல், இரண்டுகேற் வைத்தல், காவற் கட்டை எரித்தல், பிதிர்க்கடன், சித்திரப் பௌர்ணமி

**பாடையில் சுமத்தல்** – இறந்த உடலை பாடைகட்டி சுமந்து செல்வது வழக்கமாக இருந்து வந்தது இது தற்போது பெட்டி எடுத்து அதனுள் இறந்தவரின் உடலை அதனுள் இட்டு வாகனத்தில் கொண்டு செல்கின்ற முறைமை தற்போது காணப் பட்டு வருகின்றது அநேகமாக இவ் பிரதேச கிராமங்களில் பாடையில் பிரேதத்தினை சுமந்து கொண்டு செல்லும் வழக்கம் இருந்தாலும் இவை தற்போது படிப் படியாக மாறிக் கொண்டு செல்வதைக் காணக் கூடியதாகவுள்ளது. நாகரிக வளர்ச்சி மாத்திரமன்றி ஒரு கௌரவ நிகழ்வுக்காகவும் பெருந் தொகையான பணத்தினைச் செலவழித்து உடல்களை நல்லடக்கம் செய்கின்ற முறைமை ஒரு சில கிராமங்களைத் தவிர மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. இது எமது மரபினை மாற்றியமைக்கின்ற நிகழ்வாக நடந்தேறிக் கொண்டு வருகின்றது.

**பறையடித்தல்** – பறை என்பது ஒரு ஊடகம் இது ஒரு வகையான செய்தியைக் கூறுபவையாக இருக்கின்றது இதனை பறை அறைதல் அல்லது பறை அடித்தல் எனப் பொருட்படும் பறை அறைதல் முறையில் 18 வகையான தாளக்கட்டுக்கள் உள்ளன இதில் இறந்த உடலினை விரைவாக சுடலைக்கு கொண்டு சென்று புதையுங்கள் என்ற செய்தி இதனால் கூறப்படும் அதே போன்று வருகின்றவர்களை வரவேற்கும் தாளத்தினையும் அறிவிப்பார்கள். அத்துடன் பிரேதம் கொண்டு செல்லும் போது சந்தி மறித்து ஆடுதல், இறந்த உடலினை அடக்கம் செய்வதற்கான நிலத்தினை கூவி விற்றல், போன்ற நிகழ்வுகளுக்கு எமது முன்னோரால் பறை அடித்து உடல்களை அடக்கம் செய்யும் முறை காணப்பட்டு வந்தது ஆனால் தற்காலத்தில் அநேகமான கிராமங்களில் பறைக்குப் பதிலாக ஒலி பெருக்கிப் பயன்பாடு இடம் பெறுவதைக் காணக் கூடியதாக உள்ளது பறையடித்தல் பாரம் பரியம் குறைந்து செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

**இரண்டு கேற் வைத்தல்** – இறந்த உடலினை நாம் அன்றாடம் பாவித்த கேற்றினால் கொண்டு செல்லாது பக்கத்தில் இருக்கின்ற கேற்றினால் கொண்டு செல்ல வேண்டும் என்பது எமது முன்னோரின் நடை முறையாகும் அதற்காக அவர்கள் கம்பி வேலியினால் இரண்டு விதமான படலைகள் அமைத்திருந்தனர் தற்போது எமது கிராமங்களில் அவ்வாறான கேற்கள் அமைப்பது மருவிப் போய் கொண்டு இருப்பது மட்டுமன்றி அதுபற்றிய தெளிவின்மை இல்லாமையே காரணமாய் அமைந்து விடுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நிலப்பாவாடை விரிக்கின்ற முறைமை** இதுவும் எமது முன்னோரால் மேற் கொள்ளப் பட்டு வந்திருக்கின்றது தற்போது கிராமங்களில் இதுவும் மறைந்து கொண்டு செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

அடுத்து **கொள்ளிக்குடம் கொத்தும் நிகழ்வு** உடலினை அடக்கம் செய்த பின்பு இறுதியாக இடம் பெறும் நிகழ்வாகும் இந்த நிகழ்வினை அதற்குப் பொறுப்பான கடமைக்காரர்களே செய்ய வேண்டும் இதற்கான ஒழுங்கமைப்பு முறைகளும் எமது பிரதேச மக்களிடத்திருந்து மறைந்து செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

அடுத்து **மாராப்பு நிகழ்வு** (கட்டிப் பிடித்து அழும் நிகழ்வு) இறந்த உடலின் உறவினர்கள் இறந்தவரின் நினைவுகளை ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்து இறந்தவருடைய செயற்பாடுகளைச் சொல்லி மிகவும் இனிமையான குரலில் சொல்லிச் சொல்லி குழுக் குழுவாக அழுவார்கள். தற்போது இவ் முறை முற்றிலும் மறைந்து கொண்டு செல்கின்றது தற்போது யாரும் இறந்தால் துக்கத்திற்காக அழுகின்ற முறைமை இவ் பிரதேசத்திலே குறைந்து கொண்டு செல்வதைக் காணக் கூடியதாகவுள்ளது.

அடுத்து **விவசாய வாழ்வியலோடு தொடர்பான விடயங்களைப்**– பாக்கின்ற போது இவ் பிரதேச மக்களுடைய ஜீவனோபாய தொழில் விவசாயமாகும் விவசாயி மண்ணை உழுவதற்கு நாட்டுக் கலப்பை அல்லது உல்லுக்கலப்பையை பயன்படுத்தி வந்திருக்கின்றனர் இதற்கு மாடுகளைப் பயன் படுத்தி மண்ணை உழுதினர் தற்போது இவ் உழுதல் கலப்பை வகை எமது மக்களிடத்திலிருந்து அருகிப் போவதைக் காணக்கூடியதாகவுள்ளது இதற்குப் பதிலாக தற்போது மெசினறி உழுதல் இயந்திரங்கள் பயன் படுத்தப் படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.



அடுத்து **ஏத்து** இந்த உபகரணம் வயலில் வேளாண்மைக்கு நீரினைப் பாய்ச்சுவதற்கு எமது முன்னோரால் பயன் படுத்தப்பட்டு வந்த உபகரணமாகும். முக்காலியில் ஏத்தினைக் கட்டி நீரைப் பாய்ர்சுவார்கள் தற்போது இதன் பயன்பாடும் எமது பிரதேச மக்களிடத்தில் மறைந்து கொண்டு செல்கின்றது தற்போது இயந்திர நீர்ப்பம்பிகள் பயன்படுத்தப் படுகின்றது.

இதனால் விரைவாக நீரைப் பாய்ச்சமுடியும் ஆனால் உடல் உளத்தி–ற்கு வேலை இல்லை இதனால் உடல் ஆரோக்கியம் பேணப்படாது. ஆனால் ஏத்து மூலம் நீர்பாசனம் செய்யும் போது உடல் உள ஆரோக்கியம் பேணப்படும் மிகக் குறைந்த செலவினம் சூழலுக்கு தீங்கு இல்லை போன்றன இதில் காணப்படுகின்றது.





**அவூரி**– இதுவும் எமது முன்னோரால் நெல்லினை தூற்றுவதற்குப் பயன் படுத்தப்பட்டு இருக்கின்றது. தற்போது இது மாற்றம் அடைந்து இதற்கு காற்றாடி பயன் படுத்தப் படுகின்றது.

அடுத்து **அரிவாள்** (தாக்கத்தி) என்று இதனை கிராமத்து பாசையால் அழைப்பார்கள் வேளாண்மையினை வெட்டுவதற்காக பயன் படும் உபகரணமாகும். இதனை விவசாய குடிமக்களே பயன்படுத்துவர் இதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாழிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப் படுகின்றது விவசாயிகளின் உடல் உள ஆரோக்கியம் பேணப்படுகிறது ஆனால் இவை தற்போது மெசினறியாக ( வேளாண்மை வெட்டும் இயந்திரம் ) மாற்றம் அடைந்துள்ளது இதனால் பெருமளவான விவசாயக் குடும்பங்கள் தொழில் வாய்ப்பின்றி கஸ்ரப்படுகின்ற நிலையும் பெருமளவான நெல் தானியங்கள் சேதமுறுகின்ற நிலையும் அத்தோடு சூழல் பாதிப்படைகின்ற நிலமையும் இதனால் எதிர் நோக்க முடியும்.



அடுத்து **சுவாமி தீர்த்தம் தெளித்தல்–** எமது முன்னோர்கள் வயலில் பூச்சி புழுக்கள் நோய்கள் ஏற்பட்டால் இயற்கை முறை விவசாயத்தினையே கடைப் பிடித்து வந்தனர் அதாவது ஒரு மாதகாலம் கோயிலிற்குச் சென்று அங்கு விரதமிருந்து ஒவ்வொரு நாளைக்கும் ஒவ்வொரு மிளகு கடித்துண்டு நீர் அருந்தி பூசை வழிபாடுகளில் ஈடுபட்டு இறைவனால் பூசிக்கப் பட்ட தீர்த்தத்தினை குடம் அல்லது செம்பில் எடுத்து வாயில் துணிகட்டி தலையின் மேல் செம்பினை வைத்து இரண்டு பேர் வெள்ளை பிடிக்க அதன் நடுவே தீர்த்தம் எடுப்பவர் அந்த ஊர் போடிமார் சகிதம் பறையடி சங்கு முழங்க ஆலயத்திலிருந்து வட்டை அல்லது வயல்களை நோக்கி ஊர்வலமாகப் புறப் படுவார்கள் அங்கு வயலுக்குள் சென்று குடம் அல்லது செம்பில் கொண்டு வந்த தீர்த்தத்தினை வேப்பம் பத்திரத்தினால் வயல் முழுவதும் தெளிப்பார்கள் அதன் பின்பு வயலில் காணப் படுகின்ற பூச்சி புழுக்கள் நோய்கள் என்பன அழிக்கப்பட்டு சிறந்த நெல் விளைச்சலைப் பெற்றிருக்கின்றனர் இவை தற்போது மாற்றம் அடைந்து கூடுதலான விசாய இரசாயனங்களின் பயன்படுத்தப்பட்டு வருவதனால் விதைகள், தானியங்கள் நச்சுத் தன்மை அடைகின்றது இதனை நாம் பயன்படுத்தும் போது பல்வேறு வகையான நோய்களுக்கு உட்படுத்தப்பட்டு பெருமளவான பணத்தினை வைத்தியத்திற்கு செலவளிக்கின்ற தன்மையும் இதனால் உயிர்களை மாய்த்துக் கொள்கின்ற நிலமையும் இதனால் அதிகம் தற்போது ஏற்பட்டுக்கொண்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது (கேன்சர் புற்றுநோய்)

அடுத்து **வயலில் கதிர் கண்ட பொங்கல் / நாகதம்பிரான் பொங்கல்** – நெல் விதைத்து வேளாண்மை கதிர் பறிந்ததும் அத்துடன் நாகதம்பிரானுக்கு வயலிலுள்ள புற்றடியில் பால்,பழம் கரைத்து வைத்து வெள்ளைப் பொங்கல் பொங்கிப் படைத்து வழிபாடு செய்து வந்திருக்கின்றனர் எமது முன்னோர்கள் இது தற்போது எமது விவசாய மக்களிடத்திருந்து அருகிப் போவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

அடுத்து இப்பிரதேச மக்களிடத்தில் பயன்பாட்டில் இருந்த இலக்கிய வடிவங்களாக வாய் மொழி இலக்கிய வடிவங்களும் ஏட்டு இலக்கியங்களும் பாவனையில் இருந்திருக்கின்றது எழுத்தறிவு குறைந்த பாமர மக்களிடத்தில் வேளாண்மைப் பாடல்கள், விடுகதை கூறுகின்றமரவு, இறைவனைத் துதித்துப் பாடும் மரவு, கரகம், கும்மி, வசந்தன் போன்றனவும் அடுத்து ஏட்டு இலக்கிய வடிவங்களான மருத்துவ வாகடங்களான பாம்புக்கடி சிறுபிள்ளை வைத்திய வாகடம் மந்திர வாகடங்கள், சாத்திர வாகடங்கள் என்பன இவ் பிரதேச மக்களிடத்தில் காணப்பட்டு வந்திருக்கின்றது. இவற்றினை கற்றறிந்தவர்கள் எனையோருக்கு கற்றுக் கொடுக்காமையினால் அது அவர்களுடன் செல்வாக்கு இழந்த நிலைமையினைக் காணக்கூடியதாகவுள்ளது.

அடுத்து இவ் பிரதேச மக்களிடத்தில் வாழ்வியல் தொழிலின் பிரதான தொழிலாக மீன்பிடி கொள்ளப்படுகின்றது இந்த மீன்பிடித் தொழிலில் மீன்களைப் பிடிப்பதற்கான உத்திகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கான உபகரணங்களும் எம்மை விட்டு மறைந்து செல்கின்றது அதில் ஒரு சிலவற்றினைக் கூறலாமென நினைக்கின்றேன்.



இதில் பிரதானமாக **கரப்பு** இந்த உபகரணமானது கம்புகளைக் கொண்டு அமைக்கப்படும் உபகரணமாகும் கரப்புக் குத்துதல் என்னும் நிகழ்வு ஒரு சுவாரசியமானது முதலில் கரப்புக் குத்துபவர்கள் ஒன்று சேர்கின்ற முறையானது ஒரு பொதுவான நாற்சந்தியில் எல்லோரும் கொண்டு கூடுவார்கள் நாற் சந்தியில் முதலில் வருபவர்கள் ஒன்று சேர்ந்து மற்றைய மீன்பிடிகாரர்களுக்கு வரும்படி எல்லோரும் ஒருமித்த குரலில்அழைப்பு விடுவார்கள் அதாவது இவர்களால் ஏனையோரை வரும்படி இவ்வாறு அழைப்பார்கள் கரப்புக் கூத்தப் போகிறோம் வருபவர்கள் வரலாம் என எல்லோரும் ஒருமித்த குரலில் கூவா போடுவார்கள் அதன் பின்பு எல்லோரும் அவ்விடத்தில் ஒன்று சேர்ந்து அதற்கு ஒரு தலைவனை அவர்கள் தெரிவு செய்து அதன் பின்பு தலைவரால் எல்லோருக்கும் அறிவுரை கூறப்படும் அதன் பின்பு மீன் பிடிக்கும் இடத்தினை நோக்கி அனைவரும் ஒன்றன் பின் ஒன்றாக அணிவகுத்துச் செல்வார்கள். அதன் பின்பு குளம் அல்லது ஆற்றில் இறங்குவதற்கு முன்பு தங்களுக்கு ஆபத்தினை ஏற்படுத்து கின்ற முதலை போன்றவை கடிக்காமல் அவற்றின் வாயினைக் மந்திரத்தினால் கட்டி விடுவார்கள் அது மட்டுமன்றி நிறைய மீன் பிடிபடுவதற்கான மந்திரத்தினையும் உச்சரித்து விடுவார்கள் அதன் பின்பு வட்டமாக நின்று கரப்பினை எல்லோரும் ஒரே நேரத்தில் சீ வடிவில் நின்று குத்துவார்கள் இந்த மீன்பிடி உபகரணமும் இக் கிராமங்களில் மாற்றம் அடைந்துள்ளது.

**அடுத்து எய்அம்பு -** இது வில் போன்ற அமைப்பு அதன் மீது இரும்பால் செய்யப்பட்ட கூரிய அம்பு ஒன்று காணப்படும் மீனைக் கண்டதும் அதனால் எய்து விடுவர் அப்போது மீன் ஓடாது நின்றுவிடும்.



**அடுத்து மண்டான்** - இதுவும் ஒரு மீன்பிடி உபகரணமாகும் இதன் நுனியில் கயிற்றினைக் கட்டி அதனை ஒரு பலமான மரத்தில் கயிற்றினைக் கட்ட வேண்டும் அதன்பின் முன் பக்கத்திலுள்ள கூரிய பக்கத்தினால் மீன்களைப் பார்த்து குத்தி பிடிக்கும் முறையாகும் இதுவும் எமது பிரதேசத்திலிருந்து மறைந்து செல்கின்றது.

**அடுத்து மின்னி கட்டுதல்-** மீன்பிடி உபகரணமாகிய அத்தாங்கு என்று கிராமத்து மண்வாசனையால் அழைக்கப்படும் இவ் உபகரணத்தினைக் கொண்டு எமது முன்னோர்கள் அதிகமான மீன்களைப் பிடித்து தங்களது ஜீவனோபாயத்தினை நடாத்தி வந்திருக்கின்றனர் இவ் உபகரணமானது நுலினால் பின்னப்பட்ட வலையாகும். இதனைக் மெல்லிய வளைக்கப்பட்ட கம்பின் மேல் வைத்து கட்டி இவ் உபகரணத்தினை அமைப்பார்கள் கூட்டமாக எல்லோரும் ஒருமித்து கதை பகிர்ந்து கண்டல் தாவரங்கள் மற்றும் மின்னிப் பற்றை என்ற தாவரத்தின் அடியில் நிறைய மீன்கள் காணப்படும் அவ்வகையான தாவரங்களை எல்லோரும்வட்டமாகச் சுற்றி அப்பற்றைகளை கலைத்து மீன் பிடிப்பார்கள் இவ்வாறான முறைகளும் எம்மக்களிடத்திலிருந்து மறைந்து செல்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**அடுத்து பறி** – இது ஈச்ச மட்டை, தளப்பொத்து மட்டை போன்றவற்றினைக் கொண்டு அமைக்கப்படும் உபகரணமாகும். இதனை ஓடிவருகின்ற நீருக்கு முன்னால் இதனை வைத்து மீன் பிடிக்கும் முறையாகும் இம்முறையும் எம் மக்களிடமிருந்து மறைந்து செல்கின்றது.

**வாளால் வெட்டும் முறை** இவ்முறையானது பிரகாசமிக்க ஒளியுடன் கூடிய இலாம்பு டோச்லையிட், பெற்றோல் மெக்ஸ் போன்ற உபகரணங்களைப் பயன்படுத்தி நீரினுள் ஒளியைச் செலுத்தினால் மீன்கள் ஒளிக்கு வரும் அப்போது வாளினால் மீனை வெட்டி பிடித்தல் வேண்டும் இவ் முறையும் எம் மக்களிடத்திலிருந்து மறைந்து செல்கின்றது.


**அடுத்து சூழ்ளினால் மீன் பிடித்தல்** இதுவும் ஒரு மீன் பிடி உபகரணமாகும் நீண்ட தடியில் நுனிப் பக்கத்தில் சிறிய அத்தாங்கு போன்ற உபகரணங்களைச் செய்து கம்பின் நுனியில் கட்டி நீரினுள் வெளிச்சத்தினை செலுத்தி மீன்களை அந்த உபகரணத்தின் மூலம் மீன்களை அள்ளி எடுக்கும் செயல் முறையாகும் இவ் முறையும் எமது மக்களிடத்தில் மறைந்து கொண்டு செல்வதைக் காணக் கூடியதாகவுள்ளது.

**அடுத்து எமது பிரதேச மக்களின் வாழ்வியலில் பயன்படுத்தப் பட்ட வாழ்வியல் பொருட்கள்** பற்றி நோக்குமிடத்து.தற்போது மக்களால் பயன் பாட்டில் இருந்து மறைந்து செல்கின்ற ஒரு சில பொருட்கள் பற்றிக் கூற முனைகின்றேன்.

**வட்டா** – இது பல்வேறு வடிவங்களில் காணப்படும் அரசஇலை வட்டா, கந்து வட்டா, கழுத்து வட்டா போன்ற வட்டாக்கள் எமது வாழ்வியலில் மங்கலமான நிகழ்வு அமங்கலமான நிகழ்வுகளுக்கு எமது முன்னோர்களால் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது. இவை தற்போது வெற்றிலை பாக்கு போன்றவற்றினை பரிமாறிக் கொள்ளும் ஒருவகை பாத்திரமாக காணப்படுகின்றது தற்போது இவ் பாத்திரங்களை விடுத்து இதற்குப் பதிலாக சில்வர் பிளேற், ஒலையால் இழைக்கப்பட்ட தட்டு போன்றன பயன்படுத்தப்பட்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.








**களிமண் சட்டி பானைகள்** – எமது முன்னோர்களால் உணவு மற்றும் காய்கறிகள் என்பனவற்றினை சமைத்து பரிமாறுவதற்கு இவ் உபகரணங்கள் பயன் படுத்தப்பட்டதோடு நல்ல சுவையான உணவுகளையும் நச்சுத் தன்மையல்லாத உணவுகளையும் சமைத்து உண்டு நீண்ட காலம் நோய் நொடியில்லாமல் வாழ்ந்து வந்தான் இது தற்போது அலுமினியம் பாத்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் தற்போது பல்வேறு நோய்களை எதிர் கொள்ளக்கூடிய சந்தர்பங்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றது அலுமினியப் பாத்திரத்தில் சமைக்கும் போது மிக விரைவாக சமைக்க முடியும் ஆனால் இவ்பாத்திரத்தில் சமைக்கின்ற உணவுப் பொருட்களுக்கு சுவையூட்டிகளான உப்பு தேசிப்புளி என்பனவற்றினை சேர்க்கும் போது விஞ்ஞான ரீதியாக அலுமினியம் ஒரு உலோகம் தேசிப் புளியில் சல்பூரிக்கமிலம் உண்டு இவை அல்மினியத்துடன் தாக்கம் செலுத்தி பல்வேறு வகையான விளைபொருட்களை உணவுடன் சேர்ப்பதனுடாக உணவு நஞ்சாகின்ற நிலைமை எற்படுகின்றது இதனை உண்பதனுடாக பல்வேறு நோய்களுக்கு ஆளாகி உயிர்களை மாய்க்கின்ற நிலைமையும் தற்போது ஏற்பட்டு வருகின்றது.



**அடுத்து அம்மிக்குளவிப் பயன்பாடு** மிளகாய்கூடு, தேங்காய்க்கூடு, சம்பல்அரைத்தல் போன்றன அம்மி மூலம் அரைக்கப்பட்டு வந்தது இது தற்போது மின் உபகரணமான பிளண்டர் பயன் படுத்தப்பட்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

**அடுத்ததாக உரல் உலக்கை** – இதனை வயது வந்த முதியவர்கள் வெற்றிலையினை புசிப்பதற்கு பயன்படுத்திய உபகரணமாகும் இதுவும் மக்களிடத்தில் மறைந்து போவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

**அடுத்ததாக திருநீற்றுக்குடுவை** – இது எமது முன்னோர்களினால் தேங்காய் சிரட்டையினை நன்றாக சீவி அதனை (முழுத்தேங்காயினை) சீ வடிவில் வெட்டி அதனுள் திருநீற்றினைப் போட்டு திண்ணையில் கொழுவி விடுவார்கள் இது தற்போது சில்வர் பாத்திரங்கள், செப்பு பாத்திரங்களில் பயன் படுத்தப்பட்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.



**அடுத்ததாக றங்குப் பெட்டி** – இவை ஆரம்ப காலத்தில் மரம், தகரம் போன்றவற்றில் இவ் உபகரணம் அமைக்கப் பட்டு இருந்தது. இவ் உபகரணத்தினுள் உடைகளை வைத்துப் பூட்டி பாதுகாத்து வந்தனர் தற்போது இவை மாற்றம் அடைந்து இதற்குப் பதிலாக தோல் பிறஸ்ரிக் போன்றவற்றினால் அமைக்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.



**அடுத்ததாக அகப்பை** – எமது முன்னோர்களினால் சிரட்டையினைச் சீவி அதனுள் துளைகளை இட்டு நீண்ட கம்பினை அதன் துழையினுள் செலுத்தி இவ் அகப்பையினை தயாரித்துக் கொள்வார்கள். இவற்றினால் கறி சோறு என்பன எடுப்பதற்கும் சமைப்பதற்கும் இவை பயன்படுகின்றது. இவை தற்போது சிரட்டைக்குப் பதிலாக பிளாஸ்ரிக் அலுமினியம், சில்வர் பயன்படுத்தப்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

**அடுத்து மத்து குண்டான்** – இதுபாலில் இருந்து நெய் கடைந்து எடுப்பதற்கு பயன்படும் உபகரணமாகும். மத்து முதிரை, தேக்கு போன்ற வைர மரங்களினால் செய்யப்பட்டு இருக்கும் குண்டான் களிமண் அல்லது செப்பினால் செய்யப்பட்டிருக்கும் இதனுள் தயிரை விட்டு மத்தினால் கடைந்து நெய் எடுத்து உண்டு வாழ்ந்திருக்கிறார்கள். இவ்வாறான உபகரணங்களும் எம்மை விட்டு மறைந்து செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அடுத்ததாக கொட்டு** - எமது முன்னோர்கள் தூய நீரினைப் பெறுவதற்காக நிலத்தினை ஆழமாகத் தோண்டி மரக் கொட்டுக்களைப் நிலத்தில் பதித்து தூயநீரினைப்பருகி நீண்ட காலம் உயிர் வாழ்ந்திருக்கிறார்கள். தற்போது இவை மாற்றம் அடைந்து குழாய்க் கிணறுகள் கல் கொண்டு அமைக்கப்பட்ட கொட்டுக் கிணறுகள் போன்றன பயன்பாட்டில் உள்ளதோடு கிணற்றிலிருந்து நீரினை அள்ளி எடுப்பதற்கான துலா பயன்பாட்டு முறையும் மறைந்து தற்போது இதற்குப் பதிலாக கப்பி கைவாளி நீர்ப்பம்பிகள் மூலம் நீரை தாங்கிகள் மூலம் சேமித்து பயன்படுத்துகின்ற முறைமை தற்போது பயன்பாட்டில் உள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.

**அடுத்ததாக தளப்பொத்து** - இவ் உபகரணமானது தளப்பொத்து என்ற ஒரு வகை மரத்திலிருந்து எடுக்கப்படுகின்றது. எமது முன்னோர்கள் மழை, வெயிலிலிருந்து தம்மைப் பாதுகாப்பதற்காக இவ் உபகரணத்தினை பயன்படுத்தினார்கள். இவை தற்போது எமது பிரதேசத்திலிருந்து மறைந்து சென்றுவிட்டது. இதற்குப் பதிலாக குடை பயன்பாட்டில் உள்ளது.



**அடுத்ததாக சாப்பை** - இதுவும் மழைகாலங்களில் உடலைப் பாது காப்பதற்காக அணியும் ஒருவகை ஆடையாகும் இது பன்புல்லினால் இழைக்கப்பட்டு சேட் போன்று அமைக்கப்பட்டிருக்கும். இவையும் எமது மக்களிடத்திலிருந்து மறைந்து செல்கின்றது. இது தற்போது றெயின் கோட், ஜெக்கின் போன்ற உடை வடிவங்களாக தற்போது மாற்றம் அடைந்து பயன்பாட்டில் உள்ளதை காணமுடிகின்றது.

**அடுத்து ஆடை அணிகலன்கள்** பற்றி நோக்குமிடத்து ஆண்கள் வேட்டி சால்வை பெண்கள் சேலை பெண்கள் நீட்டுச் சட்டை வாலிபர்கள் சாரம் சிறுவர்கள் லாஸ்ரிக் வைக்கப்பட்ட லுங்கி அணிவார்கள் போடிமார்கள் தோளில் ஒருமுளத் துண்டு அணிந்திருப்பார்கள். இவ்வாறான ஆடைகள் தற்போது படிப்படியாக குறைந்து கொண்டு செல்வதையும் இதற்குப் பதிலாக நாகரிக மாற்றம் காரணமாக புதுப்புது ஆடைகள் அறிமுகம் செய்யப் படுவதால் அதற்கு எமது சமூகம் உள்வாங்கப்படுவதால் எமது பாரம்பரியத்தினை மாற்றியமைக்கின்ற தேவை இவர்களுக்கு ஏற்படுகின்றது.

இதே போன்று அணிகலன்களைப் பற்றி நோக்கும் போது மின்னி அணிவிப்பது இது எமது முன்னோர்களால் ஆண் குழந்தைகளுக்கு அணிவிப்பது இது தற்போது மாற்றம் அடைந்து சென்றுள்ளது.

**அடுத்து கம்மல்** - இதுவும் எமது முன்னோர்களினால் பெண் குழந்தைகளுக்கு அணிவிப்பதாகும். இதுவும் தற்போது மறைந்துள்ளது.

**அடுத்து பஞ்சாயுதம்** - இது எமது முன்னோர்களினால் குழந்தைகளுக்கு கண்ணூறுக்காக தங்கம்,வெள்ளி போன்றவற்றில் செய்து கறுத்த நாடாவில் போட்டு கழுத்தில் தொங்க விடுவார்கள் இதுவும் மாற்றம் அடைந்துள்ளது.

**அடுத்ததாக பண்டு அரைமுடிச்சதங்கை** - இது அரச இலை வடிவில் காணப்படும் இது சிறு பிள்ளைகளுக்கு இடுப்பில் அணியப்படும் இதுவும் எம்மக்களிடத்திலிருந்து மறைந்து சென்றுவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அடுத்து காதை இது** ஆண்கள் காலில் அணியும் நீளமான சிலம்பு ஆகும். வையும் எம் மக்களிடத்திலிருந்து மறைந்து சென்றுவிட்டது.

**அடுத்து உணவுப் பழக்க வழக்கங்கள்** மண்மனை மேற்குப் பிரதேச மக்களுடைய விருந்தோம்பல் முறைமை வீட்டிற்கு வருகின்ற விருந்தினரை இன்முகம் கொண்டு வரவேற்கின்ற முறைமை காலா காலமாக இருந்து வந்திருக்கின்றது.

கடமையின் நிமிர்த்தம் எமது மட்டக்களப்பு பிரதேசத்திற்கு வந்தவர்கள் நிரந்தரமாக இங்கு தங்கி திருமணம் முடித்து வாழ்க்கை நடத்து வதை இன்றும் காணக்கூடியதாகவுள்ளது. இதற்கு வெளி ஊரவர்கள் கூறுவது மட்டக்களப்பார் பாயுடன் ஒட்ட வைத்து விட்டார்கள் எனக் கூறுவர் உண்மையில் அது மாந்திரிகம் அல்ல அவர்கள் வழங்குகின்ற விருந்தோம்பலின் மகிமையினால் கவரப்படுவதே தவிர இங்கு மாந்திரிகம் அல்ல இதுவும் எம் மக்களிடத்திலிருந்து குறைந்து செல்கின்றது.

**அடுத்து திருமண நிகழ்வுகள்** அன்று இரவு வேளையில்தான் இடம் பெறும் அப்போது பந்திப்பாய் விரித்து உணவுப் பரிமாற்றம் இடம்பெறும் கூடுதலாக மாமிச உணவுகளைத் தவிர்த்து மரக்கறி உணவுகளைப் பரிமாறினர் இதற்கு கூடுதலாக வாழை இலையினையே பயன்படுத்தினார்கள் இது எமது பிரதேச மக்களிடத்தில் குறைந்து கொண்டு செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது.

**அடுத்து பயற்றுக்கறி** இக்கறியானது பயற்றினை வறுத்து குத்தி அதனை நீர் விட்டு அவித்து அதன் பின்பு சீனி விட்டு காச்சி அத்துடன் தேவையான சுவையூட்டிகளை விட்டு சமைத்து எடுக்கும் ஒரு சுவையான உணவு ஆகும். இவை திருமண நிகழ்வுகளிலும் பிதிர் நிகழ்வுகளிலும் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது இவ் உணவு முறையும் எமது மக்களிடத்தில் மறைந்து கொண்டு செல்கின்றது.

**அடுத்து தண்ணீர்சோறு** – இரவில் உண்ட பின் மீதிச் சோற்றினை மண்பானையில் உப்பு தண்ணீர் விட்டு முடி வைத்து அடுத்த நாள் காலையில் பால், பழம் (இதற்கு கிண்ணம் பழம்) சேர்த்து உண்பார்கள். இது எமது பிரதேச மக்களிடத்தல் காணப்பட்டு வந்தது இவையும் தற்போது எமது மக்களிடத்திலிருந்து அருகிச் சென்று விட்டது.

**அடுத்து சுரக்காய்ப் பொங்கல்** – பழமான சுரக்காயினை எடுத்து அதன் முகிழ் பக்கத்தினை வெட்டி அதன் உள்ளிருக்கும் குடலினை வெளியில் எடுத்து அதனுள் பால், அரிசி, பயறு, சீனி, சக்கரை போன்றவற்றினையிட்டு அதன் வாயினை நன்றாக காற்று போகாத வண்ணம் தக்கை அடைப்பானால் மூடி விடவேண்டும் அதன் பின்பு மடுவினை வெட்டி சுரக்காயினை அவ் மடுவினில் போட்டு மூடவேண்டும் அதன் மேல் விறகு போட்டு எரிக்க வேண்டும். இரண்டு மூன்று நாட்களின் பின் அதனை எடுத்து உண்ணலாம் இவை சுவை மிகுந்ததாக காணப்படும். இவையும் எம் மக்களிடத்தில் மறைந்து சென்றிருக்கின்றது.

**அடுத்து முடிச்சிச்சோறு** (கட்டுச்சோறு) – உணவினை பொதி செய்கின்ற முறைகளில் ஒன்றாகும். சுத்தமான துணியில் சோறு மற்றும் கறிகளை ஒன்றாக வைத்து கட்டி உண்கின்ற முறைமை இதுசுவை மிகுந்ததாக காணப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே போன்று **முடிச்சித் தயிர்** – இது வெள்ளைத்துணியினால் கயிறைக்கட்டி தொங்கவிட்டு நீண்ட நாட்களுக்கு பின்பு அதனை பாதுகாத்து வெளியில் எடுத்து கறி சமைத்து உண்கின்ற முறைமை எமது மக்களிடத்தில் இருந்து அருகிப்போய் விட்டது.

**அடுத்து மிளகு தண்ணிக்கறி** – இவ் உணவானது பிள்ளை பிறந்த தாய்மாருக்கு பத்தியத்துக்காக வழங்கப்படுகின்ற உணவாகும் இதனை பத்தியக்கறி எனவும் அழைப்பர். இதற்கு அசமதாகம், செத்தல்மிளகாய், சீரகம், மிளகு, மஞ்சள், கொட்டைத்தேங்காய் என்பவற்றை அம்மியில் வைத்து அரைத்து பத்திய மீன்களான திரளி, முரல், துள்ளுவண்டன், செத்தல், கிளக்கன் முதலிய துப்பரவு செய்யப்பட்ட மீன்களையும் போட்டு மிளகுதண்ணிக்கறி ஆக்க நாட்டரிசி சோற்றுடன் பிள்ளை பெற்ற தாய்மாருக்கு கொடுப்பது பாலூட்டும் தாய்க்கும் பிள்ளைக்கும் உடல் ஆரோக்கியத்துக்கு வேண்டி எமது பிரதேச மக்களின் முக்கிய உணவாகவும் நோய்வாய்ப்பட்டவருக்கும் இந்த மிளகுதண்ணிக்கறி சமைத்து கொடுப்பது பிரதேச வழக்கமாகும் இவையும் எம் மக்களிடத்தில் இருந்து மறைநது சென்று விட்டது.

**அடுத்து உப்பு அவியல்** – காரல் , சூடை , லாகன் , சாடை முதலிய சிறிய மீன்வகைகளை சுத்தம் செய்து சட்டியில் இட்டு உப்பும், நீரும் புளியும் இட்டு அவித்து உணவுக்காக இதனைப் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். இது பிரதேச மக்களின் மரபுவழி உணவாகும். இவையும் மக்களிடத்தே இருந்து மறைந்து செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது.

**அடுத்து பழ உணவுகள்** – பழ உணவுகளானது மக்களின் கால தேவைகளுக்கு ஏற்ற வகையில் பழங்களை உண்டு சுகதேகிகளாக வாழ்திருக்கின்றனர் உடம்பு சூட்டினை தணிக்கவல்ல பழங்களான நாரத்தம் பழம், எலுமிச்சம் பழம், தோடம்பழம் என்பன எமது முன்னோர்களால் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. தற்போது இதன் பயன்பாடு பிரதேச மக்களால் குறைந்தளவிலே பயன்படுத்தப்பட்டு வருகின்றது. கிண்ணம்பழம் – மலச்சிக்கலை போக்கவும், வேப்பம்பழம் குடற்புண்களை போக்கவும், நாவற்பழம் நீரழிவினை கட்டுப்படுத்தவும், முந்திரிப்பழம் சமியாக் குணத்தினை சரி செய்யவும் பாலைப்பழம், சூரைப்பழம், வீரப்பழம், ஈச்சம்பழம் என்பன குடல் அழற்சி பசியின்மையை போக்கவும், கொய்யாப்பழம் கண்சூட்டினை அகற்றுவதற்கும், புளியம்பழம் உமிழ்நீர் சுரப்பை அதிகரிக்கவும், எமது மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்திருக்கின்றது. ஆனால் தற்போது மக்களினுடைய நாகரிக வளர்ச்சியின் நிமித்தம் மக்களால் கலப்படம் செய்யப்பட்ட அப்பிள், ஓரஞ்ச் கிரேப்ஸ் போன்ற பழங்கள் பயன்படுத்தப்பட்டு ஆரோக்கிய நிலையும் இழக்கப்பட்டிருக்கின்ற நிலையும் தற்போது காணக்கூடியதாக இருக்கின்றது.

**அடுத்து நெல்லுப்பழம்** – இது நெல்லில் இருந்து விளையும் பழமாகும் நெல்லுப்பழம் வயலில் காணப்பட்டால் அவ்வருடத்தில் அமோக விளைச்சல் கிடைக்கும் என விவசாயிகள் நம்பிக்கை வைத்திருந்தனர். இவ் நெல்லுப்பழத்தை எடுத்து நீர்க்கடுப்பு ஏற்படுகின்றவர்களுக்கு இதை வறுத்து தண்ணீர் ஊற்றிக் கொடுத்தால் நீர்க்கடுப்பை அகற்றும் மகத்துவம் நெல்லுப்பழத்துக்கு உண்டு. இவ்வாறான உணவு முறைகளும் மக்களிடத்தில் இருந்து மறைந்து சென்றிருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

**ஒல்லிச் சோறு** – இது ஒரு நீர்வாழ் தாவரமாகும் இதன் அமைப்பு தாமரை இலை போன்று வட்டவடிவமான இலை நீல நிறமான பூக்கள் இதன் காய் நீருக்குள் இருக்கும் இதன் காய் பச்சை நிறத்தில் காணப்படும். இதனை உடைத்து விதைகளை வேறாக்க வேண்டும் அதனை சாம்பலில் புரட்டுதல் வேண்டும் பின்பு நீரில் கழுவுதல் வேண்டும் பின்பு வெயிலில் உலரவிடுதல் வேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு உரலில் விட்டு இடித்தல் வேண்டும் பின்னர் சுளகில் இட்டு நன்றாக புடைத்தல் வேண்டும். விதைகள் வெள்ள நிறமாக காணப்படும். அதன் பின்பு இதனை எடுத்து கஞ்சி காச்சலாம் சோறு சமைக்கலாம். அரைத்துப் பிட்டு செய்யலாம் ரொட்டி,கூழ், களி என்பன செய்து உண்ணலாம். இது உடலுக்குப் பலத்தினைக் கொடுக்கும் நீரழிவு நோய்க்கு மருந்தாகும். இவ்வகையான உணவு முறைகளும் எம்மத்தியிலிருந்து மறைந்து செல்கின்றது.

**அடுத்து இராசவள்ளிக் கிழங்குணவு** – இது பச்சை அரிசியுடன் பால் பழம் சேர்த்து பொங்கல் செய்து உண்ணப்படும் இது மிகவும் சுவையான உணவாகும் . இதுவும் எம் மக்களிடத்திலிருந்து மறைந்து செல்கின்றது.

அடுத்து எமது மக்களிடத்தில் காணப்பட்ட பாரம்பரிய விளையாட்டுக்கள் எமது மக்களிடத்திலிருந்து மறைந்து செல்கின்றது அதில் ஒரு சில விளையாட்டுக்களை கூறலாமென முனைகின்றேன்.

**அதில் ஒன்றான சாரக்கிடுகிடு** – இதில் பத்து தொடக்கம் பன்னிரெண்டு பேர் விளையாடுவார்கள். இதில் பல்வேறு வகையான நிகழ்வுகள் இடம் பெறுகின்றது .உடல் உள ஆரோக்கியத்தினை வெளிக்காட்டுகின்ற கிராமிய விளையாட்டாக இது காணப் படுகின்றது. பன்னிரெண்டு பேர் வரிசையில் அமர்ந்திருக்க ஒருவருக்கு மேல் ஒருவர் துள்ளிப் பாய்தல். தங்களை நிலைப்படுத்தல், எடுத்தல், வளைந்து பாய்தல், தோளின் மீது தாவுதல். போன்ற பல்வேறு நிகழ்வுகள் இவ் விளையாட்டில் இடம்பெறுகின்றது. இவ் விளையாட்டும் எம் மக்களிடத்திலிருந்து மறைந்து செல்கின்றது.

**அடுத்து கிள்ளிக் கிள்ளிப் பிராண்டி** – இவ் விளையாட்டானது சிறுவர் முதல் கட்டிளமைப் பருவத்தினரும் ஆண் பெண் இருபாலாரும் விளையாடுவார்கள் அதாவது வட்டமாக அமர்ந்திருந்து தங்களது கைகளை நிலத்தில் அமர்த்தி வைக்க வேண்டும் பின்பு அவற்றில் ஒருவர் தனது கையினை அவர்களுடன் நிலத்தில் ஊன்றியபடி கையால் பின்வரும் பாடலை படித்து விளையாட்டினை நகர்த்திச் செல்வர்.

**"கிள்ளிப் கிள்ளிப் பிராண்டி**
**கீயா மாயாப் பிராண்டி**
**கொப்பன் தலையில் என்ன பூ"**

என்று கைகளைக் கிள்ளிச் செல்வர். "என்ன பூ" முடிவடையும் இடத்தில் "முருங்கைப் பூ" என்று அவ்விடத்தில் உள்ளோரிடம் இருந்து பதில் வரும் பின்னர் அவ்விடத்திலிருந்து பாடல் தொடங்கும்.

**"முருங்கைப் பூவைத் திண்டவளே**
**பாவட்டங் காயை முடக்கு"**

என்ற எழுத்து யார் கையில் முடிவடைகிறதோ அவர் தனது உள்ளங்கையினை பிரட்டி விடுவார் இது மீண்டும் மீண்டும் இவ்வாறு நிகழும். இவ்வாறான விளையாட்டும் எம் மக்களிடத்திலிருந்து மறைந்து செல்கின்றது.

**அடுத்து சங்கிலிப் பிங்கிலி** – இது பெண் பிள்ளைகளால் விளையாடப்படும் ஒரு வகையான விளையாட்டு ஆகும். அனைவரும் சங்கிலி போன்று கைகளைக் கோருத்து வட்டமாக நிற்பர் அதன் நடுவே ஒருவர் தனது பெயரைச் வேங்கப் புலி என்று கூறிக் கொண்டு அந்த வட்டத்திற்குள் சுற்றித் திரிவர் வெளியிலிருந்து ஒருவர் பின்வரும் பாடலைப் பாடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"சங்கிலிப் பிங்கிலிப் கதவைத் திற**
**நான் மட்டும் வேங்கைப் புலி"**

உள்ளிருக்கும் புலி சங்கிலியை உடைத்துக் கொண்டு வெளியில் ஓடித் திரிந்து பின்னர் எதிரியின் கையில் அகப்படாமல் மீண்டும் கூட்டினுள் புகுதல் எதிரி புலியாகவும் புலி வந்து எதிரியாகவும் மாறி மாறி இந் நிகழ்வு இடம் பெறும்.

**அடுத்து கீச்சு மாச்சுத் தம்பலம், காக்கை முட்டை கம்பளிமுட்டை, கொத்திருக்கு கொத்து, பில்லிப் பந்து, தட்டக் கொடு அல்லது நொண்டி, சுட்டபலாக்கொட்டை, பாட்டன் சொத்து பறையன் சொத்து, கண்ணாம் பொத்தி, வட்டக் காவடி, வார் விளையாட்டு, பிள்ளையார் கட்டை, கிட்டிப் புள், சுரக்காய் இழுத்தல்** போன்ற விளையாட்டுக்களைக் கொள்ளலாம். இவ் விளையாட்டுக்கள் யாவும் எம் மக்களிடத்திலிருந்து மறைந்து செல்வதைக் காணக் கூடியதாகவுள்ளது .

எனவே எல்லாவற்றினையும் தொகுத்து நோக்கும் போது எமது முன்னோர்கள் பாரம்பரியமாக பயன்படுத்தி தங்கள் வாழ்வியலோடு பயன்படுத்தி வந்த பண்பாட்டு விடயங்கள் தற்போது தொழில் நுட்ப விருத்தி காரணமாக மக்கள் பாவனையிலிருந்து விடுபட்டு அதன் மூலம் மக்கள் சொல்லொண்ணா துயரத்தினை அனுபவித்து வருவதை நாம் கண்கூடாகக் காணக் கூடியதாகவுள்ளது. அது உணவாயினும் சரி அன்றாடப் பொருட்பாவனையாயினும் சரி ஆடைஅணிகலன் ஆயினும் சரி விசேட கைங்கரியங்களாயினும் சரி சகல விதமான பண்பாட்டுப் பாரம் பரியங்களையும் எமது மக்கள் தொலைத்தெறிந்தவர்களாய் இனிவருகின்ற இளம் தலைமுறையினருக்கு இதனை கைளிக்க முடியாத நிலையில் தற்போது வாழ்ந்து கொண்டு வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

**உசாத்துணைநூல்கள்**


1) மட்டக்களப்பு சிறு தெய்வ வழிபாடு ஒரு அறிமுகம் – க.மகேஸ்வரலிங்கம்
2) தமிழர் வரலாறும் பண்பாடும் தெரிந்ததும் தெரியாததும் – பேராசிரியர் சி.இமௌனகுரு
3) கிழக்கிலங்கை வரலாற்று இலக்கியங்கள் – கவிக்கோ வெல்லவூர்க்கோபால்
4) கிழக்கின் பண்பாட்டு ஆய்வுகள் – கிழக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள வெளியீடு
5) கிழக்கிலங்கைச் சடங்குகள் சமயம் – கலை – அழகியல் – வடிவேல் இன்பமோகன்
6) நானிலம் கலாசார வெளியீடு கிழக்கிலங்கை மாந்திரிக மருத்துவ இலக்கியம் என்ற கட்டுரையிலிருந்து (வடிவேல் இன்பமோகன்)
7) நானிலம் கலாசார வெளியீடு மட்டக்களப்பு வாழ்மக்களின் பயன்பாட்டிலிருந்த தானியப் பொருட்களின் முக்கியத்துவம் என்ற கட்டுரையிலிருந்து (மூ.சிவானந்தராசா)


**உசாவியவர்கள்**

| | | |
|---|---|---|
| ஆர் கிருஸ்ணபிள்ளை J.P<br>கிராமக்கோட் வீதி<br>ஆரையம்பதி | அரசரெத்தினம் சிவநேசராசா<br>விளாவட்டவான். | கந்தையாப்போடி –அல்லிமுத்து<br>விளாவட்டவான் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுப்புற வழக்காறுகளும் பல்லுயிர் பேணுதலும்



அற்புதநாதன் பிறேமினி BA (Hons).
பிரதேச செயலகம்
வவுணதீவு

**அறிமுகம்**

உலகமயமாக்கலின் சந்தை விரிவாக்கத்தினால் நவீன உற்பத்தி முறை, அறிவியல்முறை, அரசியல்முறைகளினால் நாம் வாழ்வதற்கான மூலாதாரங்கள் சீரழிக்கப்பட்டு பற்பல அடிப்படை பிரச்சினைகளையும் இன்று தினம்தோறும் எதிர்கொள்கிறோம். எமது முன்னோர்கள் எமக்காக விட்டுச் சென்ற பொறுப்புக்கள், கடமைகளை நிறைவேற்ற முடியாது நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஆரோக்கியமான வாழ்வை இழந்து கொண்டு ஆபத்தான வாழ்வை நோக்கிப் பயணிக்கும் நாம் சற்றே எமது வழித்தோன்றல்களின் மரபுகளினையும் சிந்தித்துப் பார்த்தல் மிக அவசியமாதொரு விடயமாகும்.

மிகவேகமாக பயணிக்கும் இவ்வுலக வாழ்வில் நாம் என்ன செய்துள்ளோம் என்றால் என்ன விடை கிடைக்கும் என்பது எம் ஒவ்வொருவருக்கும் மட்டும்தான் புரியும். எமது பெற்றோர்கள் புகட்டிய தத்துவம் நிறைந்த கதைகள், பாடல்கள், விடுகதைகள், சடங்குமுறைகள், மருத்துவக் குறிப்புக்கள் எல்லாம் மறந்துவிட்டு சமூகவலைத்தளங்களில் எம் நேரங்களை செலவழித்து வருகின்றோம். அவ்வாறிருக்க எவ்வாறு நாம் உயிர்கள் மீதோ, சுற்றுப்புறச் சூழல் மீதோ அக்கறை காட்டமுடியும். நாட்டார் மரபுகள் நாட்டுப்புற மக்களால் பாதுகாக்கப்பட்டு வளர்த்தெடுக்கப்படுவது. மனிதன் என்று தோன்றினானோ அன்றே நாட்டுப் புறமரபுகளும் தோற்றம் பெற்று விட்டன என்றுதான் கூறவேண்டும். நீண்டகால வரலாற்றைக் கொண்ட இந்நாட்டுப்புற மரபுகள் பரந்து விரிந்தவை, நீண்ட பாரம்பரியம் உள்ளவை. எமது சந்ததி எமக்காக விட்டுச் சென்ற மரபுகளில் எத்தனை ஆழமான, அழகான தத்துவ சிந்தனைகள் பொதிந்துள்ளது என்பதை ஆராய்வதாகவே இவ்வாய்வு அமைகிறது.

**நாட்டுப்புறவியல் மரபுகள்**

நாட்டுப்புறவியல் மரபுகளைப் பற்றி அறிவதற்கு முன் மரபு என்றால் என்ன என்பதை விளங்கிக் கொள்வது சிறந்தது. இது நாட்டுப்புறவியல் மரபுகளைப் புரிந்து கொள்வதற்கு துணை புரியும்.

"எப்பொருள் எச்சொல்லின் எவ்வாறு உயர்ந்தோர்
செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே" (நூற்பா எண்:387)

என்கிறது நன்னூல் "அறிவுடையோர் எந்தப் பொருளை எந்தச் சொல்லால் எந்த முறைப்படி குறிப்பிட்டார்களோ அதே முறைப்படி வழங்குதல் மரபாகும்" என்பதே இதன் பொருள் "பண்பாட்டின் எல்லா நிலைகளிலும் மக்களால் பின்பற்றப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட நியதியே மரபு" (Tradition) என்கிறது தமிழ் அகராதி. ஒரு காலத்தில் செய்யப்படுகின்ற செயல்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையும், நன்மையும் இருப்பின் அவை பின்வரும் தலைமுறையினால் அப்படியே ஏற்றுக் கொள்ளப்பட்டு வழிவழியாகக் கடைப்பிடிக்கப்படுகின்றன. இவையே பின்னாளில் மரபாக நிலைத்து விடுகின்றன. இதில் நாட்டுப்புற மரபு என்பது சடங்குகள், நம்பிக்கைகள், வழிபாடுகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றால் பாதுகாக்கப்படும் ஒரு குறிப்பிட்ட மக்களின் பண்பாடாகும். நாட்டுப்புறவியல் மரபுகள் மக்களால் வளர்த்தெடுக்கப்பட்டு வாழும் மரபுகளாகும். இவை அறிவு நிலைக்கு அப்பாற்பட்டு உணர்வு நிலையில் வடிவமைக்கப் பெற்றவை. இம்மரபுகள் எழுதப்படாதா சட்டங்களாக நின்று நிலைத்து நாட்டுப்புற மக்களை வழிநடத்தி வருகின்றன.

## நாட்டுப்புற வழக்காறுகளும் பல்லுயிர் பேணுதலும்

நாட்டுப்புற மக்கள் பிறந்தது முதல் இறக்கும் வரையுள்ள வாழ்க்கை காலத்தில் சமயம், சுகாதார மரபு நிறைந்த கலப்படமற்ற கலாசார வாழ்க்கையினைப் படைத்திருக்கின்றனர். அம்மக்களின் வாழ்க்கையில் மையமாகத் திகழ்வது அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கை. சாத்திரம் கேட்பது, சகுனம் பார்ப்பது என்பனவெல்லாம் நம்பிக்கைமீது அவர்கள் வளர்த்துள்ள பற்றினாலேயாகும். நல்லது கெட்டது எது நடப்பினும் சாத்திரம் கேட்பது அவர்களுக்கு மனதிலே ஒரு திருப்தியை உண்டாக்குகிறது. வெற்றிலையை அழகாக வட்டாவிலே அடுக்கி, அவற்றின் நடுவில் முழுப்பாக்குகளை வைத்து அதன் மீது சாத்திரியாரின் தட்சணையையும் இட்டு ஒரு வெள்ளைச் சீலைத்துண்டினால் மூடிய வெற்றிலை வட்டா சகிதமாகவே செல்வார்கள்.

ஒரு காரியத்தின் நிமிர்த்தம் வெளியே செல்லும் போது சகுனம் பார்ப்பது ஒரு வழக்கம். காரியம் கைகூடுவதற்குச் செல்லும் பாதையில் சிலவற்றை விலக்குவார்கள். மொட்டைத்தலை, முக்காடிட்டவர், கைம்பெண் ஆகியவற்றைக் கண்டு சென்றால் போகின்ற காரியம் கெட்டு, அலைச்சலும் ஏற்படும். ஆனால் பசுமாடு, அரிசிப்பொதி, வெற்றிலை ஆகியவற்றைக் கண்டு செல்வதனால் காரியம் வெற்றியுடன் கைகூடும் என்பதையும் நம்புகின்றனர்.

சாத்திரத்திலும், சகுனத்திலும் உள்ள நம்பிக்கை பல கருத்துகளினின்றும் புலப்படுத்துகின்றன. ஏதாவதொன்றைச் சொல்லும்போது பல்லி கத்தினால் அது உண்மை என்று நம்புகிறார்கள். உண்மையென்பதை ஊர்ஜிதப்படுத்தவே பல்லியும் சொல்கிறதென்பது அவர்கள் கருத்து. இதனூடாக பசு, பல்லி போன்ற உயிரினங்களையும், மனிதன் உயிர்வாழ எக்காலத்திலும் அவசியமான உணவான நெல்லரிசிசோற்றின் முக்கியத்துவத்தினையும் வலியுறுத்துகின்றது.

குழந்தை பிறந்ததும் மாமனார் குழந்தைக்கு கண்ணூறு கழித்தல், குழந்தையைப் பெற்றவர்கள் இருக்கும் வீட்டிற்கு இரும்புக் கம்பி காவலுக்கு இடல், தீச்சட்டியில் பலவகை மூலிகைகளை புகைத்தல், சிசு உதய நேரம் கணித்து சாதகம் (குறிப்பு) எழுதுதல், "மருங்கை" எனும் சடங்கு செய்து மருத்துவம் பார்த்தோருக்கு உபகாரமளித்தல் மேலும் பெண் கர்ப்பவதியானால் அவளது கணவன் வீடு கட்டுதல், மரங்களை வெட்டுதல், பிரேதத்தின் பின் செல்லல் என்பவற்றை தவிர்த்துக் கொள்ளல் போன்ற பழக்க வழக்கங்கள் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இம்முறைகளின் ஊடாக மரங்களை நட்டு இயற்கை அம்சங்களைப் பாதுகாக்க வேண்டுமென வலியுறுத்துகின்றது. மேலும் இயற்கை மருந்துக்களை பாவித்து சுகப்பிரசவத்தின் மூலம் குழந்தைகளை பெற்றெடுத்தனர் ஆனால் இன்று இயற்கைக்கு மாறாக அறுவைச் சிகிச்சைகள் செய்வதன் மூலம் மருத்துவக் கழிவுகள் சூழலில் விடுவிக்கப்படுவதனால் பல்லுயிர் சமனிலை பாதிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண வீடுகளில் வீட்டுக் கூரையில் நிறைகுடம் வைத்து சீலை கட்டுதலும் துக்கம் விசாரிக்க வருவோரை கட்டியழுவதும், முப்பத்தொரு நாட்களுக்கு உறவினருக்கு உணவு வழங்குவதும், மூன்றாம், எட்டாம், முப்பத்தொராம் நாட்களில் இடம்பெறும் சடங்குகளின்போது பல்லுயிர்களுக்கும் உணவளிப்பது இன்றும் அழியா வழக்கமாக உள்ளது.

நாட்டுப்புற மக்களின் உணவு முறைகள் ஆரோக்கியமானது. குழந்தை பெற்ற தாய்மார், நோயாளிகள், பூப்படைந்த குழந்தைகளுக்கு விசேடமான உணவுமுறைகளை பயன்படுத்தினர். தாய்மாருக்கு மிளகு தண்ணிக்கறி மிக விசேடமாகத் தயாரிக்கப்பட்டது. பட்டோலைச் சரக்கு சாமான்களை இடித்துத் தேனும் சேர்த்து கசாயம் என்ற ஒன்றைச் செய்து கொடுப்பார்கள். இவ்வாறு ஒவ்வொரு வகையினருக்கும் ஏற்றால்போல் விதவிதமான உணவுவகைகளை ஆரோக்கியமாகவும், அளவுடனும் செய்வார்கள். இத்தகைய முறைகள் எமது சமூகத்தில் இன்றும் நிலைத்திருக்கின்றது.

நாட்டார் விளையாட்டுக்களை சுதேச விளையாட்டுக்கள் என்றும் அழைப்பர். கிளித்தட்டு மறித்தல், கெந்தியடித்தல், கிட்டிப்புள்ளு அடித்தல், சடுகுடுவிளையாட்டு, உச்சரிப்பு விளையாட்டு, போர்த்தேங்காய் அடித்தல், ஊஞ்சல் விளையாட்டு, பிச்சி, மாச்சி, தம்பலம், ஆடு புலி ஆட்டம், சங்கு விளையாட்டு, ஆலாப்பறத்தல்விளையாட்டு, கிள்ளுப்பிராண்டி, பாட்டன் குத்து, கொம்பு முறி, சுரக்காய் எனப் பல விளையாட்டுக்களைக் கூறலாம். இவ்விளையாட்டுக்களை விளையாடும் போது பாடல்களையும் பாடிக்கொள்வார்கள்.

"வடசேரியான் கொம்பு எங்கேயெங்கே
மணமுள்ள தாழையின் மேலே மேலே
தென்சேரியான் கொம்பு எங்கேயெங்கே
செம்பர பற்றைக்குக் கீழே கீழே.
வடசேரியான் கொம்பு எங்கேயெங்கே
வண்ணாண்ட சாடிக்குள்ளே உள்ளே
தென்சேரியான் கொம்பு எங்கேயெங்கே
சித்திரத்தேருக்கு மேலே மேலே"

இதனால் மக்கள் ஆரோக்கியமாகவும் இயற்கையோடு இணைந்தும் வாழ்ந்தார்கள். ஆனால் இன்று கிரிக்கட், கால்பந்து, கூடைப்பந்து போன்ற நவீன விளையாட்டுக்களினால் நிலப்பரப்பு தேவையின் நிமிர்த்தம் சூழலிலுள்ள மரங்களும், உயிர்வாழ் இனங்களும் அழிக்கப்படுவதோடு, மக்கள் இணையத்தள விளையாட்டுக்களை அதிகம் தேர்ந்தெடுப்பதனாலும் இலத்திரனியல் கழிவுகளின் தாக்கம் சூழல் பல்வகைமையை கேள்விக்குறியாக்குகின்றது.

கிராமிய மக்களின் வாழ்க்கை எளிமையானதாக காணப்படுவதோடு, இம்மக்கள் தெய்வங்கள் பற்றிய நம்பிக்கை உடையவர்களாகவும் தங்களது தொழிலுக்காகவும், வாழ்வுக்காகவும் அத்தகைய தெய்வங்களை வழிபடுபவர்களாகவும் விளங்கினர். இத்தெய்வங்கள் கிராமிய தெய்வங்கள், நாட்டார் தெய்வங்கள், நாட்டுப்புற தெய்வங்கள் என்ற பெயர்களாலும் வழங்கப்படுகின்றன. நாட்டார் தெய்வங்களுக்குரிய ஆலயங்கள் கிராமத்தின் எல்லைப் புறங்கள், கடற்கரையோரங்கள், கிராமத்தின் மத்திய குளக்கரை, காடு, நெல்வயல்கள், சந்தி முதலான இடங்களில் அமைந்துள்ளன. அத்தெய்வங்களுக்கு கல்லினால் கட்டப்படும் ஆலயங்கள் மிகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவு தடிகள் கொண்டு சிறிய கொட்டகை அமைத்து அவற்றை ஓலையால் வேய்ந்து சூலம், கல் முதலானவற்றை வைத்து வழிபடும் மரபு காணப்படுகிறது. நாட்டார் தெய்வ வழிபாட்டில் இடம்பெறும் தெய்வங்களாக கண்ணகி, திரௌபதை, காளி, பிடாரி, கொத்தி, நாச்சியார், வைரவர், காத்தவராயன், ஐயனார் போன்றவர்களும் அடங்குகின்றனர். கொத்தியின் உறைவிடம் ஆலமரமாகும். அதனால் அம்மரம் "கொத்தியால்" எனவும் அழைக்கப்படுகின்றது. "கொத்திக்கும் படைத்தல்" என்னும் சடங்கை ஆலமரம் உள்ள இடங்களில் செய்வார்கள். இது அந்திப் பொழுதில் இடம்பெறும். சோறு, பலவகைக் கறிகள், வெற்றிலை முதலானவை அவற்றில் அடங்கும் நாட்டார் தெய்வங்களுக்குரிய வழிபாட்டு முறைகள் பிரதேசத்துக்குப் பிரதேசம் வேறுபட்டு அமைகின்றன. அத்துடன் இவ்வழிபாடு பற்றி மக்களிடையே மிகுந்த நம்பிக்கை காணப்படுவதால் இன்றுவரை நிலைத்து நிற்கின்றது. மரங்களை தெய்வங்களாக வழிபடும்போது அதில் இறைவன் உறைகின்றான் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் மரங்கள் வெட்டப்படுவது தவிர்க்கப்பட்டு இயற்கைவளம் பேணப்பட்டது.

நாட்டுப்புற மக்களின் தொழில்முறைகளாக இன்றும் விவசாயம் நிலைத்து நிற்கின்றது. வயல் விதைக்கும் பருவம் வந்தவுடன் நல்ல நாள், நேரம் பார்த்து வயலை உழுவது மட்டுமின்றி விதைகளையும் விதைப்பார்கள். அவ்வாறு வயலிலே வேலை செய்யும் போது அலுப்புத்தட்டாமல் இருக்க பாடல்களையும் பாடிக் கொள்வார்கள். பயிர்களைப் பூச்சி புழுக்கள் அழிவு செய்யாமலும், நெல் நிறைந்த பொலிகளங்களை, மழை பெய்து சேதம் செய்யாமலும், நெற் குவைகளைப் "பூதங்கள்" அள்ளிக் குறைவுபடுத்தாமலும் திருநீறு ஓதி நாற்புறமும் வீசுகிறார்கள். மந்திரம் ஓதிய திருநீற்றை எறிதலால் நெற்பயிர்கள் நோய் நீங்கப் பெறுதலோடு "வாரியும்" பெருகுகின்றன. வயல் அறுவடை செய்யும் நாளன்று பொங்கல் பொங்கி வயலில் உள்ள தெய்வத்திற்கு படைத்து அதன்பின் அறுவடை நெல்லினை வீட்டுக்கு கொண்டு சென்று பூசை அறையில் விளக்கேற்றி ஒரு நெல் மூடையினை அடுத்த வருடம் வரும் வரை வைத்திருப்பார்கள். இத்தகைய நிலையினை இன்றும் கிராமங்களில் காணக்கூடியதாக உள்ளது. இதனூடாக களஞ்சியப்படுத்தல் மற்றும் பயிர் நிலங்களை பாதுகாத்து இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்ந்தனர். ஆனால் இன்று இந்நிலங்களை பல்தேசியக் கம்பனிகள் கொள்வனவு செய்து சூழலின் பல்லுயிர் சமன்பாட்டை சீர்குலைக்கும் பாரிய உற்பத்தி தொழில்சாலைகளை உருவாக்கி மண், காற்று, நீர் என அனைத்து அடிப்படை வளங்களையும் மாசுபடுத்துவதைக் காணமுடிகிறது.

நோயுற்றபோது வைத்தியரை நாடும் முன் பூசாரியையும் மாந்திரிகனையும் நாடி வருவது இன்றும் கிராமப்புறங்களில் இருந்து வருகின்றது. திருநீறு ஓதுதல், நூல் கட்டுதல், தண்ணீர் ஓதுதல், பேய் பார்வை நீக்கல், செய்வினைக்கு காய் வெட்டுதல் போன்றவற்றையும் நேர்த்தி வைத்து பரிகாரங்கள் செய்து வரும் நிலையும் இன்றும் கண்கூடு. உதாரணமாக விரதமிருந்து பாம்பு வாழும் புற்றுக்களை தெய்வ சந்நிதியாக நினைத்து அவற்றிற்கு பொங்கல் பொங்கி, பாலும் பழமும் கரைத்து, முட்டையும் கொடுப்பார்கள். அவற்றை பாம்பு உண்டு தங்கள் நேர்த்திக்கடனை ஏற்றுக்கொண்டு விட்டதாக எண்ணிக்கொள்ளும் மரபு இன்றும் எம்மத்தியில் இருக்கத்தான் செய்கிறது. இவற்றினூடாக ஏழுவகை நாகபாம்புகளை கொல்லுதல் தெய்வ குற்றம் எனவும் இவ்வினப் பாம்பின் சாபம் ஏழேழு தலைமுறையினரையும் பழிவாங்கும் என்ற நம்பிக்கையும் காணப்படுகின்றது. எனவே ஊர்வன அழிக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டது. இத்தகைய செயல்களை விஞ்ஞானம் முன்னேறிய காலத்திலும் கூட எமது கிராமங்களில் காணக்கூடியதாகவுள்ளது. இவ்வாறு எமக்கேயுரிய பழக்க வழக்கங்கள் காலத்தால் மறைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடாது கட்டிக்காத்து அவற்றை மறுமலர்ச்சியுறச் செய்வதுடன் கிராமங்களில் அவை மறைந்துவிடாமல் பாதுகாப்பதும், நகர்புறங்களில் இளந்தலைமுறையினர் அறிந்திராத எமது பழக்க வழக்கங்களை அவர்களுக்கு புகட்டுவதும் கற்றறிந்தோர் கடமையாகும்.

### முடிவுரை

நாட்டாரியல் நம்பிக்கைகளின் நோக்கில் மனிதன் பிறந்தது முதல் இறக்கும்வரை எத்தனையோ சடங்குமுறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றது. அவ்வாறு பின்பற்றப்படும் சடங்கு முறைகள் மரம், செடி, கொடிகள் மற்றும் ஏனைய ஜீவராசிகளை வளப்படுத்துவதாகவே அமைகிறது. இதன் வாயிலாக பல்லுயிர்கள் நாட்டாரியல் மரபில் பராமரிக்கப்பட்டு சூழலின் இயற்கைத் தன்மையினை மேம்படுத்த வழிவகுக்கிறது.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தானம் தானம் தானினம் தந்தானம் தானம்
## கிராமியப் பாடல்



கலாபூசணம் க.மயில்வாகனம்
(அண்ணாவி)
கரவெட்டி, நாவற்காடு.

**பல்லவி**

**பொங்கி மகிழ்ந்திடுவோம். இந்துக்கள் நாம்
புன்னகை கொண்டாடுவோம்.**

**சரணம்**

**அதிகாலை எழுந்து அங்க சுத்தி செய்து.
புத்தாடை அணிந்து பூசித் திருநீறு.
சந்தனம் குங்குமம் சௌவாதுப் பொட்டும்**

**(தந்தானம்)**

**கோலங்கள் தான் போட்டு நிறை குடம்
அன்பாய் இருக்க வைத்து.
ஆனை முகத்துக் கணபதி தன்னுடன்.
ஆதி சிவன் உமை ஆறுமுகனும்
சூரிய பகவானை தோத்திரம் பண்ணியே.**

**(தந்தானம்)**

**பொங்கிப் படைத்தோமே உறவுகள்
சேர்ந்து கொண்டாடினோமே.
சீன வெடிச் சத்தம் சீராய் முளங்க.
சிறுவர் சிறுமியர் சிரித்துக் குலுங்க.
சிறந்த தைப்பொங்கலைக் கொண்டாடி மகிழ்ந்து.**

**(தந்தானம்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பின் பூர்வீகக் குடிகளும் இந்து சமயமும்



நா.வாமன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
இந்து நாகரிகத்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.
இலங்கை.

இலங்கையின் கிழக்குக் கரையோரப் பகுதியில் மட்டக்களப்புப் பிரதேசம் அமைந்துள்ளது. இலங்கையிலே பூர்வீக காலம் முதலாகத் தமிழர் செறிந்து வாழும் பிரதானமான நிலப்பகுதிகளில் மட்டக்களப்பும் ஒன்றாகும். வடக்கே வெருகலாற்றினையும், தெற்கே மாணிக்க கங்கையினையும், கிழக்கே வங்காள விரிகுடாக் கடலினையும், மேற்கே ஊவா வெல்லஸ்ஸ மலைத்தொடர்களையும் இப்பிரதேசம் எல்லைகளாகக் கொண்டிருந்தது.[1] இப்பிரதேசம் 1961ஆம் ஆண்டு தொடக்கம் மட்டக்களப்பு மாவட்டம், அம்பாறை மாவட்டம் என்னும் இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மாவட்டமும் ஒவ்வொரு அரசாங்க அதிபரினால் நிருவகிக்கப்பட்டு வருகிறது.[2] சமய ரீதியாக நோக்குகின்றபோது மட்டக்களப்பு மாவட்டத்தின் மொத்த சனத்தொகையிற் பெரும்பாலானோர் இந்துக்களாவர்.

மட்டக்களப்பின் பூர்வீகக் குடிகள் தொடர்பாகவும் அவர்தம் சமயநெறிகள் தொடர்பாகவும் இதுவரை முழுமையான ஆய்வுகள் எதுவுமே நடைபெறவில்லை. கிடைக்கும் ஆதாரங்கள்கூட மிகவும் குறைவாகவே உள்ளன. ஒரு நாட்டின் வரலாற்றினை அறிவதற்கு அந்நாட்டின் அக்கால இலக்கியங்கள் துணைபுரிகின்றன. ஆனால் துரதிஷ்டவசமாக மட்டக்களப்பின் பழைய வரலாற்றினைக் கூறுகின்ற முழுமையான இலக்கியச் சான்றுகள் கிடைக்கவில்லை. அண்மைக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கல்வெட்டு ஆய்வுகளின் மூலம் சில தகவல்களைப் பெற முடிகின்றது. இவற்றோடு, வாய்மொழி மரபுகளும் வரலாற்று மூலங்களாக மாறுகின்ற தன்மையினை இங்கு அவதானிக்க முடியும். வரலாற்று ஆராய்ச்சியில் மரபுவழிக் கதைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை. ஆனால் அண்மைக் காலத்திலே இவற்றின் நிலைமை மாறத் தொடங்கியுள்ளன. மரபுவழிக் கதைகள் சார்ந்த ஆதாரங்களை வரலாற்றாராய்ச்சிக்கு மூலமாகக் கொள்ளுகின்ற புதிய முறையியல் (Methodology) ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஈ.பி.டைலர் (E.B.Tylor) என்ற மானிடவியலாளர் தனது முக்கியமான படைப்புக்களாகிய 'Reseachers in to the Early History of Mankind', Primitive Culture' என்ற நூல்களிலே நாட்டார் வழக்கியற் சான்றுகளை அதிகமாகப் பயன்படுத்தியிருக்கின்றார்.[3] அந்நூலில், விவசாயக் குடிகள், சமகாலத்தில் வாழும் பழங்குடியினர் ஆகியோர் மத்தியிலே நிலவும் நம்பிக்கைகளையும் பழக்கவழக்கங்களையும் கொண்டு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்துச் சமுதாயத்தினரின் கருத்துக்களை அறிந்து கொள்ளமுடியும் எனக் கூறியுள்ளார்.

இவற்றின் அடிப்படையில் நோக்குகின்றபொழுது மட்டக்களப்புப் பிரதேசத்தின் பூர்வீகக் குடிகளாக இயக்கர், நாகர், வேடர் என்போரை அடையாளப்படுத்த முடியும். இவர்கள் இந்து சமய வழிபாட்டு முறைகளைப் பின்பற்றியமையின் காரணமாகப் பண்டைக் காலம் முதலாகவே இந்து சமயம் மட்டக்களப்பில் நிலைபெற்று வந்துள்ளமை புலனாகின்றது. மிக நீண்ட காலமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கர், நாகரின் குழு நிலை ஆட்சி முறைமை ஈழத்தில் பரவியிருந்த போது மட்டக்களப்புப் பிரதேசத்தில் நாகர்முனை (திருக்கோவில்), நாகன்சாலை (மண்டூர்), சூரியத்துறை (மட்டக்களப்புப் பெருந்துறை), நாகர்ப்பொக்கணை (மன்னம்பிட்டி) போன்றவற்றில் நாகரும், கதிர்காமம், மகியங்கணை, விந்தனை போன்றவற்றில் இயக்கரும் குழுநிலை ஆட்சி அதிகாரத்தில் இருந்தனர் என அறியமுடிகின்றது.[4]

## இயக்கர்

இயக்கர் பண்டைய மட்டக்களப்புச் சமூகத்தினர் என்பதற்குப் போதிய சான்றுகள் உண்டு. சில ஆய்வாளர்கள் இயக்கர் என்ற இனமொன்று இங்கு வாழ்ந்ததாகக் கருதமுடியவில்லை எனத் தங்கள் கருத்துக்களை முன்வைக்கின்றனர். எனினும் இலங்கை தொடர்பான வரலாற்று ஆவணங்கள் அனைத்துமே இயக்கர் பற்றியும் அவர்களது வாழ்விடங்கள் பற்றியும் விரிவான தகவல்களைக் குறிப்பிட்டுள்ளன. இயக்கர்கள் இலங்கையில் யக்ஷன், யக்ஷி ஆகிய தெய்வங்களை வழிபாட்டிருந்தமை பற்றி சி.க. சிற்றம்பலம் தனது 'ஈழத்து இந்து சமய வரலாறு' எனும் நூலில் குறித்துள்ளார். யக்ஷன், யக்ஷி ஆகியோர் உறையும் இடங்களாக காடுகள், மலைகள், நீர்நிலைகள், மரங்கள் ஆகியன கருதப்பட்டன. மக்களுக்கு நன்மை, தீமை ஆகியவற்றை அளிக்கும் தகைமை பெற்று இவை காணப்பட்டன எனக் கருதப்பட்டதால் மக்கள் இவற்றுக்குப் பலி அளித்தும் வழிபாடியற்றினார்கள்.[5] மட்டக்களப்பிலும் வெல்லாவெளிப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள அலியார்வட்டை, விளாந்தோட்டம் ஆகிய இடங்களில் யக்ஷன், யக்ஷி முதலியனவற்றைக் குறிக்கும் சுடுமண் உருவங்கள் கண்டுபிடிக்கப்பட்டமை பற்றி மகேஸ்வரலிங்கம் குறிப்பிடுகின்றார்.[6] மேலும், மட்டக்களப்பிற்குரிய இராசகல் மலை, குடுமி மலை, கதிரகல் மலை, வியாத மலை என்பனவையெல்லாம் யக்ஷ வழிபாட்டிலிருந்து பௌத்த சமயத்திற்குரிய இடங்களாக மாற்றப்பட்டன எனவும் அவர் சுட்டிக்காட்டுகின்றார்.[7]

இயக்கர்கள் சிவ வணக்கத்தினராகவும் இருந்துள்ளனர். இயக்கர்குலத் தலைவனாக இராவணனை இதிகாசங்களும் ஏனைய இலக்கியங்களும் இயம்புகின்றன. ஈழத்தில் இராவணன் தொடர்பாக வரலாற்றுப் பின்னணி ஒன்று மிகவும் ஆழமாக வேர்விட்டிருப்பதை அவதானிக்கலாம். திருக்கோயில் தொடக்கம் திருகோணமலை வரை தென்படுகின்ற இராவணன் பற்றிய அடையாளங்கள் மிகுந்த நம்பிக்கையூட்டுபவை. இலங்கையில் வைதிக சைவ நெறி வழிபாட்டினை இராவணன் பேணி, தட்சணகைலையில் முக்கோணமுள்ள ஒரு லிங்கத்தைப் பூசித்திருந்தான் என்றும். அவன் செய்த நிகும்பலை யாகத்தில் பூதங்கள் தோன்றின என்றும் மட்டக்களப்பு மான்மியம் குறிப்பிடும்.[8] இம்மக்களது வாழ்வியலிலும் வழிபாட்டியலிலும் இராவணன் மிகுந்த சக்தி பெற்றவனாகவே உள்ளான்.

இராவணன் சிறந்த சிவபக்தன். புகழ்பெற்ற சிவத்தலங்களான திருக்கோணேஸ்வரம், மாமாங்கேஸ்வரம், திருக்கோயில் என்பவற்றுடன் இராவணனைத் தொடர்புபடுத்தும் கர்ணபரம்பரைக் கதைகள் அதன் பின்னணியில் உள்ள வரலாற்று உண்மையைச் சூசகமாக உணர்த்துகின்றன.[9] இவன் சிவ வழிபாட்டில் ஈடுபட்டிருந்தமை குறித்துத் தேவார திருவாசகங்களும் விதந்துரைக்கின்றன. இராவணனது ஆட்சியில் அவனது கோட்டை கொத்தளங்கள் அமைந்த பகுதி தென்னிலங்காபுரியான திருக்கோயிலின் கிழக்குக் கடலுள் அமிழ்ந்துவிட்டதாக இப்பகுதியில் பெறப்படுகின்ற வாய்மொழி வரலாறுகள் தெரிவிக்கின்றன. S.O. கனகரெத்தினமும் தனது நூலில் இது குறித்துக் குறிப்பிட்டுள்ளார்.[10] திருக்கோயிலுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் அமைந்து கடலலைகள் தொட்டு நிற்கும் உகந்தை மலையில் வருடந்தோறும் இராவணனின் நினைவாக தீபம் ஏற்றும் நீண்டகால நடைமுறையானது இதற்கு வலுச் சேர்ப்பதாகவே உள்ளது.[11]

பிதுர் வணக்கம் இயக்கர் குலத்தினர் கைக்கொள்ளும் ஒரு வழிபாடாக இருந்தது.[12] அவ்வழக்கம், இன்று மட்டக்களப்பில் உத்தியாக்கள் என்ற வழிபாடாகப் பழக்கத்தில் உள்ளது. தம்முன்னோர் மேலுலகத்தில் உள்ளனர் என்று நம்பும் அவர்களைப் புரட்டாதி மாதத்தில் நினைவுகூர்ந்து அவர்களுக்கு விருப்பமான உணவு வகைகளைப் படைத்து அவர்களின் ஆவியைப் பந்தமாக்கிக் கொள்வர். இதே வழிபாட்டுமுறை தற்போது வேடர்களாக இனம்மாறிய தம்பபன்னையாரிடமும் உண்டு. இலை குழைகளால் பந்தலிட்டுத் தேனுடன் உடும்பு, பன்றி, மான் ஆகியவற்றின் மாமிசத்தைப் படைத்து நடனமாடித் தமது மூதாதையர்களின் ஆவியை அழைத்து உண்டு மகிழ்ந்து தமக்கு ஏதும் தீங்குகள் நேரிடாமல் காக்கும்படி பாடித்தொழுவர்.

## நாகர்

மட்டக்களப்பின் பூர்வீகக் குடிகளாக நாகர்கள் வாழ்ந்தமைக்கான வலுவான சான்றுகள் கிடைக்கின்றன. மிக அண்மைக்காலத்தில் மட்டக்களப்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் மூலம் பல இடங்களில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்கள், ஏனைய தொல்பொருட் சான்றுகளின் மூலம் இற்றைக்கு 2000ம் ஆண்டுகளுக்கு முற்பட்ட (பெருங்கற்படை) காலத்தில் நாகர்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. இவற்றில் உள்ள எழுத்துப் பொறிப்புக்களை ஆராய்ந்த சி.பத்மநாதன் ஆதி இரும்புக்காலப் பண்பாடான பெருங்கற்காலப் பண்பாட்டு மக்களின் ஒரு பகுதியினராக நாகர் வாழ்ந்தமை இதன் மூலம் தெளிவுபடுத்தப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.[13] மேலும், நாகர் தமிழ்மொழி பேசியவர்கள் என்பதும் அக்கல்வெட்டுக்களால் உறுதியாகின்றது.[14]

மண்டு நாகன் நாகரினத்தைச் சேர்ந்தவனென்றும், அவன் நாகர்முனையைத் தலைநகராகக் கொண்டு மட்டக்களப்பின் சிற்றரசனாக விளங்கினான் என்றும் அறியமுடிகின்றது.[15] வந்தாறுமூலை பலாச்சோலை வில்லுத்தோட்டத்தின் நிலப்பரப்பிலே நாகரின் பண்பாட்டுச் சின்னங்கள் காணப்பட்டன. சாசனம் எழுதிய தூண்கள், பெயர் எழுதிய செங்கற்கள், பெயர் எழுதிய ஈமத்தாழித் துண்டங்கள், கலவோடு எனப் பலவகையான சின்னங்கள் அண்மைக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றிலே 'வேள் ணாகன்', 'வேள் கண்ணன்', 'வேள் நாகன் பள்ளி' முதலிய வாசகங்களைக் காணமுடியும்.[16] இச்செங்கற்கள் மணிநாகனுடைய கோயிலைக் கட்டுவதற்குப் பயன்படுத்தியவையாகும். இதன் மூலம் நாகர்கள் அக்காலத்தில் கோயில் அமைத்து வழிபாடு நிகழ்த்தியமை தெளிவாகின்றது.

மட்டக்களப்பில் உள்ள பழம்பெரும் கிராமமான பழுகாமத்தில் தமிழ்ப் பிராமி எழுத்துப் பொறித்த தொல்லியற் சின்னங்கள் பல கள ஆய்வின்போது எம்மால் கண்டுபிடிக்கப்பட்டன. பாதச்சுவடுகள், வழிபாட்டுச்சின்னங்கள், கற்பலகைகள், தூண்தாங்கு கற்கள், குதிரையின் வடிவம் பொறிக்கப்பட்ட தூண் என அவை பல்வகைப்படும். இவற்றிலும் 'மணிநாகன்', 'வேள்ணாகன்', 'வேள்ணாகன் மகன் வேள்கண்ணன்' முதலிய வாசகங்கள் காணப்படுகின்றன.[17]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், களுவாஞ்சிக்குடியில் அமைந்திருக்கும் கண்ணகி அம்மன் கோயிலில் உள்ள நாக சிற்பம் 2000 ஆண்டுகளுக்கு முற்பற்பட்ட பழமையுடையது. அதில் 'மணிநாகன் பள்ளி' என எழுதப்பட்டிருக்கின்றது. இது பூர்வீக காலத்து நாகர்களின் வழிபாட்டுத் தலம் ஒன்றிலே இருந்ததாகச் சி. பத்மநாதன் குறிப்பிட்டுள்ளார்.[18] இதே போன்று மட்டக்களப்பின் வெல்லாவெளிப் பிரதேசத்தில் ஒரே இடத்தில் நாகரோடு தொடர்புடைய 10 கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அவை எல்லாவற்றிலும் பாம்புகளின் படைகள் மிகவும் நுட்பமான முறையில் செதுக்கப்பட்டுள்ளன.[19]

மண்முனை மேற்குப் பிரதேசத்தின் மேற்கு எல்லையில் காணப்படும் 'குசலன் கந்த' என்னும் மலையில் பிராமி எழுத்துப் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை நாக அபய, திச, உதி, காமினி முதலிய சொற்களைக் கொண்டுள்ளன.[20] மேலும், கொத்தியாபுலை என்னுமிடத்தில் கண்டெடுக்கப்பட்ட நாக சிற்பமும் அதனுடன் இருந்த கைப்பிடி (கருங்கல்) சுவரும் இப்பிரதேசத்தில் நிலவிய நாக வழிபாட்டுக்குச் சான்றாகின்றன. இவை தற்போது மட்டக்களப்புக் கச்சேரியில் உள்ள அரும்பொருட் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.[21]

இன்று மட்டக்களப்பின் மண்முனை தென்மேற்குப் பிரதேசத்தில் புகழ்பெற்று விளங்கும் பண்டாரியாவெளி நாகதம்பிரான் ஆலயம் ஓர் பழமைமிக்க தலமாகும். கி.பி.4ஆம் நூற்றாண்டிலிருந்து இவ்வாலயத்தில் நாக வழிபாடு இடம்பெற்று வந்துள்ளதாக இங்கு பெறப்படும் வாய்மொழி மரபுகள் தெரிவிக்கின்றன. இது நாக வழிபாட்டின் நீட்சியைக் காட்டுகின்றது.

**வேடர்**

மட்டக்களப்பில் பூர்வீக சமூகத்தினர் என அடையாளப்படுத்தப்படும் மற்றுமொரு பிரிவினரே வேடர்களாவர். ஈழத்தின் ஆதிக்குடிகளான இவர்கள் மகியங்கணையை அடுத்த விந்தனை எனும் இடத்திலும், மட்டக்களப்பு வாழைச்சேனையை அண்மித்த களுவன்கேணியிலும், அம்பாறையை அடுத்த தம்பானை எனும் இடத்திலும் வாழ்ந்து வந்தனர். இவர்கள் தமக்கெனச் சில தெய்வங்களையும், வணக்க முறைகளையும் கொண்டிருந்திருக்க வேண்டும் என்பதை இன்றும் மட்டக்களப்புப் பகுதியில் வாழும் வேடர், வேட வெள்ளாளர் எனப்படும் சாதியினரிடம் காணப்படுகின்ற தெய்வங்களையும் வணக்கமுறைகளையும் கொண்டு அறிய முடிகின்றது. குமாரர், உத்தியாக்கள், மாறா, வதனமார், பணிக்கம், பணிக்கமாறா, தெவுத்தன், பத்தினியம்மன் போன்ற தெய்வங்களை இன்றும் இவர்கள் வழிபட்டு வருவதை அவதானிக்கலாம்.[22] பல தெய்வங்கள் வழிபடப்பட்டாலும் குமாரதெய்வ வழிபாடே இவர்களது குலதெய்வ வழிபாடாக மிக நீண்ட காலமாக இடம் பெற்று வந்திருக்கின்றது.

அம்பாறை, திருக்கோயில், மகாஓயா, உறுகாமம், உன்னிச்சை, சிப்பிமடு, களுவங்கேணி, பனிச்சங்கேணி, வாகரை, கதிரவெளி முதலிய பூர்வீக இடங்களில் வேடர்கள் இன்றும் நிரந்தரக் குடிகளாக வாழ்கின்றனர். இதனால் மட்டக்களப்பு கற்கால மனிதர் வாழ்ந்த இடமாகக் காணப்பட்டது என்பது உறுதியாகின்றது. இது மட்டக்களப்பின் தமிழர் தொன்மையைத் தெளிவாகக் காட்டுகின்றது. மட்டக்களப்புப் பிரதேசத்தில் முறையான அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்படாதது துரதிஷ்டமே. அகழ்வாராய்ச்சிகள் செய்யப்படின் மட்டக்களப்புத் தமிழர்களது பண்பாடு, நாகரிகம், சமயம் தொடர்பான தொன்மையை மேலும் அறிய முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்புப் பிரதேசத்தின் எல்லாப் பகுதிகளிலும் வேடுவர்களின் வாழ்விடங்கள் பற்றிய தகவல்களும் தடயங்களும் ஐயத்துக்கு இடமின்றி வெளிப்படுகின்றன. இப்பிரதேச ஆலய நடைமுறைகளிலும் வழிபாட்டு மரபிலும் வேடுவர்களின் வழக்காறுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. மட்டக்களப்பில் திருப்படைக் கோயில்கள் என்று சிறப்பிக்கப்படும் திருக்கோயில், மண்டூர், வெருகல், சித்தாண்டி முதலிய இடங்களில் உள்ள ஆலயங்களின் வரலாற்றுத் தொடக்க நிலை வேடுவர்களைக் கொண்டே முன்னெடுக்கப்படுகின்றது. மட்டக்களப்பில் உள்ள பழமைமிக்க சிவத்தலங்களாகிய கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரர் ஆலயம், மாமாங்கேஸ்வரர் ஆலயம் ஆகியவற்றின் தோற்றம் பழங்குடிகளான வேடுவர்களுடன் இணைத்துக் கூறப்பட்டுள்ளமையினால் இவை கி.மு. 3ஆம் நூற்றாண்டு காலப்பகுதியைச் சேர்ந்தவையாக இருக்கலாம் என சி.க.சிற்றம்பலம் குறிப்பிடுகின்ற கருத்தும்[23] இதனோடு பொருத்திப் பார்க்கக்கூடியதாக உள்ளது.

எனவே இயக்கர், நாகர் என்போரும் இவர்களுக்கு அடுத்த நிலையில் இன்றும் சில இடங்களில் வாழ்வோரான வேடரும் இன்றைய மட்டக்களப்பின் பூர்வீகக் குடிகள் என்பதோடு அவர்கள் இந்துசமய மரபுகளைப் பின்பற்றி வாழ்ந்துள்ளனர் என்பதும் இதன் மூலமாக வெளிப்படுத்தப்படுகின்றது.

### அடிக்குறிப்புகள்

1. வெல்லவூர்க்கோபால், 2005, **மட்டக்களப்பு வரலாறு**, ப.16
2. சி.மௌனகுரு, 2014, **மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்**, ப.75
3. Tylor,E.B, "Reseachers in to the Early History of Mankind, 1865" "Primitive Culture, 1871."
4. வெல்லவூர்க்கோபால், 2005, மு.கு.நூ, ப.45
5. சி.க.சிற்றம்பலம், 1996, **ஈழத்து இந்து சமய வரலாறு**, ப.47
6. க.மகேஸ்வரலிங்கம், 2008, **மட்டக்களப்பு வாழ்வும் வழிபாடும்**, ப.34
7. மேலது, ப.34
8. கு.தனபாக்கியம், 1993, **மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி**, ப.168
9. க.தங்கேஸ்வரி, 2007, **கிழக்கிலங்கை பூர்விக வரலாறு**, ப.142
10. S.O.Canagaratnam, 2015, **Monograph of the Batticaloa District**, p.11
11. வெல்லவூர்க்கோபால், 2007, **மலையாள நாடும் மட்டக்களப்பும்**, ப.39.(2007)
12. தா.செல்வராசகோபால், 2005, **மட்டக்களப்பு மாநிலத்தின் பண்டைய வரலாற்று அடிச்சுவடுகள்**, ப.205
13. சி.பத்மநாதன, 2015, "மட்டக்களப்பில் நாகரின் பண்பாட்டுச் சின்னங்கள்", **மொழிதல்**, ப.27.
14. சி.பத்மநாதன், 2016, **இலங்கைத் தமிழர் வரலாறு**, ப.xv. (2016)
15. சா.தில்லைநாதன், 2015, **மட்டக்களப்புத் தமிழர் பண்பாட்டு மரபுகள்**, ப.34
16. சி.பத்மநாதன், 2015, மு.கு.நூ, ப.22
17. ஆய்வாளரால் கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருட்கள் புகைப்படமெடுக்கப்பட்டு வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்களிடம் காண்பித்தபோது அவரால் 28.10.2017 அன்று வாசித்துக் கூறப்பட்டது.
18. சி.பத்மநாதன், 2015, மு.கு.நூ, ப.22
19. மேலது, ப.19
20. க.தங்கேஸ்வரி, 2007, மு.கு.நூ, ப.124
21. மேலது, ப.124
22. மௌனகுரு,சி., 2014, மு.கு.நூ, ப.55
23. சி.க.சிற்றம்பலம், 1996, மு.கு.நூ, ப.151



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவிக்கப்படும் கலைஞர்கள்



முழுப்பெயர் – தம்பிராசா அருளானந்தம்
முகவரி – விளாவட்டுவான், நாவற்காடு
பிறந்த திகதி – 1946.12.03
துறை – தோல் வாத்தியம்
கிரமசேவகர் பிரிவு – விளாவட்டவான்
கல்வித்தகமை – 8ம் வகுப்பு

இவர் விளாவட்டவானை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர் மேற்படி விலாசத்தில் வசிக்கும் தம்பிராசா அருளானந்தம் என்பவர் தோல் வாத்திய கலைஞராவார் எமது கிராமங்களில் நடைபெறும் கோயில் திருவிழாக்களுக்கு மத்தளம், தவில், சொர்ணாழி போன்றவற்றினை வாசித்து வருகின்றார். இவர் திருவிழாக்கள் மற்றும் பிரதேச கலை நிகழ்வுக்காக எமது கிராமத்தில் மட்டும்மன்றி வெளி கிராமங்களுக்கும் சென்று வாத்தியங்களை வாசித்து வருகின்றார். அன்னாரின் சேவையினை பாராட்டி மண்முனை மேற்கு கலாசாரப் பேரவை கலைஞர் கௌரவத்தினை வழங்கி கௌரவிக்கின்றது.



முழுப்பெயர் – ஐயாத்துரை இரத்தினசிங்கம்
முகவரி – வள்ளுவர் வீதி, கரவெட்டி, நாவற்காடு
பிறந்ததிகதி – 1950.10.04
துறை – அண்ணாவியார்
கிரமசேவகர் பிரிவு – கரவெட்டி
கல்வித்தகமை – தரம் 2 வரை

கரவெட்டியை பிறப்பிடமாக கொண்ட திரு.ஐயாத்துறை இரத்தினசிங்கம் சிறந்த வடமோடி, தென்மோடிக் கூத்துக்களுக்கு மத்தள வாத்தியம் வாசிப்பவர் ஆவார். இவர் வடமோடிக்காண மத்தள வாத்தியத்தினை கரவெட்டி பிரபல அண்ணாவியார் குழந்தைவேல் அண்ணாவியிடமும், தென்மோடிக் கூத்துக்களுக்கான மத்தளவாத்தியத்தினை முறையாக கரவெட்டியை சேர்ந்த பிரபல அண்ணாவியார் அரசரெட்னம் அவர்களிடமும் முறையாகப் பயின்றார். இவர் தனது இருபது வயதிலிருந்து இக் கூத்துக் கலையில் ஆர்வம் மிக்கவராகக் திகழ்ந்து வருகின்றார்.
இவரால் பழக்கப்பட்ட கூத்துக்களில் புவனேந்திரன் நாடகம், சாரங்க நாடகம், தென்மோடி குருக்ஷேத்திரபோர், வடமோடி வானவீமன் நாடகம், வடமோடி பூதத்தம்பி நாடகம் என்பன இவரால் ஆடப்பட்ட கூத்துக்களாகும் .
காவியங்களுக்கு தவில் வாசித்தல், மிருதங்கம் வாசித்தல், போன்ற வாத்தியங்களை மேற்கொண்டு வருகின்றார். அன்னாரின் சேவையினை பாராட்டி மண்முனை மேற்கு கலாசாரப் பேரவை கலைஞர் கௌரவத்தினை வழங்கி கௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**முழுப்பெயர் – கணபதிப்பிள்ளை மாணிக்கப்போடி**
**முகவரி – மண்டபத்தடி, கன்னன்குடா**
**பிறந்ததிகதி – 1955.04.02**
**துறை – சோதிடம்**
**கிரமசேவகர் பிரிவு – மண்டபத்தடி**
**கல்வித்தகமை – க.பொ.த. சாதாரணம்**

இவர் கன்னங்குடாவை பிறப்பிடமாகவும் மண்டபத்தடியை வசிப்பிடமாகவும் கொண்ட இவர் மட்/கன்னன்குடா மகா வித்தியாலையத்தில் கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீச்சையில் தேர்ச்சி பெற்றிருக்கின்றார். இவர் சோதிடக் கலையில் சிறந்து விளங்குவதோடு வெற்றிலை பார்த்தல், ஜாதகம் கணித்தல், நிலையம் எடுத்தல், கெடுதி சொல்லுதல் பொருத்தம் பார்த்தல், போன்ற செயற்பாடுகளை முப்பது வருடமாக மேற்கொண்டு வருகிறார். இவருற்கு இக்கலையினை இவரது அப்பாவாகிய பிரபல சோதிடக்கலைஞர் விநாயகமூர்த்தி என்பவா–டமிருந்து இக்கலையினை முறையாகப் பயின்று தற்போது வரை சிறப்பாக மேற்கொண்டு வருகிறார்.

இவர் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச்சங்கத்தின் செயலாளராக 2 வருடங்கள் சேவையாற்றியதோடு கன்னன்குடா இந்து சமய அபிவிருத்திச்சங்கத்தில் 5 வருட காலமாக பொருளாளராக கடமையாற்றியுள்ளார் மண்டபத்தடி கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினராகவும் முதியோர் சங்க உறுப்பினராகவும் இருந்து பல பொதுப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார்.

அன்னாரின் சேவையை கருத்தில் கொண்டு மண்முனை மேற்கு கலாசாரப் பேரவை கலைஞர் கௌரவத்தினை வழங்கி வைக்கின்றது.



**முழுப்பெயர் – பாலிப்போடி தருமலிங்கம்**
**முகவரி – இல.69/1 மண்டபத்தடி, கன்னன்குடா**
**பிறந்ததிகதி – 1956.02.03**
**துறை – வாய்மொழிப் பாடகர்**
**கிரமசேவகர் பிரிவு – மண்டபத்தடி–149C**
**கல்வித்தகமை – தரம் 5 வரை**

இவர் கன்னன்குடாவைப் பிறப்பிடமாகவும் மண்டபத்தடியை வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் காவடிப்பாடல்கள், சிந்து, திருப்புகழ், வைகுத்த அம்மானை, தாலாட்டு, திருமந்திரப் பாடல்கள் பேன்றவற்றினை ஆலய உற்சவங்கள் மற்றும் மரணவீடுகளில் தொடர்ந்தும் படித்து வருகின்றார். அத்தோடு காவடிச்சிந்து, கதிரமலை சிந்து, காவியம், தேவாரம் போன்றவற்றினையும் பாடி வருகின்றார்.

அத்தோடு இவர் சிறந்த கூத்துக் கலைஞரும் ஆவார். இவரின் முதலாவது கூத்தாக பவளக்கொடி நாடகம் வடமோடிக் கூத்திலே துரோபதியாக ஆடியுள்ளார். அதனைத்தொடர்ந்து பல கூத்துக்களில் ஈடுபட்டுள்ளார். இவர் பாஞ்சாலி சபதம், நொண்டி நாடகம், சாரங்க தரன், அர்ச்சுனன் காண்டாவனம், சத்தியவான் சாவத்திரி போன்ற கூத்துக்களில் சிறந்த கூத்தராக ஆடிய இவர் கூத்துப்பழகுகின்ற இடங்களுக்குச் சென்று தன்னால் முடிந்த பல உதவிகளையும் மேற் கொண்டு வருகின்றார்.

இவருடைய சேவையினைப் பாராட்டி மண்டபத்தடி மலைமகள் கலைகழகம் 2015 ஆம் சாதனையாளர் விருது வழங்கி கௌரவித்துள்ளது. விசேட தேவை உடையோர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்பகத்தின் உறுப்பினராக இருந்து வருகின்றார். அத்தோடு கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்திலும் உறுப்பினராக இருந்து தனது சமுகபணியினை மேற் கொண்டுவருகின்றார்.

இவர் கன்னங்குடாவைச் சேர்ந்த செல்லமுத்து என்பவரினதும் மாணிக்கபோடி என்பவரின் வழிகாட்லின் கீழ் இக் கலைகளினை பயின்று தற்போது மேற்கொண்டு வருகின்றார். சுமார் 20 வருடங்களிற்கு மேலாக இத்துறையில் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடதக்க விடையம்மாகும். இவருடைய சேவையினை பாராட்டி மண்முனை மேற்கு கலாசாரப் பேரவை கலைஞர் கௌரவத்தினை வழங்கி கௌரவிக்கின்றது.



**முழுப்பெயர் – அமரசிங்கம் தம்பித்துரை**
**முகவரி – களிமடு, கன்னங்குடா.**
**பிறந்ததிகதி – 1966.06.09**
**துறை – மாந்திரிகம் (பூசகர்)**
**கிராமசேவகர் பரிவு – குறிஞ்சாமுனை**
**கல்வி தகமை – தரம் 02**

இவர் முதலைக்குடாவினைப் பிறப்பிடமாகவும் தற்போது களிமடுவினை வசிப்பிடமாகவும் கொண்டவர். இவர் பாவற்கொடிச்சேனை மாரியம்மன் கோயில், பத்தரக்கட்டைகாளி கோயில், ஊத்துமடுகாளி கோயில், ஊராண்டகுளம் விநாயகர் கோயில், கண்ணகி நகர் முருகன் கோயில், காந்தி நகர் முருகன் கோயில், முதலைக்குடா காளி கோயில் போன்றவற்றில் 25 வருடங்களுக்கு மேலாக சடங்கு முறையாக பூசைகளைச் மேற்கொண்டு வருகின்றார்.

இவர் பழுகாமத்தினைச் சேர்ந்த சின்னத்தம்பி குருக்களிடம்மிருந்து மந்திர விடயங்களை முறையறப் பயின்ற பின்னர் மாந்திரிகம், சடங்கு முறைகள் மற்றும் பல விடையங்களை மிகவும் சிறப்பாக மேற்கொண்டு வருகின்றார். அத்தோடு பேயோட்டல், பில்லி பிசாசுகளை விலக்குதல், மருத்துவ விடயங்கள், மனிதனால் செய்யப்பட்ட வினைகள் போன்றவற்றினையும் அகற்றி வருகின்றார். அத்தோடு பூதவைத்தியங்களையும், இயந்திரம் போடுதல், நூல் கட்டுதல், வளவு காவல் பண்ணுதல் போன்ற மந்திரம் சார்ந்த விடையங்களையும் மேற்கொள்வதோடு திருநீறு போடுதல், தண்ணீர் ஓதுதல், ஆகியவற்றினையும் திறம்படச் செய்கின்றார் மேலும் வயற்காணிகளில் விளைவுக்காகச் செய்தல், மிருகங்களிற்கான மாந்திரிக முறைகள், பிள்ளை வைத்தியம் ஆகியவற்றினையும் செய்து வருகின்றார்.

இவரின் சேவையினைப் பாராட்டி பத்திரக்கட்டைகாளி கோயிலிலும், ஊத்துமடு காளி கோயிலிலும் கௌரவிக்கப்பட்டிருக்கின்றார். இவருடைய சேவையினை பாராட்டி மண்முனை மேற்கு பிரதேச கலாசாரப் பேரவைகௌரவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இளம்கலைஞர்**



முழுப்பெயர்– அழகுதுரை ரகு
முகவரி – விளாவட்டவான், நாவற்காடு
பிறந்ததிகதி – 1984.08.06
துறை – பல்துறை
கிரமசேவகர் பிரிவு – விளாவட்டவான்
கல்வித்தகமை – G .C. E O/L

இவர் விளாவட்டவானைப் பிறப்பிடமாக கொண்டவர் நாவற்காடு/ நாமகள் வித்தியாலயத்தில் கல்வி பொது சாதாரணம் வரை கல்வி கற்றுள்ளார். மேலும் இவர் கலைத்துறையில் ஆர்வம் கொண்டதனால் தோல் வாத்தியம், சிற்பம், ஓவியம் போன்ற துறைகளில் தேர்ச்சிபெற்றுள்ளார். இவர் தனது தந்தையிடமும், மா. ஞானசெல்வம் என்பவர்களிடம் வடமோடி, தென்மோடி கூத்துகளுக்கு தோல்வாத்தியக்கருவி வாசிப்பதை கற்றுகொண்டு உள்ளார். மேலும் சிற்பக்கலை, ஓவியம், போன்ற கலைகளை யோ.மகேஸ்வரன் என்பவரிடம் இருந்து கற்றுகொண்டுள்ளார். இவர் பல கோயில்களில் சிற்பம், ஓவியம் போன்றவற்றை செய்துள்ளார். அதுமட்டும் இன்றி இவர் பஞ்சபுராண பாடல்கள், காவியப்பாடல்கள், தலாட்டுப்பாடல்கள், பட்டினத்தார் பாடல்கள், வைகுந்தஅம்மானை போன்ற பாடல்களை கோயில்களில் பாடியுள்ளார். இவர் பயின்ற கலையினை ஏனைய கலைஞர்களுக்கு கற்றுக்கொடுத்து வருகின்றார். இவருடைய சேவையினை பாராட்டி மண்முனை மேற்கு கலாசாரப்பேரவை இளம்கலைஞர் கெளரவத்தினை வழங்கிவைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்முனை மேற்கு பிரதேச மட்ட இலக்கிய விழா -2019
## இலக்கியப் போட்டி பெறுபேறுகள்
## பிரதேச செயலக பிரிவு : மண்முனை மேற்கு
## மொழி மூலம் : தமிழ்

### பாலர் பிரிவு

**கையெழுத்துப் போட்டி**

1ம் இடம் - **அருணன் அகனிதா** - மட்/ மமே/ கன்னன்குடா கண்ணகி வித்தியாலயம்
"தாமரை இலைத் தண்ணீர் போல"

2ம் இடம் - **ஜஜிதரன் பவிக்ஷா** - மட்/ மமே/ மண்டபத்தடி அ.த.க பாடசாலை
"அழகிய வண்ணத்திப்பூச்சி"

3ம் இடம் - **கருணாகரன் சாணுஜா** மட்/ மமே/ மண்டபத்தடி அ.த.க பாடசாலை
"அழகிய வண்ணத்திப்பூச்சி"

### சிறுவர் பிரிவு

**கையெழுத்துப் போட்டி**

1ம் இடம் - **குமாரசிங்கம் சதுசிக்கா** - மட்/ மமே/ மண்டபத்தடி அ.த.க பாடசாலை
"நாம் சென்ற கல்வி சுற்றுலா"

2ம் இடம் - **முரளிதரன் ரஜீர்த்தனி** - மட்/ மமே/ மண்டபத்தடி அ.த.க பாடசாலை
"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது அன்றே மறப்பது நன்று"

3ம் இடம் - **காசிநாதன் லுபர்ணா** - மட்/ மமே/ விளாவட்டுவான் விநாயகர் வித்தியாலயம்
"எட்டுக்கோடு விளையாடுவோம்"

**கவிதை பாடல் போட்டி**

1ம் இடம் - **நடராஜா நவநீதன்** - மட்/ மமே/ மங்கிகட்டு அ.த.க பாடசாலை
"நாட்டார் பாடல்"

2ம் இடம் - **ஜி.ஜினோசா** - மட்/ மமே/ குறிஞ்சாமுனை அ.த.க பாடசாலை
"நாட்டார் பாடல்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்முனை மேற்கு பிரதேச மட்ட இலக்கிய விழா -2019
## இலக்கியப் போட்டி பெறுபேறுகள்
## பிரதேச செயலக பிரிவு : மண்முனை மேற்கு
## மொழி மூலம் : தமிழ்

### கனிஸ்ட பிரிவு

### கட்டுரை போட்டி

1ம் இடம் - **ஜெயசந்திரன் லேனுஜா**
மட்/ மமே/ ஈச்சந்தீவு இராமகிருஷ்ணா அ.த.க பாடசாலை
அமைதியான, ஒழுக்கமான சிறந்த மனிதனை கொண்ட தேசத்தை கட்டியெழுப்பும் இலக்கியம் மற்றும் கலை

2ம் இடம் - **சிவானந்தராசா சித்தார்த்**
மட்/ மமே/ விளாவட்டுவன் விநாயகர் வித்தியாலயம்
அமைதியான, ஒழுக்கமான சிறந்த மனிதனை கொண்ட தேசத்தை கட்டியெழுப்பும் இலக்கியம் மற்றும் கலை

3ம் இடம் - **விக்னேஸ்வரன் சாணுஜா**
மட்/ மமே/ காயான்மடு அ.த.க பாடசாலை
அமைதியான, ஒழுக்கமான சிறந்த மனிதனை கொண்ட தேசத்தை கட்டியெழுப்பும் இலக்கியம் மற்றும் கலை

### கவிதை பாடல் போட்டி

1ம் இடம் - **சந்திரமோகன் தனஞ்செயன்**
மட்/ மமே/ நாவற்காடு நாமகள் வித்தியாலயம்
நாட்டார் பாடல்

2ம் இடம் - **சஜோனிக்கா சிவலோகநாதன்**
மட்/ மமே/ நாவற்காடு நாமகள் வித்தியாலயம்
நாட்டார் பாடல்

3ம் இடம் - **கர்ணியா கணேஸ்**
மட்/ மமே/ நாவற்காடு நாமகள் வித்தியாலயம்
நாட்டார் பாடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்முனை மேற்கு பிரதேச மட்ட இலக்கிய விழா -2019
## இலக்கியப் போட்டி பெறுபேறுகள்
## பிரதேச செயலக பிரிவு : மண்முனை மேற்கு
## மொழி மூலம் : தமிழ்

### சிரேஸ்ட பிரிவு

#### கட்டுரை போட்டி

*1ம் இடம் -* **கணேசலிங்கம் விதுக்ஷியா**
மட்/ மமே/ வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலயம்
அமைதியான, ஒழுக்கமான சிறந்த மனிதனை கொண்ட தேசத்தை கட்டியெழுப்பும் இலக்கியம் மற்றும் கலை

#### நாடகப் பிரதிப் போட்டி

*1ம் இடம் -* **மோகன் விதுசினி**
மட்/ மமே/ நாவற்காடு நாமகள் வித்தியாலயம்
"ஒற்றுமையுடன் இருப்போம்"

### திறந்த பிரிவு

#### பாடல் ஆக்கப் போட்டி

*1ம் இடம் -* **திரு.கந்தையா ரெட்ணையா**
கன்னன்குடா-02, கன்னன்குடா
"உழவுத்தொழிலின் மகிமை"

*2ம் இடம் -* **திரு.சதாசிவம் சதீஸ்**
மகிழவட்டவான், ஆயித்தியமலை
"விவசாயி"

*3ம் இடம் -* **திரு.கதிராமத்தம்பி மயில்வாகனம்**
கரவெட்டி, நாவற்காடு
"மத்தளம் சொல்லும் கதை"

*3ம் இடம் -* **கோபாலப்பிள்ளை ஜெயதீபா**
காசுபதி வீதிஇ நரிப்புல் தோட்டம்
"அடிமைப்பெண்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மண்முனை மேற்கு பிரதேச மட்ட இலக்கிய விழா -2019**

**இலக்கியப் போட்டி பெறுபேறுகள்**

**பிரதேச செயலக பிரிவு : மண்முனை மேற்கு**

**மொழி மூலம் : தமிழ்**

## Primary Section

### Hand writing Competition

1st Place - **Jeevakumar Kashwin**
Bt/MW/Vilawettuwan Vinayagar Vidyalayam
"My School"

2nd Place - **Sivashanthan Rujitha**
Bt/MW/Eechantheewu R.K.M.T.Vidyalayam
"Closs Room"

3rd Place - **Elayathamby Hanatheepan**
Bt/MW/Vilawettuwan Vinayagar Vidyalayam
"Give Me"

## Post – Primary Section

### Hand writing Competition

1st Place - **Mathanasekaram Mathumathi**
Bt/MW/Kanankudah Kannaki Vidyalayam

2nd Place - **Jajikaran Paviksha**
Bt/MW/Mandapathady G.T.M.S
"Listen and Enjoy"

3rd Place - **Tharmalingam Abikshana**
Bt/MW/Vilawettuwan Vinayagar Vidyalayam
"Canals"

## Junior Section

### Recitation Competition

1st Place - **P.Pranjivaoj**

2nd Place - **T.Tharsika**
Bt/MW/Mankikatu G.T.M.S

3rd Place - **P.Liluxshana**

3rd Place - **T.Tharsika**
Bt/MW/Mankikatu G.T.M.S



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலாசார விழா நிகழ்வில் சில துளிகள்



லக்சுமி டிஜிற்றல்
இல. 28, பார் வீதி, மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org